"அரசமைப்பு உரிமைகளைப் பண்பாடாக வளர்த்தெடுப்போம்!" என்ற முழக்கத்தோடு கடந்த மூன்று ஆண்டுகளாக வான்முகில் அமைப்பின் முன்முயற்சியால் தமிழகத்தில் 300-க்கும் மேற்பட்ட பள்ளிகளிலும், 17 மாவட்டங்களில் 150 இடங்களிலும் அரசமைப்பு உரிமைக் கல்வி முன்னெடுக்கப்பட்டுள்ளது. தமிழகம், புதுவை தவிர கர்நாடகம் மற்றும் ஒடிசா மாநிலங்களிலும் சுமார் 250 இடங்களில் இக்கல்வி கொண்டு செல்லப்படுகிறது. அரசமைப்பு உயர்த்திப்பிடிக்கும் உன்னத மதிப்பீடுகளை வாழ்நெறியாக்கும் நோக்கில் பலருடைய கூட்டு முயற்சியில் உருவாகியுள்ள மாபெரும் கனவு இது! இந்தியத் துணைக் கண்டத்தில் இப்படி ஒரு முயற்சி முன்னெடுக்கப்படுவது இதுவே முதன் முறையாகும்!

"இந்தியக் குடிமக்களாகிய நாம்" என்ற தலைப்பில் வெளிவந்த வண்ணமயமான இரண்டு பாடநூல்களைத் தொடர்ந்து, இப்போது நமது கரங்களில் தவழ்வது, வாண்டுகள் பயணம்! அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களில் அனைத்துக் குழந்தைகளும் முழுமையாகப் பங்கேற்கும் வகையில் விளையாட்டுகள், செய்முறைப் பயிற்சிகளோடு அமைந்த இந்த மூன்று பாடநூல்களும் குழந்தைகளுக்கு புதிய புதிய செய்திகளையும், சிந்தனைகளையும் கொடுக்கும்.

"வாண்டுகள் பயணம் என்ற பாடநூல் உண்மையான கல்வியைக் குழந்தைகளுக்குக் கொண்டு செல்கிறது. இன்று நமக்கு எவை மறுக்கப்பட்டிருக்கின்றதோ, நம்முடைய வகுப்பறைகளில் எவையெல்லாம் மறைக்கப்பட்டிருக்கின்றதோ, அந்தக் கல்வியை நாம் இன்றைக்கு இந்த அரசமைப்பு உரிமைக் கல்வி மூலம் வெளியிலே கொண்டு வருகிறோம்; அந்தக் கல்வியை வீதிகளிலே கொண்டு வந்திருக்கின்றோம்; சமுதாயங்களுக்கு கொண்டு செல்கின்றோம். நாம் தொலைத்துவிட்ட அரசியல் சாசன விழுமியங்களை மீட்டெடுப்பதற்கான மிகப் பெரிய ஒரு முயற்சியைத் தான் வான்முகில் அமைப்பு முன்னெடுத்துள்ளது"

**முனைவர் வே. வசந்தி தேவி**
மேனாள் துணைவேந்தர்,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்


வான்முகில்
திருநெல்வேலி

**வான்முகில்**
**அரசமைப்பு உரிமைக் கல்வி**
15, கவிதா நகர், மகாராசா நகர் அஞ்சல், திருநெல்வேலி
தொடர்பு கொள்ள : 94426 18117, 99943 68503
மின்னஞ்சல்: vaanmuhil@gmail.com




# வாண்டுகள் பயணம்

(மன்றக் குழந்தைகளுக்கான பாடநூல்)



**குழந்தைகளுக்கான**
**அரசமைப்பு உரிமைக் கல்வி**
**Constitutional Rights Education for Children**


வான்முகில்
திருநெல்வேலி

# இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரை

## Preamble to the Constitution of India

### இந்தியக் குடிமக்களாகிய நாம்

**இந்தியாவை இறையாண்மை கொண்ட, சமன்மைமிக்க, சமயச் சார்பற்ற, சனநாயக, குடியரசாக அமைப்பதென உறுதி பூண்டுள்ளோம்.**

**இதன் மூலம் அனைத்து குடிமக்களையும் பாதுகாப்பதுடன்**

- சமூக, பொருளாதார, அரசியலில் அனைவர்க்கும் நீதி
- எண்ணியதை வெளிப்படுத்த, எடுத்துச் சொல்ல, நம்பிக்கை வைக்க, உண்மையைச் சொல்ல, வழிபாடு செய்ய சுதந்திரம்
- தகுநிலையிலும், வாய்ப்பிலும் சமத்துவம் அளித்து உயர்வுறச் செய்தல்
- தனி மனிதர்களின் மாண்பு, நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றை உறுதிப்படுத்தும் சகோதரத்துவத்தோடு வாழ்வது என்று உறுதி பூண்டுள்ளோம்.

**இந்திய அரசமைப்புச் சட்டத்தை
1949ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 26ஆம் நாள்
நமது அரசியல் நிர்ணய அவையில்
ஏற்றுக்கொண்டு, இயற்றி,
நமக்கு நாமே வழங்குகிறோம்.**

### அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றக் குழந்தைகளுக்கான

# உறுதிமொழி

**அரசமைப்பு உரிமைக் கல்வி மன்ற உறுப்பினராகிய நான்,**

- இந்திய அரசமைப்பு உயர்த்திப் பிடிக்கும் சமத்துவம், சமூக நீதி, சமதர்மம், சனநாயகம், சமயச் சார்பின்மை, பன்மைத்துவம் போன்ற உன்னத மதிப்பீடுகளை உயிர் மூச்சாக மதிப்பேன்.
- சாதி, சமயம், இனம், நிறம், பாலினம், மொழி, பிறப்பிடம், தகுநிலை போன்ற எவற்றின் அடிப்படையிலும் யாரிடமும் ஒருபோதும் பாகுபாடு காட்டமாட்டேன்.
- 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, அனைவரோடும் சமமாகப் பழகுவேன்.
- எவ்வகையான சுரண்டலையும், ஆதிக்கத்தையும் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டேன்.
- எந்தச் சூழ்நிலையிலும் வன்முறையில் ஈடுபடமாட்டேன்.
- அரசமைப்பு உறுதிப்படுத்தும் தனிமனித உரிமைகள் உள்ளிட்ட பிற அடிப்படை மனித உரிமைகளை மதித்து நடப்பேன்.
- அரசமைப்பின்படி குடிமக்களுக்கு உள்ள அனைத்து கடமைகளையும் என்னளவில் உளப்பூர்வமாக நிறைவேற்றுவேன் என்று நான் உறுதி கூறுகிறேன்.

**குழந்தைகளுக்கான
அரசமைப்பு உரிமைக் கல்வி**

**Constitutional Rights Education Programme (CRE)**

# வாண்டுகள் பயணம்

(மன்றக் குழந்தைகளுக்கான பாடநூல்)

## குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வி

## Constitutional Rights Education for Children



வான்முகில்

15, கவிதா நகர், மகாராசா நகர் அஞ்சல்

திருநெல்வேலி - 627 011

பாடநூல் உருவாக்கம்
வழக்கறிஞர் ம. பிரிட்டோ
வழக்கறிஞர் கா. கணேசன்
முனைவர் லெ. பெர்னாட்

ஆலோசனை
முனைவர் இ. தேவசகாயம்

உதவி
க. பிரியா
அ. மாரியம்மாள்
ம. மாலதி

பதிப்பு
மார்ச் 2024

வடிவமைப்பு
சி. திருநாவுக்கரசு
கா. கணேசன்

அச்சாக்கம்
எழுத்துக் கலையகம், திருநெல்வேலி

வெளியீடு
**வான்முகில்**
15, கவிதா நகர், மகாராசா நகர் அஞ்சல்
திருநெல்வேலி - 627011
தமிழ்நாடு

தொடர்பு கொள்ள
94426 18117 | 99943 68503 | 99943 68523

# வாண்டுகளே, வாருங்கள்!

விளையாடுவோம், ஊரைச் சுற்றிப் பார்ப்போம்!

கொஞ்சம் படிப்போம்! விவாதிப்போம்! நிறைய கனவு காண்போம்!

“அரசமைப்பு உரிமைகளைப் பண்பாடாக வளர்த்தெடுப்போம்!” என்ற முழக்கத்தோடு கடந்த மூன்று ஆண்டுகளாக நமது வான்முகில் அமைப்பின் முன்முயற்சியால் தமிழகத்தில் 300-க்கும் மேற்பட்ட பள்ளிகளிலும், குழந்தைகள் மத்தியில் பணியாற்றும் பல அமைப்புகளோடு இணைந்து சுமார் 75 மன்ற நெறியாளர்களின் துணையோடு, 17 மாவட்டங்களில் 150 இடங்களிலும் உங்களைப் போன்ற ஆயிரக்கணக்கான குழந்தைகள் பங்கேற்கும் அரசமைப்பு உரிமைக் கல்வியை முன்னெடுத்துள்ளோம். தமிழ்நாடு, புதுச்சேரி தவிர கர்நாடகம் மற்றும் ஒடிசா மாநிலங்களிலும் சுமார் 250 இடங்களில் இக்கல்வி அம்மாநிலக் குழந்தைகளுக்கு கொண்டு செல்லப்படுகிறது.

இந்தியத் துணைக் கண்டத்தில் இப்படி ஒரு முயற்சி முன்னெடுக்கப்படுவது இதுவே முதன் முறையாகும்! இது ஒரு மாபெரும் கூட்டு முயற்சி! பலரும் பங்கேற்கும் ஒருங்கிணைந்த செயல்பாடு! குழந்தைகளாகிய உங்களுக்காக உருவாக்கப்பட்ட அருமையான திட்டம்! அரசமைப்பு உரிமைக் கல்வி என்ற அனுபவம் மிகவும் வித்தியாசமான ஒன்று! புதுமையானது! நமது அரசமைப்பு உயர்த்திப்பிடிக்கும் உன்னத மதிப்பீடுகளை வாழ்நெறியாக்கும் நோக்கில் பலருடைய கூட்டு முயற்சியில் உருவாகியுள்ள மாபெரும் கனவு இது!

“இந்தியக் குடிமக்களாகிய நாம்” என்ற தலைப்பில் வண்ணமயமான இரண்டு பாடநூல்களை இதுவரை வாசித்துப் புரிந்து கொண்ட அனுபவம் உங்களுக்கு கிடைத்த நல்வாய்ப்பு! நம் மன்றங்களில் உள்ள அனைத்துக் குழந்தைகளும் முழுமையாகப் பங்கேற்கும் வகையில் விளையாட்டுகள், செய்முறைப் பயிற்சிகளோடு அமைந்த இந்த இரு பாடநூல்களும் உங்களுக்கு புதிய புதிய செய்திகளை, சிந்தனைகளைக் கொடுத்திருக்கும்! அப்படித்தானே! அந்த வரிசையில் இப்போது வெளிவந்து நமது கரங்களில் தவழ்வது, இந்த வாண்டுகள் பயணம்!

உங்களைப் போன்ற எல்லா மன்றக் குழந்தைகளுக்காகவே திட்டமிட்டு நன்கு வடிவமைக்கப்பட்ட இந்தப் பாடநூல் இதற்கு முந்தைய இரு பாடநூல்களிலிருந்து கொஞ்சம் வேறுபட்டது! இதில் உள்ள எட்டுப் பாடங்களுமே உங்கள் பகுதியில் நீங்கள் மேற்கொள்ளும் சிறந்த கள அனுபவங்களாக அமையும். குழந்தைகளாகிய உங்கள் கண்களால் உங்களது ஊரைப் பார்க்கும்போது பல விவரங்கள் உங்களுக்குப் புரியும்!

நீங்கள் வசிக்கும் உங்கள் ஊரை சற்று மாறுபட்ட கோணத்தில் பார்க்கவும், கள அனுபவத்தில் நீங்கள் கண்டவற்றைத் தொகுக்கவும்,அறிக்கையாகத் தொகுத்தவற்றை உங்கள் மன்றங்களில் விவாதிக்கவும், விவாதித்ததில் எழுந்த சிலவற்றை நடைமுறைக்கு கொண்டு வரவும் இந்தப் பாடநூல் உங்களுக்கு பேருதவியாக அமையும்.

ஒவ்வொரு பாடத்திலும் நிறைய செய்முறைப் பயிற்சிகள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் நீங்கள் ஆர்வத்தோடு பங்கெடுக்கும் போது நன்கு கற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் நீங்கள் கனவுகள் காண்பதற்கென்றே சிறப்பான ஒரு பகுதி இடம் பெற்றுள்ளது. இந்தக் கனவுகள் புதிய திசைவழிகளை நோக்கி நம்மை இட்டுச் செல்லும். நாம் வாழும் உலகம் எப்படி இருக்க வேண்டும் என்ற கற்பனை விதைகளை நமக்குள் விதைத்து விட்டு செல்லும்.

சுதந்திர சிந்தனையை - சமத்துவ உணர்வை நமக்குள் உருவாக்கி மதவெறி இல்லாத, சாதி, மத பாகுபாடற்ற, சுரண்டலற்ற, ஏற்றத்தாழ்வு இல்லாத ஒரு சமூகத்தை - சுற்றுச்சூழல் சீர்கேடு இல்லாத உலகைப் படைக்க வேண்டும் என்ற எண்ணத்தை - ஏக்கப் பெருமூச்சை நமக்குள் இந்த பாடங்கள் ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

இந்திய அரசமைப்பு உறுதி செய்யும் சுதந்திரம், சமத்துவம், சனநாயகம், சகோதரத்துவம், மதச் சார்பின்மை, பன்மைத்துவம், தனிநபர் மாண்பு போன்ற பல்வேறு உயரிய மதிப்பீடுகளே இந்த பாடநூலின் அடிநாதம்! இம்மதிப்பீடுகளை நமது வாழ்க்கையில் நாம் ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டும் என்ற நோக்கில் உருவாக்கப்பட்டவையே இந்த எட்டுப் பாடங்களும்! அதோடு கூட உலகம் முழுவதிலும் இன்று பேசப்படும் "நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளின்" சாராம்சம் இந்த எட்டுப் பாடங்களிலும் இழையோடுகிறது. இந்த இலக்குகளுக்கு அடிப்படையான அகில உலக மனித உரிமைப் பிரகடனத்தின் மையக்கூறுகள் இப்பாடநூலின் மைய இழைகளாக ஆங்காங்கே மின்னுகின்றன.

"நலிவுற்ற மக்களையும் உள்ளடக்கிய அனைவருக்குமான வளர்ச்சியே முழுமையான வளர்ச்சி" என்ற புரிதல் நமக்குத் தேவைப்படுகிறது. இதையே 2015-ல் ஐ.நா.சபை உருவாக்கிய "நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள்" தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கின்றன. ஒவ்வொரு பாடத்திலும் அத்தலைப்பிற்குத் தொடர்புடைய பொருத்தமான "நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள்" ஒன்றிரண்டு இடம் பெறுகின்றன.

நமது தமிழ் இலக்கியங்கள் உயர்ந்தேத்தும் அறம் சார்ந்த சிந்தனைக் கூறுகள் இப்பாடங்களில் ஆங்காங்கே பளிச்சிடும்! இவை அனைத்தும் நம்மை வாசிக்க வைப்பதோடு, நன்கு ஆழமாக யோசிக்க வைக்கவும், நமக்குள் ஏன்? எதற்கு? எப்படி? என்ற கேள்விகளை எழுப்பவும், மாறுபட்டு விமர்சனப்பூர்வமாகச் சிந்திக்கவும் நம்மை அழைக்கிறது!

கள அனுபவங்கள் நமக்கு நிறைய படிப்பினையைத் தரும். நாம் வாழும் சமூகத்தை, நம்மைச் சுற்றி வசிக்கும் மனிதர்களைப் படிக்கவும், புரிந்து கொள்ளவும் இது ஒரு நல்ல வாய்ப்பு! நம் ஊரில் இருக்கும் வளங்களைத் தெரிந்து கொண்டு இன்னும் அவற்றை மேம்படுத்தவும், வளப்படுத்தவும் நாம் என்னென்ன செய்ய முடியும் என்ற விவாதங்களில் ஈடுபடவும், நம்மால் முடிந்த சிறு சிறு செயல்பாடுகளை முன்னெடுக்கவும் இது ஒரு நல்வாய்ப்பு!

பல்வேறு கோணங்களில் நமது ஊரைச் சுற்றிப் பார்த்துவிட்டு, நமக்குள் ஆயிரமாயிரம் கனவுகளைச் சுமந்து கொண்டு நமது எதிர்காலம் குறித்தும் தமிழகத்தின் எதிர்காலம் குறித்தும் சிந்திக்கவும், அசைபோடவும் இது ஒரு நல்ல வாயப்பு!

இவ்வளவு அருமையான பாடநூலை, நம்மை ஈர்க்கும் வகையில் உருவாக்கி, மிகச்சிறப்பாக வெளிக்கொணர உழைத்திட்ட அனைவரும் வாழ்த்துக்கும் பெருமைக்கும் உரியவர்கள்! இந்த பாடநூலுக்கு கருத்துக்களை வழங்கிய அரசமைப்பு உரிமைக் கல்வி பாடநூல் உருவாக்கக் குழுத் தலைவர் பேரா.இ.தேவசகாயம், இதற்கான வரைவை வழங்கிய முனைவர் எல்.பெர்னாட் இருவருக்கும் எனது உளமார்ந்த நன்றி!

அடுத்தடுத்த வரைவுகளில் இப்பாடநூலை மென்மேலும் செதுக்கிட என்னோடு பல வாரங்கள் உழைத்து இந்நூல் வடிவமைப்பில் அதிக நேரம் செலவிட்டு, அருமையாக வெளிவர பல நாட்கள் இரவு பகலாக உழைத்த வழக்கறிஞர் கா.கணேசன், "எழுத்துக் கலையகம்" திரு. சி. திருநாவுக்கரசு, இருவருக்கும் எவ்வளவு நன்றி கூறினாலும் தகும்! இக்குழுவிற்கு உதவியாய் இருந்த திருமிகு. க. பிரியா, திருமிகு. அ.மாரியம்மாள், திருமிகு. ம.மாலதி, திருமிகு.அ.லதா, திரு.செ.விஜயகுமார் ஆகியோருக்கும் உங்கள் சார்பாக நான் நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

எங்களுக்கு பல வகைகளில் ஆலோசனை வழங்கி, இந்த அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டத்திற்கு நல்ல வழிகாட்டியாகத் திகழும் தமிழகம் அறிந்த கல்வியாளரும், மேனாள் துணைவேந்தருமான முனைவர் வே. வசந்தி தேவி அவர்களுக்கு எமது நெஞ்சார்ந்த நன்றி. இந்தப் பாடநூலை வெகுவாகப் பாராட்டி எழுதி, இம்முயற்சிக்கு நல்லாதரவை வழங்கிய அவர்களுக்கு எமது நன்றி!

அரசமைப்பு உரிமைக் கல்வியைத் தமிழகம் முழுவதும் கொண்டு செல்லும் பல்வேறு அரசு சாரா அமைப்புகளின் இயக்குநர்கள், தொடர்பாளர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

திரு. அ. தேவநேயன், இயக்குநர், தோழமை (சென்னை)
திரு. P. விக்டர் ராஜ், இயக்குநர், ஹோப் நிறுவனம் (புதுவை)
திரு. J. முகம்மது உசேன் பாபு, இயக்குநர், இந்தோ அறக்கட்டளை (பெரம்பலூர்)
திரு. S. அண்ணாத்துரை, இயக்குநர், சைல்டு வாய்ஸ் (திண்டுக்கல்)
திரு. S. கருப்பசாமி, இயக்குநர், தமிழ்நாடு கிராம புனரமைப்பு இயக்கம் (இராமநாதபுரம்)
அருட்திரு. ரா.பி.சகேஷ் சந்தியா, இயக்குநர், தூண்டில் மாணவர் இயக்கம் (தூத்துக்குடி)
திரு. S.C. நடராஜன், இயக்குநர், சுடர் அறக்கட்டளை (ஈரோடு)
திரு. K.P. செந்தில்ராஜா, இயக்குநர், ரியல் பவுண்டேசன் (தருமபுரி)
திரு. C. இராமு, இயக்குநர், பவர் அறக்கட்டளை (சேலம்)

ஆகியோரை நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன்.

17 மாவட்டங்களிலும் அனைத்து மன்றங்களிலும் குழந்தைகளோடு ஆடிப்பாடி, ஓடி விளையாடி, மகிழ்ந்து, இக்கல்வியைக் முன்னெடுக்கும் மன்றத் தொடர்பாளர்கள், நெறியாளார்கள் அத்தனை பேரும் என்றும் பாராட்டுதலுக்கு உரியவர்கள்.

வாண்டுகளே! வாருங்கள், இப்போது நம் ஊரைச் சுற்றிப் பார்க்கப் போவோம்!

20.03.2024
திருநெல்வேலி

**ம. பிரிட்டோ**
**திட்ட இயக்குனர்**
**அரசமைப்பு உரிமைக் கல்வி**
**வான்முகில்**



# அரசமைப்பு உரிமைக் கல்வி

இந்திய அரசமைப்பு உரிமைகளை
வாழுந்தலைமுறையும்
வருங்காலத் தலைமுறையும்
கற்றுணரும் நோக்கில்
"அரசமைப்பு உரிமைக் கல்வி"யை
பள்ளிகளில், விடுதிகளில், சமூகத் தளத்தில்
நடவு செய்கிறோம்...
அறிவதிகாரத்தின்
நாற்றங்கால்களாய்!

இது வழக்கமான
வகுப்பறைக் கல்வி அல்ல...
வாழ்க்கைக் கல்வி!
சமூக சனநாயகத்தைப்
பொதுமைப்படுத்தும்
உரிமைசார் கல்வி!

## அரசியல் சாசன விழுமியங்களை மீட்டெடுப்பதற்கான மிகப் பெரும் முயற்சி!

வான்முகில் அமைப்பு முன்னெடுத்துள்ள அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டத்திற்கான முயற்சி என்பது சாதாரண முயற்சி அல்ல. இது பெருமளவிற்கு விரிவடைந்து, அனைவருக்கும் பயனளிக்கக்கூடிய, நமது சமுதாயத்தில் அரசியல் சாசனத்தின் அடிப்படை உரிமைகளை நிலை நிறுத்தக்கூடிய ஒரு பெரு முயற்சி! சுதந்திரம் பெற்று 75 ஆண்டுகளுக்குப் பிறகு தொடங்குகின்ற ஒரு புதிய முயற்சியாக இருக்கலாம். இது அரசின் முயற்சியாக மாறவேண்டும் என வலியுறுத்துகிறேன். 11 வயது முதல் 15 வயது வரை இருக்கின்ற குழந்தைகளுக்கு இளம் பருவத்திலேயே பல்வேறு வழிகளிலே, உண்மையை புரிந்து கொண்டு, உலகத்துடன் ஒன்றாகக் கூடிய அந்த வயதிலே அவர்களுக்கு அரசமைப்புக் கல்வியை கொண்டு செல்கின்றோம்.

வாண்டுகள் பயணம் என்ற பாடநூல் உண்மையான கல்வியைக் குழந்தைகளுக்குக் கொண்டு செல்கிறது. இன்று நமக்கு எவை மறுக்கப்பட்டிருக்கின்றதோ, நம்முடைய வகுப்பறைகளில் எவையெல்லாம் மறைக்கப்பட்டிருக்கின்றதோ, அந்தக் கல்வியை நாம் இன்றைக்கு இந்த அரசமைப்பு உரிமைக் கல்வி மூலம் வெளியிலே கொண்டு வருகிறோம்; அந்தக் கல்வியை வீதிகளிலே கொண்டு வந்திருக்கின்றோம். சமுதாயங்களுக்கு கொண்டு செல்கின்றோம்.

அனைவரும் ஒன்றாக இணைந்து தொலைத்துவிட்ட அரசியல் சாசன விழுமியங்களை மீட்டெடுப்பதற்கான மிகப் பெரிய ஒரு முயற்சியைத் தான் வான்முகில் அமைப்பு முன்னெடுத்துள்ளது. வகுப்பறைக் கல்வி எவ்வாறு இன்றைக்கு உண்மைக்கு திரைபோட்டு மறைக்கின்ற கல்வியாக மாறிவிட்டது என்பது நமக்குத் தெரியும். வகுப்பறைக் கல்வி என்பது பல்வேறு வகைகளிலே பெரும் குறைபட்ட ஒரு கல்வி. குழந்தைகளை கொடூரமான ஒரு உலகத்திற்கு கொண்டு செல்கின்ற கல்வியாகவே மாறிவிட்டது. ஏனென்றால் தங்களைப் பற்றி குழந்தைகள் புரிந்து கொள்ள முடியாது. அவர்களுடைய உலகத்தைப் பற்றி தெரிந்து கொள்ள இயலாத, அவர்களுடைய உலகத்தை மாற்றி புதிய உலகமாக - புத்தொளி பெறுகின்ற ஓர் உலகமாக மாற்றுவதற்கு பலனற்ற கல்வியாக இன்றைய வகுப்பறைக் கல்வி இருக்கிறது. அந்தக் கல்வியை வகுப்பறைகளில் இருந்து இன்று மீட்டெடுக்கும் ஒரு அருமையான முயற்சிதான் இது.

தாங்கள் வாழும் பகுதிகளிலேயே, தங்களுடைய வசிப்பிடங்களிலேயே இந்தக் குழந்தைகள் அரசமைப்பு உரிமைக் கல்வியைக் கற்கப் போகிறார்கள்! அதுவும் எப்பேற்பட்ட குழந்தைகள் இக்கல்வியைக் கற்கப் போகிறார்கள் என்றால், இந்த இயக்கத்திலே - இந்தப் பெரு முயற்சியிலே - இந்தத் திட்டத்திலே இணைந்துள்ள குழந்தைகள், பழங்குடியின, அருந்ததியினக் குழந்தைகள், மீனவக் குழந்தைகள், சிறுபான்மையினக் குழந்தைகள் பல்வேறு வகைகளில் உரிமைகளை எல்லாம் இழந்த குழந்தைகள், அந்தக் குழந்தைகள் தாங்கள் வசிக்கும் இடங்களிலேயே இந்த உரிமைப் பாடத்தை கற்கப் போகிறார்கள். தங்களுடைய இயற்கையான சூழலிலே இக்கல்வியைக் கற்கப் போகிறார்கள்.

கல்வி என்பது குழந்தைகளும், இளைஞர்களும் தங்களைப் பற்றிப் புரிந்து கொள்வதாகும். தங்கள் சமுதாயத்தைப் பற்றி புரிந்து கொள்வதும், தாங்கள் வசிக்கும்

சூழலின் பிரச்சனைகளைப் பற்றி புரிந்து கொள்வதுமாகும். அப்பிரச்சனைகளுக்கு தங்களுடைய அனுபவங்களின் வாயிலாகவே தீர்வு காண்பதற்கு முனைகின்ற ஒரு சனநாயகச் சமூகம்தான் இன்றைய தேவை. அப்படிப்பட்ட சனநாயகச் சமுதாயம் இந்தியாவிலே உள்ளதா?

இந்தியா சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகளுக்குப் பிறகு நமது அரசியல் சாசனத்தை அற்புதமாக வடிவமைத்துக் கொடுத்த மாமேதை அம்பேத்கர் அவர்களுடைய கனவினில் பிறந்த அந்த சனநாயக இந்தியாவை நாம் பார்க்கின்றோமா? இந்த இந்தியாவிலே எல்லா வகைப்பட்ட உரிமைகளும் மறுக்கப்படுகின்றன. உண்மையான சனநாயக நாட்டை உருவாக்க - இழந்த சனநாயகத்தையும், சனநாயகத்தின் ஆன்மாவான மனித உரிமைகளையும் எப்படி மீட்டெடுப்பது என்பதற்கான கல்விதான் இது!

இந்தப் பாடநூலிலே - வாண்டுகளினுடைய பயணத்தில், குழந்தைகளுக்கு மிக அருமையான பல பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள்ளன. குழந்தைகள் தங்கள் கிராமத்திலே பயணிக்கப் போகிறார்கள்; வீடு வீடாக பயணிக்க இருக்கிறார்கள்; தெருத் தெருவாக சுற்றுகிறார்கள். ஊரின் உண்மைகளை எல்லாம் கண்டறியப் போகிறார்கள். ஐக்கிய நாடுகள் சபையின் நிலைத்த, நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் எந்த அளவிற்கு தங்களுடைய கிராமங்களிலே, வீடுகளிலே, தங்கள் தெருக்களிலே உருவாகிக் கொண்டு இருக்கின்றன; பிறந்து கொண்டு இருக்கின்றனவா? அல்லது மறைந்து கொண்டு இருக்கின்றனவா? என்பதைப் பற்றிய ஆய்வுகளிலே குழந்தைகள் ஈடுபடப் போகிறார்கள்.

இந்தக் குழந்தைகளின் மூலமாக, அவர்களுடைய கண்கள் வழியே தரிசிக்கப்படுகின்ற கிராமங்கள், அவர்களின் கள்ளமற்ற கண்களின் ஊடாகத் தரிசிக்கப்படுகின்ற கிராமங்கள், அதில் இருந்து உருவாகின்ற உண்மைகள், அதில் இருந்து பிறக்கின்ற உண்மைகள், எவ்வளவு பெரிய சமூகப் பொருளாதார ஆய்வுகளாலும் அல்லது நிபுணத்துவம் கொண்டவர்களாலும் செய்ய முடியாது. பெரியவர்கள் கண்டுபிடிக்க முடியாத உண்மைகளை இக்குழந்தைகள் கண்டறிந்து நம் முன்னால் போட்டு உடைப்பார்கள். அதைத்தான் நாம் இங்கு எதிர்பார்க்கின்றோம். அதுதான் இக்கல்வி மூலம் நடக்கும். ஏனென்றால் குழந்தைகள் உண்மைகளைத் திரித்து சொல்பவர்கள் அல்லர்.

தங்களுடைய வாழ்க்கையை ஒவ்வொரு வீடாகச் சென்று ஒவ்வொன்றாக கேட்கப் போகிறார்கள். குழந்தைகள் எப்படிப் படிக்கிறார்கள்? எந்த வயது வரை படிக்கிறார்கள்? ஏன் பள்ளி இடைநிறுத்தம் ஏற்படுகின்றது? ஏன் இந்தக் குழந்தையினால் எதுவுமே புரிந்து கொள்ள முடியவில்லை? 8 ஆம் வகுப்பு முடித்தாலும் ஒன்றுமே வாசிக்க முடியவில்லையே? இந்த அவல நிலைக்கெல்லாம் காரணம் என்ன? தங்களுடைய கிராமங்களிலே வீடுகளில் இருக்கக்கூடிய பெண்களின் நிலை என்ன? அவர்களுக்கு என்ன உரிமைகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன? அந்த பெண்களின் சுமைகள் என்ன? சாதியம் நமது கிராமங்களில் வேர்விட்டுப் பரவியுள்ளது. சாதியத்தின் கொடூரம் எப்படி எல்லாம் தங்களுடைய வாழ்க்கையில் ஆட்டிப் படைக்கின்றது? இதையெல்லாம் குழந்தைகள் நேரில் பார்த்து, புரிந்து கொண்டு, கிராமத்துச் சூழலிலே, கிராமத்தின் மையத்திலே உட்கார்ந்து கொண்டு, இவற்றைப் பற்றி எல்லாம் பேசப் போகிறார்கள்; விவாதிக்கப் போகிறார்கள்; இவற்றிற்கெல்லாம் என்ன தீர்வு என்பதைப் பற்றி அந்தக் குழந்தைகள்

தங்களுக்குள் உரையாடல் நிகழ்த்தப் போகிறார்கள். அங்கு இருந்துதான் அந்த உண்மை பிறக்கும்.

அந்தக் கள்ளமில்லாத கண்கள்; அந்தக் கண்கள் வழியாக தரிசிக்கப்படுகின்ற கிராமங்கள். அந்த கண்கள் வழியாக தரிசிக்கப்படுகின்ற இந்திய உண்மை; தமிழ்நாட்டின் உண்மை. இது இன்றைக்கு உடைக்கப்படவேண்டும். அனைவரின் முன்னால் கொண்டு வந்து காண்பிக்கப்படவேண்டும். இங்கு இருந்துதான் தீர்வுகள் பிறக்கும்.

இன்று பள்ளிகளில் நடந்து கொண்டிருக்கின்ற கல்வி என்பது முழுக்க முழுக்க குழந்தைகளை அந்நியப்படுத்துகின்ற கல்வி; சமுதாயத்தில் இருந்து குழந்தைகளை வேருடன் பிடுங்கி எறிகின்ற கல்வி; தங்களுடைய உலகத்தை புரிந்து கொள்ள முடியாத ஒரு கல்வி; அந்நியப்படுத்துகின்ற இந்தக் கல்வியை மாற்றி, சமுதாயத்துடன் இந்தக் கல்வியை மாற்றி, குழந்தைகள் இணைகின்ற கல்வியாக மாற வேண்டும்.

இத்திட்டத்தில் இணையும் குழந்தைகள் ஆண்டாண்டு காலமாக - நூற்றாண்டு காலமாக உரிமைகள் மறுக்கப்பட்டவர்கள்; வஞ்சிக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் இன்றைக்கு இங்கு களம் இறங்கப் போகிறார்கள். அவர்கள் கண்கள் வழியாக இந்த உலகத்தை புரிந்து கொள்ளத் தொடங்குவோம். இதுதான் உண்மையான கல்வி! இந்தப் புதிய உலகைப் படைக்கின்ற அரசமைப்பு உரிமைக் கல்வி அந்த கள்ளமில்லாத குழந்தைகளின் கண்கள் வழியாக உண்மையைப் புரிந்து கொள்வோம். இன்றைய சமுதாயத்தில் நிலவும் உண்மையின் கொடூரத்தையும் புரிந்து கொள்வோம். அந்த உண்மையின் அநீதிகளைப் புரிந்து கொள்வோம். அந்த உண்மைகள் மறைக்கின்ற - மறுக்கின்ற உரிமைகளைப் புரிந்து கொண்டு, அதை மீட்டெடுக்கும் பெரும் சக்தியாக இந்தக் கல்வி அமையும்!

இந்தக் குழந்தைகள் வீதிவீதியாகப் பயணப்பட்டு வாண்டுகள் பயணத்திலே தாங்களாகவே கண்டு பிடிக்கட்டும்! அவர்கள் மிகப் பெரிய விஞ்ஞானிகளாக தங்களுடைய உலகத்தை கண்டெடுக்கட்டும்! அவர்கள் அந்த உலகத்தை மீட்டெடுத்து, அந்த பிஞ்சுக் கரங்களின் வழியாக, நாம் அந்தச் சக்தியை பெறுவோம்! உரிமைகள் மறுக்கப்பட்டவர்களுக்கும், உரிமைகளை இழந்து - அநீதிகளை அனுபவிக்கும் அனைவருக்குமே உரிமைகளைக் கொண்டு போய் சேர்க்கின்ற இப்பெருமுயற்சியை தொடருவோம்.

வான்முகில் தொடங்கும் இந்த மாபெரும் முயற்சிக்கு - விடுதலைக் கல்வி முயற்சிக்கு நாம் அனைவரும் துணை நிற்போம்! இதுதான் விடுதலை அளிக்கின்ற கல்வி; அந்த விடுதலைக்கான கல்வி உலகத்திலே இருக்கின்ற மிகச்சிறந்த கல்வியாளர்களான பவுலோ பிரையர் போன்றவர்கள் எல்லாம் கனவு கண்ட அந்தக் கல்வி, அம்பேத்கர் உருவாக்கிக் கொடுத்துள்ள அந்த அரசியல் சாசனக் கல்வியைக் காப்பாற்றுவோம் என்று கூறி, வான்முகில் அமைப்பு முன்னெடுத்துள்ள இந்த மகத்தான பணிக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**முனைவர் வே. வசந்தி தேவி**

மேனாள் துணை வேந்தர்

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | நம்ம ஊரைச் சுற்றிப் பார்க்கப் போறோம் | 01 |
| 2 | நலவாழ்வும் நமது பாதுகாப்பும் | 13 |
| 3 | அனைவருக்கும் கல்வி | 23 |
| 4 | தூய்மையும் சுகாதாரமும் | 33 |
| 5 | பாலின சமத்துவமும் சம பங்கேற்பும் | 41 |
| 6 | உள்ளாட்சி அமைப்புகளும் மக்கள் பிரதிநிதிகளும் | 55 |
| 7 | மக்கள் நலத் திட்டங்கள் | 67 |
| 8 | நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் - ஓர் அறிமுகம் | 81 |
| | அரசமைப்பு உரிமைக் கல்வி மன்ற விதிமுறைகளும், வழிகாட்டு நெறிமுறைகளும் | 93 |

# 1 நம்ம ஊரைச் சுற்றிப் பார்க்கப் போறோம்



உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு
- குறள் 734

## நோக்கங்கள்

1. நமது ஊரில் உள்ள அனைத்து வளங்கள் குறித்தும் தெரிந்து கொள்ளல்
2. நமது ஊரில் வசிக்கும் பல்வேறு தரப்பட்ட மக்களது வாழ்வு முறையை அறிந்து கொள்ளல்
3. நமது கள அனுபவத்தின் அடிப்படையில் நம் வசிப்பிடத்தை புதிய கோணத்தில் புரிந்து கொள்ளல்

## 1. அறிமுகம்

குழந்தைகளே!

நாம் பல ஊர்களுக்குச் சுற்றுலா சென்றிருப்போம். இவ்வூர்களில் பல இடங்களைப் பார்த்து மகிழ்ந்திருப்போம். இன்றும் நாம் சுற்றுலா செல்லப் போகிறோம். ஆனால் இந்தச் சுற்றுலாவில் நம் கிராமத்தை - நாம் வசிக்கும் பகுதியைத் தான் சுற்றிப் பார்க்கப் போகிறோம்!

## 2. என்னது சுற்றுலாவா?

ஆமா, நம் ஊரை இதுவரை நாம் பார்க்காத கோணத்தில் பார்க்கப் போகிறோம். நாம் வசிக்கும் பகுதியின் அமைவிடம், வாழும் மக்கள், அவர்களின் பண்பாடு, வசதி வாய்ப்புகள் போன்ற பல தகவல்களைச் சேகரித்து, அவற்றை விவாதித்து கூடுதலாக அறிந்து கொள்ளப் போகிறோம்.

இந்தச் சுற்றுலா ஏதோ வாகனத்தில் சென்று சுற்றிப் பார்ப்பது அல்ல, மாறாக நடந்தே சென்று நம் ஊரை மாறுபட்ட கோணத்தில் ஆய்ந்து அறிவதாகும். நம் பயணத்தைத் தொடங்குவதற்கு முன் கீழ்க்கண்ட முன் தயாரிப்புகளை மேற்கொள்ள வேண்டும். அவற்றைக் கொஞ்சம் விரிவாகப் பார்ப்போமா?





## 3. சுற்றுலாவுக்கான முன் தயாரிப்புகள்

1. முதலில் நாம் வசிக்கும் பகுதியின் அமைவிடத்தை அறிந்து கொள்ள, அதன் வரைபடத்தைத் தயார் செய்ய வேண்டும். ஊரின் மையப் பகுதிக்குச் சென்று திசைகளை வைத்து துல்லியமாக அதன் வரைபடத்தை வரைவது சரியாக இருக்கும்.

   வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு என நான்கு திசைகளையும் குறித்துக் கொள்வது நல்லது. நமது ஊரில்/ பகுதியில் உள்ள அனைத்துத் தெருக்களையும், குடியிருப்புகளையும் வரைந்து கொள்வது அவசியம்.




2. நம் ஊரில் உள்ள அனைத்து முக்கிய இடங்களையும், அரசு அலுவலகங்களையும் தனித்தனிக் குறியீடுகளாக வரைபடத்தில் உரிய இடத்தில் குறிப்பது நமது புரிதலுக்கு ஏதுவாக அமையும்.

3. நம் ஊரில் உள்ள இயற்கை வளங்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்தல் சுற்றுலாவின் ஒரு பகுதியாக அமையும். நம் ஊருக்கு வளம் சேர்க்கும் ஆறு, ஏரி, குளம், ஓடை, கால்வாய், கண்மாய், ஊரணி போன்றவற்றின் இன்றைய நிலை குறித்த தகவல்களைத் திரட்டுவது நன்றாக இருக்கும்.

4. நம் ஊரின் பசுமைச் சூழலை வரைபடத்தில் குறிப்பது சுற்றுலாவின் முக்கியமான ஓர் அங்கம். குறிப்பாக நம் ஊரில் எத்தனை மரங்கள் உள்ளன, அவை எவ்வகையானவை என்று குறிப்பிடலாம்.

நம் ஊரில் அனைவரும் ஒன்று கூடும் பொது இடங்களான சந்தைகள், பேருந்து நிறுத்தங்கள், கலை விழாக்கள் நடைபெறும் இடங்கள், கோவில்கள், விளையாட்டுத் திடல்கள், தெருக்கள், குளங்கள், நீர் நிலைகள் உள்ளனவா என்பதை அறிந்து, அவற்றை வரைபடத்தில் குறிப்பிடவும்.

நமது ஊர் மக்கள் தொகையில் பெண்கள், ஆண்கள், திருநர்கள், 60 வயதிற்கு மேற்பட்டடோர், 14 வயதிற்குட்பட்ட குழந்தைகள், 15 - 18 வயதிற்குட்பட்ட வளர் இளம் பருவத்தினர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் ஆதரவற்றோர் குறித்த விவரங்களைத் தெரிந்து கொள்வது அவசியம்.

## 4. வாங்க, நம்ம ஊரைச் சுற்றிப் பார்ப்போம்...

### செயல்பாடு - 01 குழுவாகப் பிரிதல்: கவனத்தில் கொள்ள வேண்டியவை

| | |
|---|---|
| 1. | சுற்றுலா செல்லும் நாளையும், நேரத்தையும் மன்ற ஒருங்கிணைப்பாளர்கள், மன்றக் குழந்தைகள் அனைவரும் இணைந்து முடிவு செய்திட வேண்டும். காலை முதல் நண்பகல் உணவு வரையிலான நேரத்தைச் சுற்றுலா செல்லும் நேரமாகப் பயன்படுத்தலாம். |
| 2. | சுற்றுலா புறப்படும் முன்பு, குழந்தைகள் கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு விதிமுறைகளை நெறியாளர் தெளிவாக எடுத்துக் கூறுவது அவசியம். |
| 3. | சுற்றுலா புறப்படும்போது, குழந்தைகளின் வருகையை மன்ற ஒருங்கிணைப் பாளர்கள் முறையாகப் பதிவு செய்ய வேண்டும். |
| 4. | குழந்தைகள் ஐந்து பேர் கொண்ட சிறு குழுக்களாகப் பிரிய வேண்டும். ஒவ்வொரு குழுவிற்கும் ஒருங்கிணைப்பாளர் ஒருவரை குழந்தைகளே தேர்வு செய்தல் நன்று. |
| 5. | சுற்றுலாக் குழுவில் பெண் குழந்தைகளுக்கு முன்னுரிமையும், குழு ஒருங்கிணைப்பாளர் பொறுப்பில் சமஉரிமையும் வழங்குதல் அவசியம். |
| 6. | குழந்தைகள் அனைவரும் தங்களுக்கான எழுது பொருட்களை அவர்களே கொண்டு வர வேண்டும். |

### செயல்பாடு - 02 கிராம / பகுதி வரைபடத்தை வரைதல்

- முக்கிய சாலைகள், பேருந்து நிலையம், பேருந்து நிறுத்தங்கள்
- அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள்
- அங்கன்வாடி மையங்கள்
- நூலகம், சமுதாயக் கூடம், விளையாட்டுத் திடல்கள்
- வழிபாட்டுத் தலங்கள், குடியிருப்புகள்
- கடைகள், சந்தைகள், நியாய விலைக் கடைகள்
- குடிநீர்த் தொட்டி, குளங்கள், ஏரிகள்
- பொதுக் கூட்டம் நடைபெறும் இடங்கள்
- ஊராட்சி ஒன்றிய அலுவலகம், கிராம நிர்வாக அலுவலகம்
- அரசு ஆரம்ப சுகாதார நிலையம், காவல் நிலையம்

உள்ளிட்ட அனைத்து இடங்களையும் வரைய வேண்டும். மேற்கண்ட ஒவ்வொன்றுக்கான குறியீடுகளை வரைபடத்தில் உரிய இடத்தில் குறிப்பது நமது புரிதலுக்கு ஏதுவாக அமையும். நாம் வசிக்கும் பகுதி அனைத்துச் சமூக மக்களையும் உள்ளடக்கியதாகும். இதனைக் கவனத்தில் கொண்டு, மாதிரி வரைபடத்தை முழுமையாக உருவாக்குதல் அவசியம்.







## உங்களுக்குத் தெரியுமா?

**நமது அடிப்படைக் கடமைகளில் இவையும் அடங்கும்!**

“சமயம், மொழி, பிராந்திய, சாதி வேறுபாடுகளைக் கடந்து, மக்கள் அனைவரிடையேயும் நல்லிணக்கத்தையும், சகோதரத்துவத்தையும் பேணி வளர்க்க வேண்டும். பெண்களின் மாண்புக்கு இழுக்கு ஏற்படுத்தும் பழக்கங்களை விட்டொழிக்க வேண்டும். இந்தியப் பண்பாட்டின் வளமார்ந்த மரபுச் செல்வமான அதன் பன்மைத்துவத்தைப் போற்றி மதித்துப் பாதுகாக்க வேண்டும்.”

- பிரிவு **51A,**
இந்திய அரசமைப்புச் சட்டம்

# மேலக்கூனியூர் கிராமம்

## வரைபடம்



### செயல்பாடு - 03 மக்களின் வாழ்நிலையை அறிதல்

- நம் ஊரில் வாழும் முதியோர், ஆசிரியர்கள், முன்னாள், இந்நாள் ஊராட்சி மன்ற உறுப்பினர்களைச் சந்தித்து நமது ஊரின் தற்போதைய நிலையைக் கேட்டு அறிந்து கொள்வோம்.
- நம் ஊரின் வரலாற்றுச் சிறப்புகளைத் தெரிந்து கொள்வோம்.
- நமது ஊரில் அரசுப் பணிகளில் பணியாற்றுவோர், தனியார் துறையில் வேலை செய்வோர், சொந்தமாகத் தொழில் செய்வோர், விவசாயம், மீன்பிடித் தொழில் உள்ளிட்ட பிற தொழில் செய்வோர் பற்றிய விவரங்களை அறிந்து கொள்வோம்.
- நம் ஊரில் பொதுப் பயன்பாட்டிற்கான இடங்கள், மக்கள் கூடுவதற்கான இடங்கள் எவை என்று தெரிந்து கொள்வோம்.
- நம் ஊரில் இளைஞர், இளம் பெண்களில் வேலைவாய்ப்பற்றோர் எத்தனை பேர்?
- நம் ஊரில் அமைப்பு சாராத் தொழிலாளர்கள் எத்தனை பேர்? அவர்கள் எவ்வகையான தொழிலில் ஈடுபடுகிறார்கள்?
- நம் ஊருக்கு போதிய எண்ணிக்கையில் பேருந்துகள் வருகின்றனவா? போக்குவரத்தில் உள்ள பிரச்சனைகள் என்ன? நமது பகுதியில் உள்ள பேருந்து நிறுத்தம் எப்படி உள்ளது?
- நம் ஊரில் செயல்படும் சமூக இயக்கங்கள், இளைஞர் மன்றங்கள், சேவை அமைப்புகள், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் பற்றிய விவரங்களை அறிந்து கொள்வோம்.



☞ நம் ஊரில் மக்கள் பின்பற்றும் சமயங்கள், வழிபடும் குலதெய்வங்கள், கடைப்பிடிக்கும் சடங்குகள், கொண்டாடப்படும் முக்கிய விழாக்கள் போன்றவற்றை அறிந்து இதன் மூலம் வெளிப்படும் சிறப்புப் பண்புகளைத் தெரிந்து கொள்வோம்.

ஒவ்வொரு குழுவும் மேற்கண்ட அம்சங்களை தங்களுக்குள் பிரித்துக் கொண்டு அவற்றில் எவையெல்லாம் சாத்தியமோ அந்தத் தகவல்களை திரட்டவும்.

### செயல்பாடு - 04 திரட்டப்பட்ட தகவல்களைத் தொகுத்து விவாதித்தல்

நம் ஊரை நன்றாக சுற்றிப் பார்த்துவிட்டோம். இப்பயணத்தில் நாம் பார்த்த, தெரிந்து கொண்ட, திரட்டிய தகவல்களை தொகுத்து நமக்குள் பகிர்ந்து கொள்வோமா? நம் ஊரைப்பற்றி கலந்து உரையாடுவதும், விவாதிப்பதும் எவ்வளவு அருமையான ஒன்று! வாங்க, நாம எல்லாரும் நம்ம பார்வையிலேயே நம் ஊரைப் பற்றி அறிந்து கொள்வோம்.

குழு விவாதத்தில் பின்பற்ற வேண்டியவை.

1. பல்வேறு குழுக்களாகப் பிரிந்து, திரட்டிய தகவல்களை வெவ்வேறு தலைப்புகளில் தொகுக்க வேண்டும்.
2. சுற்றுலாவில் பங்கேற்ற அனைத்து மன்றக் குழந்தைகளும் தங்கள் கருத்துக்களை முழுமையாக வெளிப்படுத்துவதற்கான சூழல் அமைய வேண்டும்.
3. விவாதங்கள் ஆரோக்கியமானதாகவும், பிறர் கருத்துக்களை மதிக்கக்கூடிய தாகவும் இருக்க வேண்டும்.
4. மன்ற ஒருங்கிணைப்பாளர்கள் மூலம் கீழ்க்காணும் கேள்விகளை முன்வைத்து விவாதத்தை மன்ற நெறியாளர் நெறிப்படுத்த வேண்டும்.



## சிந்தனைக்கான கேள்விகள்

- அனைத்து சாதி, சமய மக்களும் ஒன்றாக நம் ஊரில் வசிக்கிறார்களா? அல்லது ஊருக்குள்ளேயே மக்கள் தனித்தனி குடியிருப்புகளில் / பகுதிகளில் வசிக்கிறார்களா?
- நம் ஊரில் மக்கள் அனைவரும் தங்களுக்குள் பாகுபாடின்றி பழகுகின்றனரா? இல்லை எனில், பாகுபடுத்தும் செயல்கள், புண்படுத்தும் சொற்கள் எவை?
- நம் ஊரில் மக்கள் அனைவரும் கொண்டாடும் திருவிழாக்கள், பண்டிகைகள் எவை? திருவிழாக்கள் எவ்வகையில் உங்களுக்கு மகிழ்ச்சியளிக்கக் கூடியதாக உள்ளன? இத்திருவிழாக்களில் நம் ஊரில் உள்ள அனைத்து மக்களும் கலந்து கொள்கின்றனரா?
- நம் ஊரில் பொதுப் பயன்பாட்டிற்கான இடங்கள் உள்ளனவா? அவற்றை எல்லோரும் பாகுபாடு இல்லாமல் பயன்படுத்த முடிகிறதா? இல்லையெனில், அதற்கான காரணங்கள்?
- நம் ஊரில் அனைத்து மக்களும் மகிழ்ச்சியாகவும், கண்ணியத்தோடும் வாழத் தேவையான அனைத்து வசதிகளும் உள்ளதா?
- நம் ஊரில் பசுமைச்சூழல் எப்படி உள்ளது?
- நமது ஊர் இன்னும் மேம்பட என்னென்ன வசதிகள் தேவை?

**செயல்பாடு - 05 கட்டுரை எழுதுதல் / ஓவியம் வரைதல்**

"எனது பார்வையில் நமது ஊரின் இன்றைய நிலை" என்ற தலைப்பில் ஒவ்வொருவரும் ஒரு கட்டுரை எழுதி அல்லது ஓவியம் வரைந்து, மன்றக் கூட்டத்தில் சமர்ப்பிக்கலாம். இறுதியில் குழந்தைகள் ஊரைச் சுற்றிப்பார்த்த அனுபவங்கள், கிடைக்கப்பெற்ற தகவல்கள், வரைபடம், ஊரைச் சுற்றிப் பார்க்கும் போது குழந்தைகள் எழுப்பிய கேள்விகள், அவர்கள் சந்தித்த நபர்கள், அவர்களிடம் பெற்ற பதில்கள் மற்றும் நடைபெற்ற மகிழ்வான நிகழ்வுகள் போன்ற அனைத்தையும் தொகுத்து, மன்ற நெறியாளர் ஓர் அறிக்கை தயாரித்தல் வேண்டும். பங்கேற்ற அனைத்துக் குழந்தைகளையும், மன்ற ஒருங்கிணைப்பாளர்களையும், குழு ஒருங்கிணைப்பாளர்களையும் பாராட்டி, சுற்றுலாவை நெறியாளர் நிறைவு செய்யலாம்.










### உங்களுக்குத் தெரியுமா?

சமயம், இனம், சாதி, பாலினம், பிறப்பிடம் அல்லது இவற்றில் ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் இந்தியக் குடிமக்கள் எவரையும் கட்டுப்படுத்துவதோ, ஒதுக்குவதோ பாகுபடுத்துவதோ அல்லது நிபந்தனைக்கு உட்படுத்துவதோ கூடாது.

- பிரிவு 15(2)
இந்திய அரசமைப்புச் சட்டம்

**செயல்பாடு - 06   சிறப்பு விருந்தினரை அழைத்து உரையாடுதல்**

உங்கள் ஊரில் சிறப்பாகச் செயல்படும் சமூக இயக்கம் அல்லது சமூக ஆர்வலரை உங்கள் மன்றக் கூட்டத்திற்கு அழைத்து "நமது ஊர் மேம்பட நாம் இணைந்து செய்ய வேண்டியவை என்ன?" என்ற தலைப்பில் ஓர் உரையாடலுக்கு ஏற்பாடு செய்து, கூடுதல் தகவல்களைத் தெரிந்து கொள்ளவும்.

## நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள்

**இலக்கு - 8:** அனைவருக்கும் கண்ணியமான வேலைவாய்ப்பையும் அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியையும் அரசு ஏற்படுத்தித் தர வேண்டும்.

**இலக்கு - 11** அனைவருக்கும் பாதுகாப்பான குடியிருப்புகளும், நகரங்களும் உருவாக்கப்பட அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

## எதிர்பார்க்கும் விளைவுகள்

1. ஊரில் உள்ள அனைத்து வளங்கள் குறித்த புரிதல் குழந்தைகளுக்கு ஏற்பட்டிருக்கும். அடிப்படைக் கட்டமைப்புகளும், அனைத்து பொது வளங்களும் எல்லோருக்கும் பயன்படும் வகையில் இருக்க வேண்டும் என்று குழந்தைகள் உணர்ந்து இருப்பர்.
2. ஊரில் வசிக்கும் மக்களது வாழ்வியல் சூழலை குழந்தைகள் புரிந்திருப்பர்.
3. ஊரில் அனைத்து மக்களும் மகிழ்ச்சியாகவும், ஒற்றுமை உணர்வுடனும் வாழும் நிலை உள்ளதா என்று கேட்டுத் தெரிந்திருப்பர்.
4. குழந்தைகளின் உற்றுக் கவனித்தல் திறன், கேள்வி கேட்கும் திறன், ஒருங்கிணைக்கும் ஆற்றல், ஆவணப்படுத்தும் திறன் வளர்ந்திருக்கும்.



# எனக்கென்று ஒரு கனவு உண்டு!

**நம் ஊர்**
**எப்படி இருக்கவேண்டும் என்ற கனவு**
**நமக்கு இருக்க வேண்டும் அல்லவா?**

- நமது ஊரில் குழந்தைத் தொழிலாளர்கள் இருக்கக் கூடாது. ஊரில் உள்ள அனைத்துக் குழந்தைகளும் பள்ளிக்குச் செல்ல வேண்டும்.
- நமது ஊரில் சாதி, மதச் சண்டைகள் இருக்கக் கூடாது. ஊரில் உள்ள அனைவரும் சகோதரத்துவத்தோடு பழக வேண்டும்.
- நமது ஊரில் எந்தவிதமான பாகுபாடும் இருக்கக் கூடாது. ஊரில் உள்ள அனைவரும் சமமாகவும், அன்பாகவும் பழக வேண்டும்.
- நமது ஊரில் பொதுப் பயன்பாட்டிற்கான இடங்கள் அனைவருக்கும் பொதுவானதாகவும், அனைவரின் பயன்பாட்டிற்கு உகந்ததாகவும் இருக்க வேண்டும்.
- நமது ஊரில் அனைவரும் மகிழ்ச்சியாகவும் மனநிறைவோடும் வாழவேண்டும்.





# 2 நலவாழ்வும் நமது பாதுகாப்பும்




> நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
>
> - **பழமொழி**

## நோக்கங்கள்

1. குழந்தைகள் பாதுகாப்பிற்கான அடிப்படை அம்சங்களைப் புரிந்து கொள்ளுதல்
2. குழந்தைகள் உடல்நலம், நலவாழ்வு தொடர்பான புரிதலை ஏற்படுத்துதல்
3. நமது பகுதியில் குழந்தைகளின் பாதுகாப்புத் தொடர்பாக செயல்படும் அமைப்புகளைப் பற்றித் தெரிந்து கொள்ளல்
4. நமது ஊர் குழந்தைகளுக்கு நூறு விழுக்காடு பாதுகாப்பான பகுதியாக இருக்க வேண்டும் என்று கூட்டாகக் கனவு காணுதல்

## 1. அறிமுகம்

குழந்தைகளே!

முந்தைய பாடத்தில் நம் ஊரில் உள்ள அனைத்து வளங்கள், வசிக்கும் மக்கள் மற்றும் குடியிருப்புகள் குறித்த தகவல்களைத் திரட்டி, நம் ஊர் வரைபடத்தை ஒன்று சேர்ந்து வரைந்தோம். நாம் மேற்கொண்ட சுற்றுலாவில் நேரில் பார்த்ததையும், கேட்டதையும் வைத்து, நம்மில் சிலர் "எனது ஊரின் இன்றைய நிலை" என்ற தலைப்பில் கட்டுரையோ, ஓவியமோ வரைந்து மகிழ்ந்தோம். நாம் திரட்டிய தகவல்களின் அடிப்படையில் புதிய கோணத்தில் நமது ஊரைப்பற்றி பலவற்றை தெரிந்து கொண்டோம். இதன் அடிப்படையில் நாம் மேற்கொண்ட விவாதங்களும் நமக்குப் பயனுள்ள வகையில் அமைந்தன.

இப்போது குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் நமது நலவாழ்வு குறித்து இப்பாடத்தில் தெரிந்து கொள்ளப் போகிறோம். கள அனுபவமாக மாறப்போகும் இப்பாடம் ஒருவகையில் இன்னொரு சுற்றுலா தானே!!! கடந்த சுற்றுலா அனுபவம் இந்தக் கள அனுபவத்திற்கு நல்ல அடிப்படையாக அமைந்திருக்கும். வாருங்கள் புறப்படுவோம்!



## 2. கள அனுபவத்திற்கான முன் தயாரிப்புகள்

- களஆய்விற்கு முன்பு "குழந்தைகளின் நல்வாழ்வு மற்றும் பாதுகாப்பு" பற்றிய உரையாடல் ஒன்று நடத்தலாம். அதில், குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்கள், அதன் பாதிப்புகள் பற்றி விளக்கலாம். குழந்தைகள் மீதான வன்முறைகள் மற்றும் உரிமைகள் குறித்த கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளலாம்.
- நமது ஊர் குறித்த கூடுதல் தகவல்களை உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளிடம் கேட்டுப் பெறலாம். அவர்களின் முழுமையான ஒத்துழைப்பையும் நாடலாம்.
- நம் ஊர் பற்றிய விவரம் அறிந்த ஒரு சில இளைஞர்கள், பெரியவர்கள், சமுதாயத் தலைவர்கள் ஆகியோரிடம் குழந்தைகளின் பாதுகாப்பு குறித்து ஆலோசிக்கலாம்.
- உள்ளூரில் பணியாற்றும் அங்கன்வாடிப் பணியாளர்கள், கிராம செவிலியர்கள், சுகாதாரத்துறை பணியாளர்கள் போன்றோரிடம் குழந்தைகளின் நலவாழ்வு மற்றும் பாதுகாப்பு (குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்கள், அவை எப்படி ஏற்படுகின்றன, அவற்றின் பாதிப்புகள்) குறித்த தகவல்களைப் பெறலாம்.
- சுகாதாரம் குறித்து தெளிவு பெற்ற பின்பு, நமது பகுதியில் 0-14 வயதுக்குட்பட்ட குழந்தைகள், 15-18 வயதுக்குட்பட்ட வளர் இளம் பருவத்தினர் எத்தனை பேர் இருப்பர் என்று முந்தைய கள ஆய்வில் சேகரித்த தகவல்களை நினைவுபடுத்திக் கொள்வது அவசியம்.

முன் தயாரிப்புகளைச் செய்வதற்கு உதவுதல், யாரைச் சந்திப்பது, எங்கே, எப்போது சந்திப்பது, என்ன மாதிரியான கேள்விகளை முன் வைக்கலாம் என்பன போன்றவற்றை நெறியாளர் முறையாக ஒருங்கிணைத்தல் அவசியம்.





## 3. கள அனுபவத்திற்குச் செல்லும் போது கவனிக்க வேண்டியவை

ஆபத்தான கிணறுகள், மூடப்படாத ஆழ்குழாய்க் கிணறுகள், குளங்கள், ஓடைகள், நெரிசலான போக்குவரத்து உள்ள சாலைகள், குண்டும் குழியுமாக உள்ள தெருக்கள், சாக்கடை நீர் தேங்கியுள்ள பகுதிகள், பராமரிப்புப் பணிகளுக்காக தோண்டப்பட்டு முறையாக சரி செய்யப்படாத சாலை ஓரங்கள் / இடங்கள், அறுந்து கிடக்கும் மின் கம்பிகள், முட்புதர்கள், இடிந்து போகும் நிலையில் உள்ள பாழடைந்த கட்டிடங்கள், மழை நீர் தேங்கி நிற்கும் குழிகள், மதுக்கடைகள், சுடுகாடு, மயானம் போன்ற இடங்களில் நாம் பாதுகாப்பாகவும் முன்னெச்சரிக்கையோடும் நடக்க வேண்டும். மேலும் நாம் செல்லும் தெருக்களில் வெறி நாய்கள் போன்ற அச்சுறுத்துதல்கள் இருப்பின், மிகக் கவனமாக இருப்பது அவசியம்.



## 4. பயணத்தில் நாம் என்ன காணப் போகிறோம்?

1. அனைத்துக் குழந்தைகளுக்கும் தடுப்பூசி முறையாகப் போடப்படுகிறதா?
2. கிராமத்தில் உள்ள குழந்தைகளுக்கு பொதுவாக வரும் நோய்கள் எவை?
3. மன ரீதியான குறைபாடுகள் உள்ள குழந்தைகள், அவர்கள் சந்திக்கும் பிரச்சனைகள், அவர்களுக்கான கல்வி நிலை பற்றி கேட்டு அறிந்து கொள்ளல்.
4. ஊட்டச்சத்து இல்லாத குழந்தைகள் உள்ளனரா என்பதைத் தெரிந்து கொள்ளல்.
5. பள்ளியில் வருடாந்திர மருத்துவ ஆய்வு மற்றும் அதன் தொடர் மருத்துவ வசதிகள் செய்யப்படுகிறதா என்பதை ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளல்.
6. மாற்றுத்திறனாளிக் குழந்தைகள் நமது ஊரில் எத்தனை பேர் என்று தெரிந்து கொள்ளல்.
7. பள்ளியில் உள்ள முதலுதவி சாதனங்கள் மற்றும் முதலுதவி குறித்து பயிற்சி கொடுக்கப்படுவது குறித்துத் தெரிந்து கொள்ளல்?





## குழந்தைகள் பாதுகாப்புக் குழு

- 2009ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த ஒன்றிய அரசின் ஒருங்கிணைந்த குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கிராம, வட்டார மற்றும் மாவட்ட அளவிலான குழந்தைப் பாதுகாப்புக் குழுக்கள் உருவாக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. மேலும், தமிழ்நாடு அரசு 10.01.2013 அன்று வெளியிட்ட அரசாணை (M.S) எண்.10ன் படி கிராம அளவிலான குழந்தைகள் பாதுகாப்புக் குழுக்களை மாநிலம் முழுவதும் ஏற்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியது.
- இக்குழு குழந்தைகளின் பிரச்சனைகளையும், தேவைகளையும் நிறைவேற்றும் வகையில் கிராம ஊராட்சி மன்றப் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்களை மையமாகக் கொண்டு இயங்கும்.

| கிராம அளவிலான குழந்தைகள் பாதுகாப்புக் குழுவின் உறுப்பினர்கள் | | |
|---|---|---|
| 1. கிராம பஞ்சாயத்து / ஊராட்சி மன்றத் தலைவர் | - | தலைவர் |
| 2. கிராம நிர்வாக அலுவலர் | - | அமைப்பாளர் |
| 3. உயர் நிலை (அ) மேல்நிலை (அ) பள்ளியின் தலைமையாசிரியர் | - | உறுப்பினர் |
| 4. இரண்டு குழந்தைப் பிரதிநிதிகள் (உள்ளூர் பள்ளித் தலைமையாசிரியரால் பரிந்துரைக்கப்படும்) | - | உறுப்பினர் |
| 5. மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலகின் உறுப்பினர் | - | உறுப்பினர் |
| 6. அங்கன்வாடி பணியாளர் | - | உறுப்பினர் |
| 7. கிராம சுகாதார செவிலியர் | - | உறுப்பினர் |
| 8. தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் பிரதிநிதி (கிராமத்தில் செயல்படும் அமைப்பு) | - | உறுப்பினர் |



## 5. கள அனுபவத்தில்...

மன்ற நெறியாளர் கவனத்தில் கொள்ள வேண்டியவை

### செயல்பாடு - 01 குழந்தைகளைக் குழுவாகப் பிரித்தல்

1. குழந்தைகளை ஐந்து பேர் கொண்ட குழுக்களாகப் பிரிக்க வேண்டும். அவ்வாறு பிரிக்கும்போது ஆண், பெண் குழந்தைகள் அக்குழுக்களில் சமமாக இடம்பெற்றிருப்பது அவசியம்.

2. ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு பொறுப்பாளரைத் தேர்வு செய்ய வேண்டும். இதில் பெண் குழந்தைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவது அவசியம்.





### செயல்பாடு - 02 ஊரின் மையப் பகுதிக்குச் செல்லுதல்

மன்றக் குழந்தைகள் அனைவரும் ஊரின் மையப் பகுதிக்குச் செல்ல வேண்டும். ஊரில் மொத்தம் எத்தனை தெருக்கள் உள்ளன என்பதைக் கணக்கிட்டு, அதற்கேற்ப குழுக்களுக்குத் தெருக்களை ஒதுக்க வேண்டும். இவ்வாறு தெருக்களை ஒதுக்கும் போது குடியிருப்புகளின் எண்ணிக்கையையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.



**உங்களுக்குத் தெரியுமா?**

நம் உயிர் வாழும் உரிமையை இந்திய அரசமைப்புச் சட்டமும், அகில உலக மனித உரிமைச் சட்டங்களும், அடிப்படை உரிமையாக அங்கீகரித்துள்ளன. அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட உரிமைகளில் முக்கியமான உரிமைகள் சத்தான உணவு, சுத்தமான குடிநீர், வசிப்பதற்கு இருப்பிடம், தூய்மையான காற்று, வாழ்வதற்கு உகந்த சுற்றுச்சூழல், தரமான இலவசக் கல்வி, சுகாதாரம் போன்றவை.

**செயல்பாடு - 03 களப்பணியைத் தொடங்குதல்**

1. குழந்தைகள் ஒவ்வொரு வீடாகச் சென்று மக்களைச் சந்திப்பர்.
2. வீடுகளில் மக்களைச் சந்திக்கும் போது, தாங்கள் யார் என்பதைத் தெளிவாக அறிமுகப்படுத்திக் கொள்வது அவசியம். குறிப்பாக அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றத்தைப் பற்றித் தெளிவாகக் கூற வேண்டும்.



3. "பயணத்தில் நாம் என்ன காணப்போகிறோம்?" என்ற தலைப்பில் கொடுக்கப்பட்ட கேள்விகளில் வாய்ப்புள்ள கேள்விகளுக்கான பதில்களை தகவல்களாகத் திரட்ட வேண்டும்.

**செயல்பாடு - 04 தகவல்களைத் தொகுத்து அறிக்கை தயார் செய்தல்/ குழுவில் அவற்றைப் பகிர்ந்து கொள்ளல்**

1. கள அனுபவத்தில் கிடைத்த தகவல்களை அனைவரும் குழுவாக ஓரிடத்தில் அமர்ந்து விவாதிக்க வேண்டும். பின்னர் அவற்றை பல்வேறு தலைப்புகளில் வகைப்படுத்தி அறிக்கையாகத் தொகுக்கவும்.
2. "பயணத்தில் நாம் என்ன காணப்போகிறோம்?" என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்ட கேள்விகளையே பல்வேறு தலைப்புகளாக எடுத்து வகைப்படுத்தலாம்.
3. "எங்கள் ஊர் அனைத்துக் குழந்தைகளுக்கும் பாதுகாப்பானது" என்ற தலைப்பில் ஒவ்வொரு குழந்தையும் இரு நிமிடங்கள் குழுவில் பேசலாம்.

## நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள்

3 GOOD HEALTH AND WELL-BEING
உடல்நலம், நலவாழ்வை உறுதிச் செய்தல்

இலக்கு-03 அனைவருக்கும் உடல்நலம், நலவாழ்வை அரசு உறுதி செய்ய வேண்டும்

### செயல்பாடு-05 மன்றக் கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினரை அழைத்து உரையாடுதல்

உங்கள் பகுதியில் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணியாற்றும் செவிலியரை அல்லது அங்கன்வாடிப் பணியாளரை அழைத்து நம் ஊரில் குழந்தைகளுக்குக் கிடைக்கபெறும் மருத்துவ சேவைகள், நலவாழ்வு குறித்த அம்சங்களை கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

உங்கள் கள அனுபவத்தில் கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையில் கேள்விகளை எழுப்பி பதில்களைப் பெறலாம். அதேபோல உங்கள் பகுதியில் கிராமக் குழந்தைகள் பாதுகாப்புக்குழு செயல்பட்டால், அக்குழு உறுப்பினர்களில் யாராவது ஒருவரை உங்கள் மன்றக் கூட்டத்திற்கு அழைத்து, அக்குழுவின் செயல்பாடுகள் குறித்து அவரோடு உரையாடலாம்.



## எதிர்பார்க்கும் விளைவுகள்

1. குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வு குறித்த விழிப்புணர்வை இக்கள அனுபவம் குழந்தைகளுக்கு ஏற்படுத்தும்.
2. குழந்தைகளிடம் குழுவாகச் செயற்படும் உணர்வு உருவாகும். மக்களைச் சந்தித்தல், நம்மைப் பாதிக்கும் பிரச்சனைகள் குறித்து களப்பணி மேற்கொள்ளும் ஆர்வமும் குழந்தைகளிடம் வளரும்.
3. நமது ஊர் நம் குழந்தைகளுக்கு முழுப்பாதுகாப்பான பகுதியாக இருக்க என்னென்ன அம்சங்கள் இருக்க வேண்டும்? இதற்கு அரசும், உள்ளாட்சி அமைப்புகளும் என்ன செய்ய வேண்டும்? அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றம் என்ன செய்ய வேண்டும் என்பன போன்ற பாதுகாப்பு சார்ந்த அம்சங்களை குழந்தைகள் கூடுதலாகச் சிந்திப்பர்.



# எனக்கென்று ஒரு கனவு உண்டு!

**நமது நல்வாழ்வு குறித்து நமக்கு ஒரு கனவு இருக்க வேண்டும் அல்லவா?**

- எங்கள் ஊரில் குழந்தைகளாகிய நாங்கள் அனைவரும் பாதுகாப்பாக இருக்க வேண்டும்.
- எங்கள் ஊரில் செயல்படும் "குழந்தைகள் பாதுகாப்புக் குழு" எங்களது பாதுகாப்பில் மிகுந்த அக்கறையோடு செயல்பட வேண்டும்.
- குழந்தைகளாகிய நாங்கள் அனைவரும் நல்ல உடல் ஆரோக்கியத்தோடும், உடல்நலத்தோடும் நலமாக வாழவேண்டும்.
- மகப்பேறு மரணங்கள் இல்லாத, ஊட்டச்சத்துக் குறைவு இல்லாத குழந்தைகள் வசிக்கும் பகுதியாக எங்கள் ஊர் இருக்கவேண்டும்.
- அனைத்து வசதிகளையும் கொண்ட, 24 மணி நேரமும் மிகச் சிறப்பாக இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது துணை சுகாதார நிலையம் எங்கள் ஊரில் இருக்க வேண்டும்.
- மன ரீதியான குறைபாடுகள் உள்ள குழந்தை களையும், கற்றல் குறைபாடு உள்ள குழந்தை களையும் நன்கு கவனித்துக் கொள்ள எங்கள் ஊரில் சிறப்பு ஏற்பாடுகள் இருத்தல் வேண்டும்.





# 3 | அனைவருக்கும் கல்வி



> கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
> மாடல்ல மற்றை யவை.
>
> **- திருக்குறள் 400**

## நோக்கங்கள்

1. நமது ஊரின் கல்விச் சூழல் குறித்தும், குழந்தைகளின் இன்றைய கல்வி நிலை குறித்தும் தெரிந்து கொள்ளல்

2. தரமான கல்வி அனைத்துக் குழந்தைகளுக்குமான ஓர் அடிப்படை உரிமை என்பதை அறிந்து கொள்ளல்

3. இடைநிற்றல், குழந்தைத் தொழிலாளர் முறை, குழந்தைக் கடத்தல் இல்லா நிலையை நமது பகுதியில் உருவாக்குவதற்கு நாம் அனைவரும் சேர்ந்து கனவு காணுதல்

## 1. அறிமுகம்




குழந்தைகளின் நலவாழ்வும், பாதுகாப்பும் பற்றி நமது ஊரில் நாம் மேற்கொண்ட கள அனுபவத்தின் வாயிலாக கிடைத்த தகவல்களைக் கொண்டு முந்தைய பாடத்தில் விரிவாக விவாதித்தோம். இது குறித்து நமக்கு இப்போது கூடுதல் தெளிவு கிடைத்துள்ளது. இதனைத் தொடர்ந்து, இந்தப் பாடத்தில் நமக்கான கல்வி உரிமை குறித்து சற்று பேசுவோமா? குழந்தைகளையும், கல்வியையும் எப்போதும் பிரிக்கவே முடியாது. குழந்தைகள் என்றாலே கல்வியோடும், பள்ளிச் சூழலோடும் தொடர்புபடுத்தாமல் இருக்க முடியாது. கல்விதான் என்றுமே அழிக்க முடியாத சொத்து!

> இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
> தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
> எம்மை யுலகத்தும் யாம் காணோம் கல்விபோல்
> மம்மர் அறுக்கும் மருந்து
>
> - நாலடியார், அதிகாரம் 14, கல்வி, பாடல் 132
>
> பொருள் : கல்வி இல்வுலக இன்பத்தைத் தரும்; பிறருக்குத் தருவதால் குறையாது; கற்றவர் புகழை எங்கும் பரவச் செய்யும்; தாம் உயிரோடு இருக்கும் வரை அழியாது. ஆதலால் இந்த உலகத்தில் கல்வியைப் போல அறியாமையைப் போக்கும் மருந்தை நாம் கண்டதில்லை.

அதனால்தான் கல்வி என்பது வாழ்வுரிமையின் ஓர் அங்கமாக இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகள் பகுதியில் இணைக்கப் பட்டுள்ளது. அதன்படி, குழந்தைகளின் இலவச, கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நாளில் நடைமுறைக்கு வந்தது. இந்தப் பாடம் குழந்தைகளின் கல்வி பற்றி நாம் அறிந்து கொள்ளவும், மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் ஏதுவாக அமைகிறது.




## 2. கள அனுபவம் : நமது ஊரில் குழந்தைகளின் கல்வி நிலை

நமக்கு இது மூன்றாவது கள அனுபவம். மேலே குறிப்பிட்டபடி, நமது ஊரில் கல்வி நிலை குறித்து நாம் இங்கு சில தகவல்களைத் திரட்டி, தரமான கல்வி என்பது நம் அனைவருக்குமான அடிப்படை உரிமை என்ற கண்ணோட்டத்தில் இவற்றை விவாதிக்கப்போகிறோம்.

**கள அனுபவத்தில் நம் ஊரில் நாம் சேகரிக்கப்போகும் அடிப்படைத் தகவல்கள் :**

- நமது பகுதியில் பள்ளி செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கை - ஆண், பெண் மற்றும் படிக்கும் வகுப்பு வாரியாக
- நமது பகுதியில் பள்ளி செல்லாத குழந்தைகளின் எண்ணிக்கை
- அங்கன்வாடி, நர்சரி பள்ளிகளுக்கு செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கை



- நமது பகுதியில் செயல்படும் அரசுப் பள்ளியில் படிக்கும் மொத்தக் குழந்தைகளின் எண்ணிக்கை - ஆண், பெண், படிக்கும் வகுப்பு வாரியாக
- இங்கு செயல்படும் தனியார் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை - ஆண், பெண் மற்றும் படிக்கும் வகுப்பு வாரியாக
- நமது பகுதியில் கடந்த இரண்டு ஆண்டுகளில் குழந்தைத் திருமணங்கள் ஏதேனும் நடைபெற்றுள்ளனவா? (பெண் - 18 வயதிற்குட்பட்டவர்கள்)
- நமது பகுதியில் குழந்தைத் தொழிலாளர்கள் யாரேனும் உள்ளனரா? (15 வயது முதல் 18 வயதிற்குட்பட்ட வளர் இளம் பெண்கள் ஆபத்தான தொழில்கள் எதிலும் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனரா?)
- நமது பகுதியில் பெண் குழந்தைகள் அனைவரும் பள்ளிக்குச் செல்கின்றனரா? இல்லை எனில் காரணங்களை அறிக.
- தமிழக அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு செய்யப்பட்டுள்ளதா?

மன்றத்தின் நெறியாளர் மேற்கண்ட செயல்பாடுகளில் வாய்ப்புள்ளவற்றை தேர்வு செய்து, குழந்தைகளை ஈடுபடுத்தி அவற்றை செயல்படுத்த வழிகாட்டவும்.




## 3. நடைமுறைப்படுத்தும் முறை

### செயல்பாடு-01 குழந்தைகளைக் குழுவாகப் பிரித்தல்

1. குழந்தைகளை ஐந்து பேர் கொண்ட குழுக்களாகப் பிரிப்பது அவசியம். அவ்வாறு பிரிக்கும் போது ஆண், பெண் குழந்தைகளின் எண்ணிக்கை சமமாக இருக்குமாறு பார்த்துக் கொள்ளவும்.

2. ஒவ்வொரு குழுவில் உள்ள குழந்தைகளில் இருந்தும் ஒரு பொறுப்பாளரை தேர்வு செய்வது அவசியம். தேர்வு செய்வதில் பெண் குழந்தைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

3. பள்ளி மாணவர்கள் மத்தியில் அண்மைக் காலங்களில் அதிகமாக புழங்கும் போதைப் பொருட்களை முற்றிலுமாகத் தடுப்பதற்கு என்ன வழி?





**செயல்பாடு - 02 களப் பணியைத் தொடங்குதல்**

1. ஒவ்வொரு வீடாகச் சென்று தங்கள் களப்பணியைத் தொடங்க வேண்டும்.
2. 18 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் விவரங்களை சேகரிக்கவும்.
3. வீடுகளில் மக்களைச் சந்திக்கும் போது, தாங்கள் யார் என்பதைத் தெளிவாக அறிமுகப்படுத்திக் கொள்வது அவசியம். குறிப்பாக, அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றத்தைப் பற்றித் தெளிவாகக் கூறுவது நல்லது.
4. “நமது ஊரில் குழந்தைகளின் கல்வி நிலை” என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்ட கேள்விகளில் வாய்ப்புள்ள கேள்விகளுக்கான பதில்களை தகவல்களாகத் திரட்டவும்.

## சிந்தனைக்கான கேள்விகள்

1. தமிழ்நாட்டில் தனியார் பள்ளிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருவது ஏன்?
2. தாய்மொழியில் வழங்கப்படும் கல்விதான் மிகச் சிறந்தது என்று கல்வியாளர்கள் கூறினாலும், பெற்றோர் தங்கள் குழந்தைகளை ஆங்கில வழியில் படிக்க வைக்க ஆசைப்படுவது ஏன்?





**செயல்பாடு - 03 தகவல்களைக் கொண்டு விவாதித்தல், தொகுத்தல், அறிக்கை தயார் செய்தல்**

கள அனுபவத்தில் கிடைத்த தகவல்களை அனைவரும் ஒன்றாக ஓரிடத்தில் அமர்ந்து விவாதிக்க வேண்டும். பின்னர் அவற்றை பல்வேறு தலைப்புகளில் வகைப்படுத்தி அறிக்கையாகத் தொகுக்கவும். “நமது ஊரில் குழந்தைகளின் கல்வி நிலை” என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்ட கேள்விகளையே பல்வேறு தலைப்புகளாக எடுத்து வகைப்படுத்தலாம்.

1. நமது பகுதியில் பள்ளி செல்லாத குழந்தைகள் இருப்பின், அதற்கான காரணங்களைக் கண்டறிந்து விவாதிக்கலாம்.
2. எத்தனை குழந்தைகளுக்கு தங்களின் வகுப்புப் புத்தகத்தை நன்கு வாசிக்க, எழுத, தவறு இல்லாமல் கணக்குப் போடத் தெரிகிறது என்பதை அறிந்து அதனைக் குறிப்பெடுத்துக் கொள்ளவும்.
3. நம் ஊரில் உள்ள பள்ளியில் எவ்வகையான வசதிகள் உள்ளன. (உறுதியான கட்டிடம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், தண்ணீர் வசதியுள்ள கழிப்பறைகள், சுற்றுச்சுவர், விளையாட்டுத்திடல், முதலுதவிப் பெட்டி, மாணவர்களின் மனசாட்சிப் பெட்டி போன்றவை)
4. தமிழக அரசுப் பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள பள்ளி மேலாண்மைக் குழுக்கள் சிறப்பாகச் செயல்படுகின்றதா?
5. அங்கன்வாடி, நர்சரி பள்ளிகளுக்குச் செல்லும் குழந்தைகள் எத்தனை?
6. நம் ஊரில் இருந்து கல்லூரிகளில் பயில்வோர் எண்ணிக்கை.
7. கொரோனா பெருந்தொற்றுச் சூழலில் பள்ளி செல்லா நிலையில் குழந்தைகள் மனநிலை எப்படி இருந்தது? இணைய வழியில் வகுப்புகள் நடந்த அனுபவத்தைக் குழந்தைகள் பகிர்ந்து கொள்ளலாம்.
8. அனைத்துக் குழந்தைகளுக்கும் சமமான, தரமான கல்வி வழங்கும் நோக்கில் தமிழக அரசு செயல்படுத்தும் பல்வேறு திட்டங்கள் பற்றிய கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளலாம்.

மேற்கண்டவற்றை குழுவாக இணைந்து அறிக்கையாக தொகுக்கவும்.

## நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள்

அனைவரையும் உள்ளடக்கிய, முழுமையான வளர்ச்சியை உறுதி செய்யும் வகையில் ஐ.நா சபை சில இலக்குகளை நிர்ணயித்து அவற்றை 2030க்குள் அனைத்து அரசுகளும் நிறைவு செய்யத் திட்டம் வகுத்துள்ளது. இதனை இந்தியா உட்பட உலக நாடுகள் அனைத்தும் தத்தமது நாடுகளில் செயல்படுத்தி வருகின்றன. இந்த இலக்குகளில் முக்கியமான ஒன்று : அனைத்துக் குழந்தைகளுக்கும் பாகுபாடில்லாமல், சமமான, தரமான கல்வியை அரசுகள் வழங்க வேண்டும்.

இலக்கு 4 : எல்லோரையும் உள்ளடக்கிய, தரமான கல்வியும், வாழ்நாள் முழுவதும் கல்வி கற்பதற்கான வாய்ப்புகளும் அனைவர்க்கும் வழங்க அரசுகள் வழிவகை செய்ய வேண்டும்.



### உங்களுக்குத் தெரியுமா?

- ஏறக்குறைய 100 கோடிக் குழந்தைகள் பல்வேறு விதமான வறுமைச் சூழலில் எவ்வித அத்தியாவசிய சேவைகளும் கிடைக்காமல் வாழ்கின்றனர்.
- பள்ளிகள் மூடப்பட்ட போது, குறைந்தது 463 கோடிக் குழந்தைகள் இணையவழிக் கற்றலை பெற முடியவில்லை.
- 5 வயதுக்குட்பட்ட 70 இலட்சம் குழந்தைகள் கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாட்டால் கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- கொரோனா பெருந்தொற்றுச் சூழலில் பள்ளிகள் மூடப்பட்டதால், 37 கோடி குழந்தை கள் சத்தான உணவைப் பெறமுடியாத நிலை.
- கோவிட்-19 காரணமாக, இந்தப் புத்தாண்டு இறுதிக்குள் சுமார் 1 கோடிக் குழந்தைத் திருமணங்கள் நிகழலாம்.

- 2020 இல் கொரோனா காலக்கட்டச் சூழலில் யுனிசெப் பன்னாட்டு அமைப்பின் ஆய்வறிக்கை

**செயல்பாடு - 04 சிறப்பு விருந்தினரை மன்றத்திற்கு அழைத்து உரையாடுவது**

உங்கள் ஊரில் செயல்படும் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர் ஒருவரை உங்கள் மன்றக் கூட்டத்திற்கு அழைத்து நீங்கள் கள அனுபவத்தில் தெரிந்து கொண்டவற்றைப் பகிர்ந்து கொண்டு, அக் குழுவின் பணிகளையும் கேட்டுத் தெரிந்துக் கொள்ளலாம்.



**செயல்பாடு - 05 "நமது ஊரில் நம் குழந்தைகளின் கல்வி நிலை" என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டி**

மன்றக் குழந்தைகள் அனைவரும் பங்கேற்கும் வகையில் "நமது ஊரில் நம் குழந்தைகளின் கல்வி நிலை" என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டியினை நடத்தலாம். அனைத்துக் குழந்தைகளும் இத்தலைப்பில் சிறு தயாரிப்பில் ஈடுபட்டு, அதன் பின்னர் கட்டுரைப் போட்டியில் பங்கேற்கலாம். அரை மணி நேரம் என போட்டிக்கான கால அவகாசம் கொடுத்து இப்போட்டியில் குழந்தைகளைக் கலந்து கொள்ளச் செய்யலாம்.

**செயல்பாடு - 06 நமது பள்ளியின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தக் கோரி மாவட்ட முதன்மை கல்வி அலுவலருக்கு மனு அனுப்புதல்**



நமது பள்ளியில் தற்போது என்ன அடிப்படை வசதிகள் உள்ளன என்று தெரிந்து கொண்ட பின்னர், நமது பள்ளி மேம்பட என்ன அடிப்படை வசதிகள் தேவையோ அவற்றைப் பட்டியல்படுத்தி அந்த அடிப்படை வசதிகளை செய்து தரக் கோரி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலருக்கு நமது மன்றம் சார்பாக கூட்டாக ஒரு மனு சமர்ப்பித்தல். பள்ளிச் சுற்றுச்சுவர் அல்லது போதிய தண்ணீர் வசதியுள்ள கழிப்பறைகள் அல்லது நல்ல நூலகம் அல்லது காற்றோட்டமான வகுப்பறைகள் அல்லது நல்லதொரு விளையாட்டுத் திடல் போன்ற ஏதாவது ஒரு அடிப்படை வசதியினை நிறைவேற்றக் கோரி அந்த மனு அமையலாம்.

### செயல்பாடு - 07 "கல்வி என்பது ஓர் அடிப்படை உரிமை" என்ற தலைப்பில் ஓவியப் போட்டி நடத்துவது

அனைத்து மன்றக் குழந்தைகளையும் ஈடுபடுத்தி "கல்வி என்பது ஓர் அடிப்படை உரிமை" என்ற தலைப்பில் ஓவியப் போட்டியை நடத்தலாம். குழந்தைகளுக்கு இத்தலைப்பை சற்று விளக்கி ஓவியப் போட்டியில் பங்கேற்கச் செய்யலாம்.




## தமிழ்நாடு மாநில குழந்தைகளுக்கான கொள்கை 2021

தமிழ்நாடு அரசின் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை 'மாநில குழந்தைகளுக்கான கொள்கை'யை 2021ல் வெளியிட்டுள்ளது. இதில் குழந்தைகளுக்கான கல்வி குறித்த நிலைப்பாடு மற்றும் மாநில அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான 24 செயல்பாடுகளை பட்டியல் படுத்தியுள்ளது.

## எதிர்பார்க்கும் விளைவுகள்

1. நமது ஊரின் கல்விச் சூழல் குறித்தும், குழந்தைகளின் கல்வி நிலை குறித்தும் தெரிந்து கொண்டிருப்பர்.
2. தரமான கல்வி அனைவருக்குமான அடிப்படை உரிமை என்பதை அனைத்து குழந்தைகளும் உணர்ந்து கொண்டிருப்பர்.
3. குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்க வேண்டும்; குழந்தைத் திருமணத்தைத் தடுக்க வேண்டும்; அனைத்து குழந்தைகளும் படிக்க வேண்டும் என்ற புரிதல் அனைத்து மன்றக் குழந்தை களுக்கும் ஏற்பட்டிருக்கும்.

# எனக்கென்று ஒரு கனவு உண்டு!



**நமக்கான கல்வியும்,**
**நமது பள்ளிகளும்**
**எப்படி இருக்க வேண்டும் என்ற கனவு...**

- எங்கள் ஊரில், அனைத்துக் குழந்தைகளுக்கும் எந்த பாகுபாடும் இல்லாமல், சமமான, தரமான கட்டணமில்லா கல்வி வழங்கப்பட வேண்டும்.
- எங்கள் பள்ளியில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், போதிய தண்ணீர் வசதியுள்ள கழிப்பறைகள், நல்ல விளையாட்டுத்திடல், அருமையான நூலகம், காற்றோட்டமான வகுப்பறைகள் போன்ற அனைத்தும் இருக்க வேண்டும்.
- உளப்பூர்வமாக எங்களை நேசிக்கக் கூடிய, எங்களுக்கு நன்கு பாடம் எடுக்கக் கூடிய, எங்களை நன்கு வழி நடத்தக் கூடிய ஆசிரியர்கள் இருக்க வேண்டும்.
- வன்முறை இல்லா வகுப்பறைகளைக் கொண்ட, எங்கள் திறமைகளை முழுமையாக வளர்க்கின்ற, எங்கள் ஆளுமைகளை உருவாக்குகின்ற தளங்களாக எங்கள் பள்ளி அமைய வேண்டும்.
- எங்களது பள்ளியில் இனிமையான குழந்தை நேயச் சூழல் அமைய வேண்டும்.





# 4 தூய்மையும் சுகாதாரமும்



புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்
- திருக்குறள் 298

## நோக்கங்கள்

1. நமது பகுதியின் பொதுச் சுகாதார நிலை குறித்து களப்பணி வாயிலாக தெரிந்து கொள்ளல்
2. நமது நலவாழ்வு ஓர் அடிப்படை உரிமை என்பதைப் புரிந்து கொள்ளல்
3. நோயற்ற சமூகத்தை அமைப்பதற்கான நோய்த் தடுப்பு முறைகளையும், அதை நோக்கிய அரசின் கடமைகளையும் அறிந்து கொள்ளல்

## 1. அறிமுகம்

முந்தைய பாடத்தில் குழந்தைகளின் கல்வி குறித்தும், நம் ஊரில் அதன் நிலையையும் தெரிந்து கொள்ளும் நோக்கில் களப் பணியை மேற்கொண்டோம். கல்வியும், பொதுச் சுகாதாரமும், நமக்கும், நாம் வாழும் சமூகத்திற்கும் அடிப்படைத் தேவைகளாகும். சுகாதாரம் என்பது மக்களின் அடிப்படை நல உரிமையாகும். சுகாதாரம் பாதிக்கப்படும்போது மக்கள் பல வகையான நோய்களால் பாதிக்கப் படுகின்றனர். நீர், காற்று மூலம் பரவும் பல வகையான தொற்று நோய்களுக்கு சுகாதாரச் சீர்கேடே காரணமாகிறது. ஒரு நாகரிகச் சமூகம் என்பதன் அடையாளம் பொதுச் சுகாதாரத்தைச் சிறப்பாக பேணுவதேயாகும்.

## 2. பொதுச் சுகாதாரம் குறித்த களப்பணி

நமது ஊரின் பொதுச் சுகாதாரம் பற்றிப் பேசும்போது குடிநீர், கழிப்பறை வசதி, கழிவு நீர் செல்ல போதிய வசதி, மழை நீர் வடிவதற்கான வசதி, மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையம், சுகாதாரப் பணியாளர்கள், செவிலியர்கள், தொற்று பரவலுக்கான தடுப்பு நடவடிக்கைகள் போன்றவை குறித்து அறிந்து கொள்ளாமல் இருக்க முடியாது. எனவே, நமது களப்பணியில் இவை குறித்து தகவல்களைத் திரட்டுவது அவசியமானது. இதன் அடிப்படையில் பின்வரும் தகவல்களைத் திரட்டுவோமா?

### 1. நமது பகுதி குடிநீர் குறித்த தகவல் திரட்டல்

- நமது ஊரில் அனைவருக்கும் தூய்மையான பாதுகாப்பான குடிநீர் கிடைக்கிறதா?
- அது எங்கிருந்து கிடைக்கிறது? (ஆற்று நீர் - குழாய் வழியாக, குளத்து நீர், கிணற்று நீர், ஆழ்குழாய் நீர் - அடிபம்பு)
- அந்த நீரின் நிறம், சுவை எப்படி உள்ளது?
- நமக்கு போதுமான அளவு குடிநீர் கிடைக்கிறதா?





### 2. நாம் பயன்படுத்தும் கழிப்பறை வசதிகள் குறித்த தகவல் திரட்டல்

- நமது பகுதியில் அனைத்து வீடுகளிலும் கழிப்பறை வசதி உள்ளதா?
- நமது பகுதியில் இன்னும் மக்கள் திறந்தவெளியில் மலம் கழிக்கின்றனரா?
- திறந்த வெளியில் மலம் கழிப்பதால் ஏற்படும் பாதிப்புகள் பற்றி நமக்கு தெரியுமா?
- நமது பகுதியில் பொதுக் கழிப்பறை வசதிகள் உள்ளனவா?



- ஆம் எனில், அதில் போதுமான தண்ணீர் வசதி உள்ளதா? சுத்தப்படுத்துவதற்கான சுகாதாரப்பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனரா?
- நமது பகுதியில் பொதுக் கழிப்பறை இல்லை எனில், அதற்கான காரணங்கள் என்ன?
- பொதுக் கழிப்பறை கட்டுவதற்கு அரசு அலுவலர்களுக்கு நமது ஊர் சார்பாக மனுக்கள் ஏதேனும் கொடுக்கப்பட்டுள்ளனவா?
- ஊரக வளர்ச்சித் துறை, கிராம ஊராட்சி மூலமாக மானிய விலையில் கழிப்பறைக் கட்ட நிதி ஒதுக்குவது பற்றித் தெரிந்துள்ளனரா?
- அத்திட்டத்தின் கீழ் எத்தனை வீடுகளில் கழிப்பறை வசதிகள் செய்யப்பட்டுள்ளன?
- நமது ஊரில் கழிவு நீர் செல்ல போதிய வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதா? அல்லது சாலையிலேயே தேங்கியுள்ளதா?
- குடியிருப்புகளின் அருகில் தொழிற்சாலைகள் ஏதேனும் உள்ளதா? அதன் கழிவுநீர் எங்கு செல்கிறது?

### 3. நமது பகுதியில் மருத்துவமனை வசதி குறித்த தகவல் திரட்டல்

- நமது பகுதியில் அரசு மருத்துவமனை அல்லது ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளதா? ஆம் எனில், எவ்வளவு தொலைவில் உள்ளது?
- அந்த மருத்துவமனை / ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர்கள் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் பணியாற்றுகிறார்களா?

- அந்த மருத்துவமனை / ஆரம்ப சுகாதார நிலையத்தில் செவிலியர்கள் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் பணியாற்றுகிறார்களா?
- நமது பகுதியில் நாட்டு மருத்துவம், சித்த மருத்துவம், யுனானி, ஓமியோபதி, அக்குபஞ்சர் போன்ற மருத்துவ முறைகள் பயன்பாட்டில் உள்ளனவா?







- நமது பகுதியில் மருந்துக் கடை உள்ளதா?
- 108 அவசர ஊர்திப் பயன்பாடு குறித்து மக்கள் அறிந்துள்ளனரா?
- நமது பகுதியில் தனியார் மருத்துவமனை ஏதேனும் உள்ளதா?
- நமது பகுதியில் பெரும்பாலான மக்கள் அரசு மருத்துவமனைக்குச் செல்கின்றனரா அல்லது தனியார் மருத்துவமனைக்குச் செல்கின்றனரா? அதற்கான காரணங்கள் என்ன?

### 4. நோய்த் தடுப்பு முறைகளும், நலவாழ்வும் குறித்த தகவல் திரட்டல்

- கொரோனா பெருந்தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கு நமது பகுதியில் முன்னெடுக்கப்பட்ட தடுப்பு முறைகள் யாவை?
- இந்தப் பெருந்தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கு சுகாதாரத்துறை மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?
- கொரோனா பெருந்தொற்று நம்மை தாக்காமல் இருக்க நமது பகுதியில் அனைவரும் இரண்டு முறை தடுப்பூசி போட்டுள்ளனரா?
- குழந்தைகளுக்கு செலுத்தப்படும் தட்டம்மை, போலியோ, மஞ்சள் காமாலை போன்ற நோய்களுக்கான தடுப்பு மருந்து முறையாக செலுத்தப்படுகிறதா?
- வழக்கமாக ஒரு நோய் நம்மைத் தாக்கும்போது, நாம் மேற்கொள்ளும் தடுப்பு முறைகள் என்ன?
- நோயைத் தடுக்கக்கூடிய பாரம்பரிய மருத்துவ குணமுள்ள சத்தான உணவு முறைகள் எவை?



மேற்கண்ட நான்கு விதமான களப்பணிகளுக்கும் உங்கள் மன்ற நெறியாளரின் வழிகாட்டலோடு சம்மந்தப்பட்ட அலுவலகங்களுக்குச் சென்று அரசு அலுவலர்களை நேரில் சந்தித்து தேவைப்படும் தகவல்களைத் திரட்டலாம்.



SUSTAINABLE DEVELOPMENT GOALS

**நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள்**

இலக்கு 06 : அனைவர்க்கும் சுத்தமான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டும்; அனைவரும் சுகாதாரமான சூழலில் வாழ அரசுகள் வழிவகை செய்ய வேண்டும்.

## 3. களப்பணியை நடைமுறைப்படுத்தும் முறை

**செயல்பாடு -01 குழந்தைகளைக் குழுவாகப் பிரித்தல்**



1. முந்தைய பாடங்களில் குறிப்பிட்டபடியே, குழந்தைகளை ஐந்து பேர் கொண்ட குழுக்களாகப் பிரிப்பது அவசியம். அவ்வாறு பிரிக்கும்போது ஆண்,பெண் குழந்தைகளின் எண்ணிக்கை சமமாக இருக்குமாறு பார்த்துக் கொள்ளல் அவசியம்.
2. ஒவ்வொரு குழுவில் உள்ள குழந்தைகளில் இருந்து ஒரு பொறுப்பாளரை தேர்வு செய்ய வேண்டும். இதில் பெண் குழந்தைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படல் வேண்டும்.



**உங்களுக்குத் தெரியுமா?**

- உலகில் 220 கோடி பேர் சுத்தமான குடிநீர் கிடைக்காமல் அல்லல்படு கின்றனர்.
- 350 கோடி பேர் போதிய கழிப்பறை வசதியின்றி வாழ்கின்றனர்.
- 220 கோடி பேர் நன்கு கைகழுவும் வசதியின்றி உள்ளனர்.

- நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் குறித்த ஐ.நா. அறிக்கை 2023

**செயல்பாடு -02 களப்பணியைத் தொடங்குதல்**



1. தகவல் சேகரிக்கும் போது தாங்கள் யார் என்பதைத் தெளிவாக அறிமுகப் படுத்திக் கொள்ள வேண்டும். குறிப்பாக நமது அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றத்தைப் பற்றி தெளிவாகக் கூற வேண்டும்.
2. குடிநீர் பிடிக்கும் இடத்தில் உள்ள நீரைப் பார்த்து அது எப்படி உள்ளது என்பதைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்.
3. கிராமத்தை முழுமையாக சுற்றிப்பார்த்து உற்றுநோக்கி தகவல்களைச் சேகரிக்க வேண்டும்.

இறுதியாக மக்களிடம் தங்களுக்கு வேண்டிய தகவல்களைக் கேட்டுப் பெறலாம்.

**செயல்பாடு-03- தகவல்களைத் தொகுத்து அறிக்கை தயாரித்தல்**

1. தாங்கள் பார்த்த, கேட்ட, உற்று நோக்கித் திரட்டிய தகவல்களை அறிக்கையாகத் தொகுக்க வேண்டும்.
2. தொகுத்த அறிக்கையிலிருந்து நீங்கள் கண்டறிந்தவற்றை அடிப்படையாக வைத்து, நமது ஊரில் சுகாதாரத்தை மேம்படுத்த உங்களுடைய பரிந்துரைகளை அளிக்கலாம்.
3. பரிந்துரைகளை அடுத்த மன்றக் கூட்டத்தில் பகிர்ந்து கொள்ள வேண்டும். பிறகு அதனை உள்ளாட்சித் தலைவர்கள், சுகாதாரத்துறை அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும்.
4. மன்றத்தில் கலை, கல்வி, பண்பாடு போன்ற துணைக் குழுக்களை உருவாக்கி அவற்றின் மூலம் பொதுச் சுகாதாரம், அரசு மருத்துவமனைகள் போன்ற தலைப்புகளில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள், நாடகங்கள் மற்றும் பிற போட்டிகளைக் கிராம அளவில் நடத்தலாம்.



**செயல்பாடு-04 - கட்டுரை எழுதுதல்**



'பொதுச் சுகாதாரம் நம் அடிப்படை உரிமை' என்ற தலைப்பில் அனைத்து மன்ற உறுப்பினர்களும் இரண்டு பக்கக் கட்டுரை எழுதலாம். இக் கட்டுரையை எழுதியபின், அடுத்த மன்றக் கூட்டங்களில் இதனை வாசிக்கச் செய்யலாம்.

'நான் ஊராட்சி மன்றத் தலைவரானால்', நமது ஊரின் சுகாதாரத்தை மேம்படுத்த என்னென்ன செய்வேன்? என்று அனைத்து மன்ற உறுப்பினர்களும் ஒரு பக்கக் கட்டுரை எழுதலாம்.

**செயல்பாடு-05 மனுக்கள் சமர்ப்பித்தல்**

நமது ஊரை கள ஆய்வு செய்ததன் அடிப்படையில், நமது பகுதி சுத்தம், சுகாதாரம் குறித்தும், கழிவு நீர் செல்வது குறித்தும், தேங்கிக் கிடக்கும் சாக்கடையைச் சுத்தம் செய்வது குறித்தும் நமது மன்றம் சார்பில் உள்ளாட்சி மன்றத் தலைவருக்கு மனுக்கள் அனுப்பலாம்.



## எதிர்பார்க்கும் விளைவுகள்

- நாம் வசிக்கும் பகுதியில் பொதுச் சுகாதாரத்தின் நிலை என்ன என்று குழந்தைகள் தெரிந்திருப்பர்.
- நலவாழ்வு நமது அடிப்படை உரிமை என்ற புரிதல் அனைத்துக் குழந்தைகளுக்கும் ஏற்பட்டிருக்கும்.
- நோய்த் தடுப்பு முறைகளையும், பொதுச் சுகாதாரத்தை மேம்படுத்துவதிலும், மக்களின் நலவாழ்வைக் காப்பதிலும் அரசுக்குள்ள கடமைகள் எவை என்பதை குழந்தைகள் புரிந்து கொள்வர்.



# எனக்கென்று ஒரு கனவு உண்டு!

**நம் ஊரில் சுகாதாரம் எப்படி இருக்கவேண்டும் என்ற கனவு நமக்கு இருக்க வேண்டும் அல்லவா?**

- எங்கள் ஊரில் வசிக்கும் அனைவருக்கும் சுத்தமான, பாதுகாக்கப்பட்ட குடிநீர் போதுமான அளவு வழங்கப்பட வேண்டும்.
- அனைத்து வீடுகளிலும் கழிப்பறைகள் இருக்க வேண்டும். திறந்தவெளி மலம் முற்றிலும் ஒழிக்கப்பட்ட பகுதியாக நமது வசிப்பிடம் அமைய வேண்டும்.
- நாம் வசிக்கும் பகுதியில், கழிவு நீரோ, சாக்கடையோ தேங்காமல் கழிவு நீர் செல்ல நல்ல வசதிகள் செய்யப்பட்டிருக்க வேண்டும்.
- சுகாதாரக்கேடு இல்லாத பகுதியில் தூய்மை யான காற்றை சுவாசிக்க ஏதுவான சூழலில் நாங்கள் வசிக்க வேண்டும்.
- சுகாதாரமும் நல்வாழ்வும் நமது அடிப்படை உரிமை என்ற புரிதல் நமது ஊரில் வசிக்கும் அனைத்து மக்களுக்கும் இருக்க வேண்டும்.





# 5 பாலின சமத்துவமும் சம பங்கேற்பும்




> ஒரு சமூகத்தின் முன்னேற்றத்தை பெண்கள் அடைந்த முன்னேற்றத்தின் அளவை வைத்து அளவிடுகிறேன்.
>
> **- அண்ணல் அம்பேத்கர்**

## நோக்கங்கள்

1. பாலின சமத்துவம் குறித்த புரிதலை குழந்தைகளிடம் உருவாக்குதல்
2. நமது பகுதியில் பல்வேறு நிலைகளில் பாலின சமத்துவம் நிலவுகிறதா என்பதை கள அனுபவம் மூலமாக குழந்தைகள் அறிந்து கொள்ளல்
3. அனைத்து நிலைகளிலும் பெண்களின் முழுமையான சம பங்கேற்பு அவசியம் என்பதை குழந்தைகளுக்கு உணர்த்துதல்

## 1. அறிமுகம்

குழந்தைகளே!

முந்தைய பாடத்தில் நலவாழ்வு குறித்தும், நோயற்ற வாழ்வு வாழ்வதற்கான அடிப்படைத்தேவைகள் குறித்தும் விரிவாகப் பார்த்தோம். நம் சமூகத்தில் ஆண்களும், பெண்களும் எண்ணிக்கையில் ஏறத்தாழ சம அளவில் இருக்கிறோம். இன்றைய சூழலில் திருநர்கள் மீதான மாண்பும், புரிதலும் ஏற்பட்டுள்ளது. எனவே, பாலின சமத்துவம் குறித்து கூடுதலாக சிந்திக்க வேண்டிய அவசியம் உள்ளது.

குடும்பங்களில், பள்ளிகளில், வேலை செய்யும் இடங்களில், ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சமமான அளவில் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறதா? அனைத்துத் தளங்களிலும் பெண்களுக்கான அங்கீகாரம் வழங்கப்படுகிறதா? என்பன போன்ற கேள்விகள் எழும்புகின்றன.

பெண்களும், ஆண்களும் சமூகத்தில் சமமாக முக்கியத்துவம் பெறும் வகையில் உலகளவில், தேசிய அளவில் பல்வேறு சட்டங்களும், திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன. அவை கொஞ்சம் கொஞ்சமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனாலும், பாலினம் சார்ந்த பாகுபாடுகள், ஏற்றத்தாழ்வுகள், துன்புறுத்தல்கள், வன்முறைகள் போன்றவை நம் சமூகத்தில் நிறைந்தே உள்ளன.

பெண்களைத் துன்புறுத்துவதும், வன்முறைகளுக்கு உட்படுத்துவதும் நாகரீகமான சமூகத்திற்கு அடையாளம் அல்ல. பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நிறைந்த இச்சமூகத்தில், திருநர், திருநங்கைகள் மீதான வன்மங்களும் வன்முறைகளும் நிறைந்துள்ளன. நம் ஊரில் பாலின சமத்துவம், பெண்களின் பங்கேற்பு நிலை எவ்வாறு உள்ளது என்பதை அறிவதுடன், மக்களிடம் இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் நாம் மேற்கொள்ளும் இப்பயணத்தின் முக்கிய நோக்கமாகும்.



## 2. திட்டமிடுதல்

1. அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றத்தில் உள்ள குழந்தைகளுக்கு பாலின சமத்துவம் குறித்து கலந்துரையாடல்கள் மூலம் அடிப்படைப் புரிதலை உருவாக்குவது.
2. பாலின சமத்துவம் குறித்து கள அனுபவத்திற்கான திட்டமிடலில் கேள்விகளைத் தயார் செய்வது.

## 3. பாலின சமத்துவம் குறித்த களப்பணி

இதற்கு முந்தைய பாடத்தில் குறிப்பிட்டது போல், களப் பணிக்காக நாம் குழுக்களாக பிரிந்து, மையப்பகுதியில் கூடி, ஒவ்வொரு தெருவாகச் சென்று திட்டமிட்ட கேள்விகளுக்கான பதில்களையும், விவரங்களையும் பெறுவது. தகவல் திரட்ட வேண்டிய கேள்விகள் பின்வருமாறு.

### 1. நம் பகுதியில் பெண்களின் கல்வி நிலை



- பள்ளிக்கூடம் சென்று கல்வி பயில இயலாத குழந்தைகளின் எண்ணிக்கை
- ஆரம்பக் கல்வி வரை படித்த பெண் குழந்தைகளின் எண்ணிக்கை
- நடுநிலைக் கல்வி வரை படித்த பெண் குழந்தைகளின் எண்ணிக்கை
- உயர்நிலைக் கல்வி வரை படித்த பெண் குழந்தைகளின் எண்ணிக்கை
- மேல்நிலைக் கல்வி வரை படித்த பெண்களின் எண்ணிக்கை
- இளங்கலைக் கல்வி படித்த பெண் களின் எண்ணிக்கை
- முதுகலை கல்வி படித்த பெண் களின் எண்ணிக்கை
- தொழில்நுட்ப கல்வி படித்த பெண்களின் எண்ணிக்கை
- தொழில்நெறிமுறைக் கல்வி படித்த பெண்களின் எண்ணிக்கை (மருத்துவம், பொறியியல், வழக்கறிஞர், பிறதுறைகளில் உயர்கல்வி உள்ளிட்டவை)
- முனைவர் பட்டம் பெற்ற பெண்களின் எண்ணிக்கை



## 2. பல்வேறு பணிகளில் பெண்களின் நிலை

- நம் பகுதியில் அரசுப் பணிகளில் எத்தனைப் பெண்கள் உள்ளனர்? அவர்கள் வகிக்கும் பதவி குறித்த விவரங்களை சேகரிக்கவும்.
- நம் பகுதியில் அரசுப் பணி அல்லாத தனியார் துறையில் வேலை செய்யும் பெண்களின் எண்ணிக்கை.
- நம் பகுதியில் அமைப்பு சாரா துறையில் வேலை செய்யும் பெண் தொழிலாளர் களின் எண்ணிக்கை.
- கிராமத்தில் உள்ள அரசு அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் கடைகளில் பெண்கள் எவ்வகையான பணிகள் செய்கின்றனர்?
- பணித்தளங்களில் பெண்களுக்கு உரிய அங்கீகாரம் உள்ளதா?
- ஒரே மாதிரியான வேலைக்கு ஆணுக்கும், பெண்ணுக்கும் சம ஊதியம் வழங்கப்படுகிறதா?

## 3. பணித்தளங்களில் பாகுபாடு, வன்முறைகள் பெண்களுக்கான பாதுகாப்பின்மை

- பெண் என்பதாலே சமூகத்திலும் பணித்தளங்களிலும் பாகுபாடு காட்டப்படு கின்றனவா? ஆம் எனில், எவ்வகையான பாகுபாடு?
- நம் பகுதியில் பெண்களுக்குப் போதுமான பாதுகாப்பு உள்ளதா?
- நம் பகுதியில் பெண்களுக்கு எதிராக எவ்வகையான வன்முறைகள் நிகழ்கின்றன?
- நமது வீடுகளில் ஆண் குழந்தைகளும், பெண் குழந்தைகளும் சமமாக நடத்தப்படுகின்றனரா? ஆம் எனில், எவ்வாறு?




**4. பொதுவானவை**

- மகளிர் காவல் நிலையம் அருகில் உள்ளதா?
- நம் பகுதியில் குழந்தைத் திருமணங்கள் நடைபெற்றுள்ளனவா?
- உள்ளாட்சிப் பதவிகளில் பெண்கள் உள்ளனரா? அவர்கள் சுதந்திரமாக பணியாற்ற முடிகிறதா?
- கிராமத்தில் உள்ள பெண்களுக்கு மகப்பேறு குறித்த விழிப்புணர்வு உள்ளதா?
- கிராமத்தில் நம் பெண்களுக்கு மாதவிடாய் குறித்து போதிய விழிப்புணர்வு உள்ளதா?
- ஊர்ப் பொதுக் கூட்டங்களில் பெண்கள் சமமாகப் பங்கெடுக்க முடியுமா? ஆண்களுக்கு இணையாக இக்கூட்டங்களில் சரிசமமாகப் பேச முடியுமா?
- நமது கிராமத்தில் பெண்கள் வாசிப்பு இயக்கம் உண்டா?
- நம் பகுதியில் எத்தனை பெண்களுக்கு குடும்பச் சொத்தில் பங்கு உள்ளது என்பதை கேட்டு அறியவும்.

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று எண்ணி இருந்தவர் மாய்ந்து விட்டார். வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்"

\- பாரதியார்





## உங்களுக்குத் தெரியுமா?

தமிழகம் அறிந்த கல்வியாளரும், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும், நமது அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டத்தின் ஆலோசனைக் குழுவின் தலைவருமான முனைவர் வே. வசந்திதேவி அவர்களின் வழிகாட்டலில் இயங்கி வரும் பள்ளிக் கல்விப் பாதுகாப்பு இயக்கத்தின் செயல்பாடுகளில் ஒன்றாக "ஊர்கூடும் மையம்" என்ற ஓர் அமைப்பு தமிழகத்தின் பல இடங்களில் உருவாக்கப் பட்டுள்ளது. சமூக அக்கறை கொண்ட சில ஆசிரியர்களும், தன்னார்வலர்களும் இதனை நடத்தி வருகின்றனர்.

சில கிராமங்களில் வாரந்தோறும் நடைபெறும் இந்தக் கூட்டங்களில் பெரும் எண்ணிக்கையில் பெண்கள் ஆர்வத்தோடு கலந்து கொள்கின்றனர். கூட்டங்களில் வழங்கப்படும் சிறிய, எளிய புத்தகங்களை ஆர்வத்துடன் இவர்கள் வாசிக் கின்றனர். வாசிக்க இயலாத பெண்களும் புத்தகங் களைக் கையில் எடுத்துப் புரட்டிப் பார்த்து, படங்களைப் பார்த்து மகிழ்கின்றனர். அது குறித்து உரையாடுகின்றனர்; உடனே வீடு திரும்ப மனமில்லாமலே திரும்பிச் செல்கின்றனர்.








### பெண்களுக்கான வாசிப்பு இயக்கம் : பெண் கல்வி மையம்

தமிழ்நாடு அரசு பள்ளி மாணவர்களுக்கு பள்ளிகளில் 'வாசிப்பு இயக்கம்' என்ற ஒன்றை உருவாக்கியுள்ளது. அதேபோல ஒவ்வொரு கிராமக் குடியிருப்பிலும், நகரப் பகுதிகளிலும், 'பெண்கள் வாசிப்பு மையம்' அமைக்க வேண்டும். அவற்றை நடத்தும் பொறுப்பு உள்ளாட்சிப் பெண் உறுப்பினர்களிடம் அளிக்கப்பட வேண்டும். அதனை நடத்துபவர்கள் அனைவரும் பெண்களாக இருக்க வேண்டும். இதுபோன்ற மையம் நடத்துவதற்கு ஏதுவான ஒரு இடம் ஒதுக்கப்பட வேண்டும். அது நகர்ப் புறங்களில் சமுதாயக் கூடங்களின் ஒரு பகுதியாக இருக்கலாம். நூலகங்கள் இருந்தால், அவற்றையே இதுபோன்ற மையங்களாக மாற்றி பெண்களை வாசிப்பு இயக்கத்திற்கு அதிக அளவில் வரவழைத்துப் பயன் பெறச் செய்யலாம் என்று முனைவர் வே. வசந்திதேவி அவர்கள் கூறியுள்ளார்கள்.

(பெண் கல்வி மையம் : பிறக்கட்டும் புதிய திட்டம் - வே. வசந்திதேவி, இந்து தமிழ் திசை 13, செப்டம்பர், 2023)

## 4. பாலின சமத்துவம் - நாம் என்ன செய்ய வேண்டும்?

### செயல்பாடு - 01 தகவல் திரட்டல், அறிக்கை தொகுப்பு, கலந்துரையாடல்

களப்பணியின் போது திரட்டிய தகவல்களை அனைவரும் ஒன்றாக ஓரிடத்தில் அமர்ந்து தொகுக்க வேண்டும். அவற்றைப் பல்வேறு துணைத் தலைப்புகளாக வகைப்படுத்தி அறிக்கையாகத் தொகுக்கலாம். மன்றக் குழந்தைகள் அனைவரும் ஒன்றாக இணைந்து களப்பணியின் போது திரட்டிய தகவல்கள் குறித்து கலந்துரையாடலாம். அதன்படி ஓரிரு செயல்பாடுகளை மேற்கொள்ளலாம்.

### செயல்பாடு - 02 பாலின சமத்துவம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

மன்ற உறுப்பினர்கள் இணைந்து தங்கள் பகுதியில் பாலின சமத்துவம் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளை நடத்தலாம். ஒவ்வொரு வீடாகச் சென்று பெண்களின் உரிமைகள் குறித்த விழிப்புணர்வுக் கலந்துரையாடல்களை நிகழ்த்தலாம். பாலின சமத்துவம், பெண் கல்வி குறித்த விழிப்புணர்வுப் பாடல்களைப் பாடலாம்.

### செயல்பாடு - 03 பாலின சமத்துவம் குறித்து கலந்துரையாடல்

நமது வீடுகளில் ஆண் குழந்தைகளும், பெண் குழந்தைகளும் அனைத்து நிலைகளிலும் சமமாக நடத்தப்படுகின்றனரா என்று மன்றங்களில் ஒரு சிறப்பு கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யலாம். தங்கள் வீடுகளில் ஆண், பெண் சமத்துவம் குறித்து ஒவ்வொருவரும் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளலாம். கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்களைப் பார்த்து மன்றக் குழந்தைகள் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளலாம்.



**செயல்பாடு-04 - பாலின சமத்துவம் குறித்த பேச்சுப் போட்டி**

"ஏன் வேண்டும் பாலின சமத்துவம்? என்ற தலைப்பில் மன்றக் குழந்தைகள் ஒரு பேச்சுப் போட்டியில் பங்கேற்கலாம். ஐந்து நிமிடத்திற்கு பேசும் வகையில், இந்த தலைப்பில் கலந்து கொள்ளும் குழந்தைகளைத் தயார் செய்து வரச் சொல்லலாம்.

**செயல்பாடு-05 - ஊராட்சி மன்றத் தலைவரிடம் முறையிடல்**

ஊராட்சி மன்றத் தலைவர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்களைச் சந்தித்து பெண் குழந்தைகளின் கல்வி, பெண் குழந்தைகள் மீதான வன்முறைகள், பணியிடங்களில் பெண்கள் மீதான பாகுபாடுகள், வன்முறைகள், பெண்களுக்கு வழங்கப்படும் சமமற்ற ஊதியம் போன்றவை குறித்து முறையிடலாம்.

## பெண்களுக்கு உயர்கல்வி உறுதித்திட்டத்தின் கீழ் மாதம் ரூ. 1000/-

தமிழ்நாட்டில் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் உயர்கல்வி சேர்க்கையினை அதிகரிக்கும் பொருட்டு, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டத்தின் கீழ் அரசுப் பள்ளியில் பயின்று, கல்லூரிகளில் சேரும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000/- வழங்கும் திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் ஆண்டுக்கு சுமார் ஆறு இலட்சம் மாணவிகள் பயன்பெறுவார்கள். மாணவிகள் கல்லூரி மேல்படிப்பை தொடர்கின்றனரா என்றும், ஒவ்வொரு ஆறு மாதமும் உயர்கல்வித் துறை சார்பில் உறுதி செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



**செயல்பாடு-06 - நமது பகுதியில் இருக்கும் பெண் தலைவர்களோடு உரையாடல்**

நமது பகுதியில் முக்கியமான பொறுப்புகளை வகிக்கும் பெண் தலைவர்கள் இருவரை நம் மன்றத்திற்கு சிறப்பு விருந்தினர்களாக வரவழைத்து, அவர்கள் வெற்றிகரமாக அப்பணியை ஆற்றுவது, அவர்கள் பணியில் எதிர்கொண்ட சவால்கள், அவற்றை அவர்கள் சமாளித்த விதம் போன்றவை குறித்து அவர்களிடம் ஓர் உரையாடலுக்கு ஏற்பாடு செய்வது. (பெண் பஞ்சாயத்து தலைவரோ அல்லது பெண் கல்வி அதிகாரியாகவோ அல்லது பெண் அரசு அதிகாரியாகவோ இருக்கலாம்)

**செயல்பாடு-07 - "பெண் கல்வியின் முக்கியத்துவம்" என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டி**

மன்றக் குழந்தைகள் அனைவரும் பங்கேற்கும் வகையில் "பெண் கல்வியின் முக்கியத்துவம்" என்ற தலைப்பில் 3 பக்க அளவிலான ஒரு கட்டுரைப் போட்டி நடத்தலாம். இத்தலைப்பில் கொஞ்சம் தகவல்களை மன்றக் குழந்தைகளுக்கு கூறி ஆர்வத்தை உண்டாக்கலாம். அரை மணி நேரம் கால அவகாசம் அளித்து கட்டுரையை எழுதச் சொல்லலாம்.

**செயல்பாடு-08 - முக்கியமான பெண் ஆளுமைகளின் படங்கள் இடம்பெறும் கண்காட்சி ஏற்பாடு**

வரலாற்றில் இடம் பிடித்த முக்கிய பெண் தலைவர்கள் படங்களைச் சேகரித்து, அவர்களது பங்களிப்பை எடுத்துக் கூறும் வகையில் ஒரு கண்காட்சிக்கு மன்றக் குழந்தைகளே ஏற்பாடு செய்யலாம். நெறியாளர் மன்றக் குழந்தைகளுக்கு இக்கண்காட்சியின் முக்கியத்துவத்தை உணர்த்தி, எல்லாக் குழந்தைகளையும் இக்கண்காட்சியில் ஈடுபடுத்த வேண்டும்.



## நவீன இந்தியாவின் பெண் கல்விக்கு வித்திட்ட சாவித்ரி பாய் ஃபுலே



இந்தியப் பெண்களின் கல்வி மற்றும் மேம்பாட்டிற்கான களத்தில் முன்னோடியாகத் திகழ்ந்தவர் சாவித்ரி பாய் ஃபுலே. மராட்டிய மாநிலத்தில் உள்ள நைகான் என்ற கிராமத்தில் 1831 ஆம் ஆண்டில் பிறந்த இவர்தான் இந்தியாவின் முதல் பெண் ஆசிரியர் என்று அங்கீகரிக்கப்படுபவர்.

பெண்களுக்கென்று தனிப்பட்ட உரிமைகள் இல்லாமல் இருந்த காலக்கட்டத்தில், சமூக சீர்திருத்தவாதியான தனது கணவர் ஜோதிராவ் ஃபுலேவுடன் இணைந்து பெண்களின் மேம்பாடு மற்றும் அதிகாரம் பெறுதல் குறித்து எதிர்ப்புகளையும் மீறி தொடர்ந்து கடுமையாக உழைத்தவர் சாவித்ரி பாய். முதலில் சிறுமிகளுக்கு கல்வி கற்பித்தவர். பின்னர் பெண்களுக்காகவே பெண் பள்ளி ஒன்றை முதன்முதலாகத் தொடங்கிய பெருமை இவரைச் சாரும். ஆதிக்கச் சாதியினரால் கடுமையாகக் குறிவைத்துத் தாக்கப்பட்டு, இழிவுப்படுத்தப் பட்டாலும், தனது கொள்கையை விட்டுக் கொடுக்காமல், பெண் கல்வியைக் கொண்டு செல்வதில் முனைப்போடு செயல்பட்டவர் இவர். 1848 முதல் 1852 வரை மராட்டிய மாநிலம் முழுவதும் 18 பள்ளிகளையும், ஏழை மாணவர்களுக்காக 52 இலவச விடுதிகளையும் திறந்த பெருமை இவருக்கு உண்டு. பிரிட்டிஷ் அரசாங்கம் இவரது பணியை அங்கீகரித்து, சாவித்ரி பாய்க்கு 'சிறந்த ஆசிரியர்' பட்டம் வழங்கிப் பாராட்டியது.



இந்தியப் பெண்கள் கல்வி, சொத்து, திருமண வாழ்க்கை ஆகிய எந்தத் துறையிலும் சுயேச்சை இல்லாதவர்களாக இருக்கின்றனர்.

தற்காலப் படிப்பு ஆண்களை தொடை நடுங்கிகளாகவும், வெறும் புத்தகப் பூச்சிகளாகவும் ஆக்கிவிட்டதைப் போலவே, நம் பெண் மக்களையும் வெறும் அலங்காரப் பொம்மைகளாகவும், புல் தடுக்கிகளாகவும் ஆக்கிவிட்டது.

- தந்தை பெரியார் 15, நவம்பர், 1946

# அரசியல் பங்கேற்பில் பாலின சமத்துவம்



இந்திய நாடாளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் உலகளாவிய சராசரியை விட மிகக் குறைவாக உள்ளது. இந்திய அரசுப் பணி மற்றும் நாடாளுமன்றத்தின் மேலவை, மக்களவை ஆகியவற்றில் பெண்களின் பிரதிநிதித்துவ அடிப்படையில் இந்தியா 148வது இடத்தில் உள்ளது. 543 உறுப்பினர்களைக் கொண்ட கடந்த மக்களவையில் (லோக்சபாவில்) பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை வெறும் 64. இது மொத்த எண்ணிக்கையில் 11.8 விழுக்காடு மட்டுமே. இதேபோல 245 உறுப்பினர்களைக் கொண்ட மேலவையில் (ராஜ்யசபையில்) வெறும் 27 பெண் உறுப்பினர்கள் உள்ளனர்.

மக்களவையிலும், சட்டமன்றங்களிலும் பெண்களுக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீட்டை உறுதிப்படுத்தும் வகையில் 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் 21 ஆம் தேதி சட்டம் கொண்டு வரப்பட்டது. 25 ஆண்டுகளுக்கு மேலாக கிடப்பில் போடப்பட்ட இந்தச் சட்டம், இப்போது ஒப்புதல் பெற்று உயிர் பெற்றுள்ளது. இது எப்போது நடைமுறைக்கு வரும் என்பது தெரியவில்லை.

இந்தியாவின் பல பகுதிகளிலும் உள்ளாட்சி மன்றங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் தலைவர்கள் சுதந்திரமாகச் செயல்பட இயலாத நிலையே உள்ளது. பெண் உள்ளாட்சி மன்றத் தலைவர்களின் கணவன்மார்களே உண்மையான தலைவர்களாக வலம் வருகின்றனர். இவர்கள்தான் பல நேரங்களில் முடிவு எடுக்கும் அதிகாரம் படைத்தவர்களாகவும் உள்ளனர். உள்ளாட்சிகளில் பெண் தலைவர்கள் பெரும்பாலும் கைப்பொம்மைகளாகவே இருப்பதைக் காண முடிகிறது. இந்நிலை மாறவேண்டும் அல்லவா?

## இலக்கு 5




- பாலின சமத்துவம் - பெண்கள், பெண் குழந்தைகளை அதிகாரப்படுத்துவது.
- அனைத்து நிலைகளிலும் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் மீதான அனைத்து வகையான பாகுபாட்டு வடிவங்களும் ஒழிக்கப்பட வேண்டும்.
- பொது இடங்களிலும், தனியார் துறைகளிலும் பெண்களுக்கும், பெண் குழந்தைகளுக்கும் எதிராக நிகழ்த்தப்படும் அனைத்து வகையான வன்முறைகளும் முற்றலுமாக ஒழிக்கப்பட வேண்டும்.

### எதிர்பார்க்கும் விளைவுகள்

- பாலின சமத்துவம் என்றால் என்ன என்ற புரிதலும் அனைத்து நிலைகளிலும் பாலின சமத்துவத்தின் அவசியம் குறித்த விழிப்புணர்வும் ஏற்பட்டிருக்கும்.
- சமூக நிலைகளில் பெண்களின் சமபங்கேற்பு குறித்த உணர்வு உருவாகியிருக்கும்.
- பெண் கல்வியின் அவசியம் குறித்த புரிதல் ஏற்பட்டிருக்கும்.



# எனக்கென்று ஒரு கனவு உண்டு!

**நம் ஊரில் ஆண் - பெண் சமத்துவம் பற்றிய கனவு நமக்கு இருக்க வேண்டும் அல்லவா?**

- எங்கள் ஊரில் ஆண்-பெண் பாகுபாடின்றி, அனைத்துத் தளங்களிலும் பெண்களுக்கு சம வாய்ப்பும், சமமான பங்கேற்பும் இருக்க வேண்டும்.
- எங்கள் வீடுகளில் ஆண் குழந்தைகளும், பெண் குழந்தைகளும் சமமாகப் பாவிக்கப்பட வேண்டும். பெண் குழந்தை என்பதாலே எந்தவிதமான வாய்ப்பும் அவர்களுக்கு மறுக்கப்படக் கூடாது.
- பெண்களுக்கும், பெண் குழந்தைகளுக்கும் முழுமையான பாதுகாப்பு இருக்க வேண்டும். பாலியல் கொடுமைகள் இல்லாத ஊராக, பெண்கள் மீதான வன்முறைகள் இல்லாத ஊராக எங்கள் பகுதி அமைய வேண்டும்.
- அனைத்து நிலைகளிலும் பெண்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் முழுமையாக வழங்கப்பட வேண்டும்.
- முடிவு எடுக்கும் அதிகாரம் உள்ள பொறுப்புகளில் பெண்களும் ஆண்களுக்கு நிகராக இருக்க வேண்டும்.





# 6 உள்ளாட்சி அமைப்புகளும் மக்கள் பிரதிநிதிகளும்



அடித்தளத்திலிருந்து கட்டமைப்பதே மிகச் சிறந்த பயனுள்ள வழியாகும். ஒவ்வொரு கிராமமும் சுயசார்புடைய குடியரசாக மலர வேண்டும். இதை உருவாக்க மிகப்பெரிய சட்ட மாற்றங்கள் அவசியமில்லை. இதற்கு தேவையானது துணிச்சலும், கூட்டுறவு மனப்பான்மையும், திட்டமிடலும் தான்.

- மகாத்மா காந்தி

## நோக்கங்கள்

1. உள்ளாட்சி அமைப்புகளின் கட்டமைப்பு, உள்ளாட்சிப் பிரதிநிதிகளின் பணிகள் குறித்து குழந்தைகள் தெரிந்து கொள்ளல்
2. நமது பகுதியில் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு பற்றி கள அனுபவம் மூலம் அறிந்து கொள்ளல்
3. நமது பகுதியில் கிராமங்களின், நகரங்களின் முழுமையான வளர்ச்சிக்கு உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு மிக அவசியம் என்ற புரிதல் குழந்தைகளுக்கு உருவாகுதல்

## 1. அறிமுகம்

குழந்தைகளே!

இந்தியா ஒரு சனநாயக நாடு என்பதும், மக்களாட்சி அமைப்பு முறையைக் கொண்டது என்பதும் நம் அனைவருக்கும் தெரியும். நமது ஆட்சியாளர்களை மக்கள் அனைவரும் சேர்ந்து வாக்களித்து தெரிவு செய்யும் முறையே சனநாயகக் குடியரசின் முக்கிய பண்பாகும். அவ்வப்போது தேர்தல் தொடர்பான செய்திகளைக் கேட்டிருப்போம். நாளிதழ்களிலும், தொலைக்காட்சிகளிலும் இது குறித்த செய்திகளைப் பார்த்திருப்போம். எதற்காக இத்தேர்தல்கள் நடைபெறுகின்றன என்று தெரியுமா?

நம்மை ஆளும் நாடாளுமன்ற, சட்டமன்ற, உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யவே தேர்தல்கள் நடைபெறுகின்றன. நாடாளுமன்றம், சட்டமன்றம் போலவே "பஞ்சாயத்து ராஜ்" என்று அழைக்கப்படும் உள்ளாட்சி மன்றங்களும் மக்களாட்சிக் கூறுகளில் ஒன்றாகும். இந்த மூன்றடுக்கு நிலை இந்திய மக்களாட்சியின் சிறப்பு அம்சமாகும்.









### உங்களுக்குத் தெரியுமா?

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம்- 1994இன்படி தமிழகத்தில் உள்ளாட்சி அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன.

- கிராம ஊராட்சி மன்றத் தலைவர், உறுப்பினர்கள்
- ஊராட்சி ஒன்றியம் - ஒன்றியத் தலைவர், ஒன்றியக் குழு உறுப்பினர்கள்
- மாவட்ட ஊராட்சி - மாவட்டக் குழுத் தலைவர், உறுப்பினர்கள்.
- ஊராட்சிகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை மக்கள் தொகையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு அமையலாம்
  - 500 முதல் 2000 வரை - 6 உறுப்பினர்கள்
  - 2000 முதல் 6000 வரை - 9 உறுப்பினர்கள்
  - 6000 முதல் 10000 வரை-12 உறுப்பினர்கள்
  - பத்தாயிரத்திற்கும் அதிகமான மக்கள் தொகை
- கிராம ஊராட்சியில் 2 முதல் 5 வார்டுகள் இருக்கும்.
- பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும்.
- மூன்றில் ஒரு பங்கு பெண்களுக்கு ஒதுக்க வேண்டும்.
- ஓராண்டில் குறைந்தது நான்கு முறை கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும்.

மேற்கண்ட மன்றங்களில் பெரும்பான்மையாகத் தெரிவு செய்யப்பட்டு ஆட்சி அதிகாரத்தில் அமர்வோர் மக்கள் நலனுக்கான திட்டங்களையே தீட்டுவார்கள். அத்திட்டங்களைப் பொருத்தமான துறைகளுடன் இணைந்து நடைமுறைப் படுத்துவது அவர்களது கடமைகளாகும்.

இந்திய அளவில் நாடாளுமன்றமும், தமிழக அளவில் சட்டமன்றமும் இருந்தாலும், மிகுதியாக மக்கள் பங்கேற்கும் அமைப்பாக உள்ளாட்சி அமைப்புகளே உள்ளன. சனநாயகத்தை நாம் நேரடியாக, அருகிலேயே கண்டுணரும் ஓர் அமைப்பாக இயங்குபவையே இந்த உள்ளாட்சி அமைப்புகள். இந்த உள்ளாட்சியின் அதிகாரங்கள், செயல்பாடுகள் குறித்து நாம் தெளிவாக அறிந்து கொள்ளும் வகையில் இப்பயணம் அமையும்.

## 2. களப் பணி: கிராம ஊராட்சி அலுவலகத்தைப் பார்வையிடுதல்

நம் கிராம ஊராட்சி அலுவலகத்தைப் போய்ப் பார்ப்போமா? நம் ஊராட்சி மன்றத் தலைவரையும், ஒரு சில உறுப்பினர்களையும் நேரில் சந்தித்து நம் ஊராட்சி அமைப்பு எவ்வாறு செயல்படுகிறது என்பதை அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வோமா? அதோடுகூட அவர்களது கடமைகளையும், பொறுப்புகளையும் அறிந்து கொள்வோமா? கிராம ஊராட்சிகளுக்கு இருக்கின்ற அதிகாரங்களையும், கிராம வளர்ச்சிக்கு இவை எவ்வாறு அவசியம் என்பதையும் தெரிந்து கொள்வோமா?

- நம் ஊரில் இயங்கும் ஊராட்சி அலுவலகம் சென்ற பின்பு அலுவலகத்தை முழுமையாக சுற்றிப் பார்த்துவிட்டு, ஊராட்சி மன்றத் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் ஊராட்சி உதவியாளரைச் சந்தித்து நம்மை அறிமுகப்படுத்திக் கொள்ளலாம்.
- சந்திப்பிற்கான நோக்கத்தை நெறியாளர் அவர்களிடம் பகிர்ந்து கொள்ளலாம்.
- அதில் அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றம் பற்றியும், நமது பகுதியில் அதன் செயல்பாடுகள் பற்றியும் விளக்கமாகக் கூறலாம்.
- ஊராட்சி மன்றத் தலைவர் அல்லது உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படும் முறையைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். ஊராட்சி மன்ற அலுவலகம் செயல்படும் முறையையும் இந்த உரையாடல் மூலம் அறிந்து கொள்ளலாம்.
- இறுதியாக, மன்றக் குழந்தைகள் தங்களின் சந்தேகங்களையும், கேள்வி களையும் அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.
- சந்திப்பின் நிறைவாக மன்றக் குழந்தைகள் ஊராட்சி மன்றத் தலைவர், உறுப்பினர்களுடன் இணைந்து குழுப் புகைப்படம் எடுத்துக் கொள்ளலாம்.
- இந்தச் சந்திப்பு குறித்து தினசரி நாளிதழ்களுக்கு மன்ற நெறியாளர் பத்திரிகைச் செய்தி அளிக்கலாம்.



## 3. கிராம ஊராட்சிகளின் கடமைகளும், அதிகாரங்களும்

1. கிராமத்தில் சாலைகள் அமைத்தல், சிறு பாலங்கள் கட்டுதல்
2. மனையிடங்களை விரிவாக்குதல், கட்டிடம் கட்டுவதற்கான அனுமதி அளித்தல்
3. பொது இடங்களில் தெருவிளக்கு வசதி செய்தல்
4. கிராமத்தில் வடிகால் வசதிகளைச் செய்தல்
5. பொது இடங்களைத் துப்புரவாக்குதல் அல்லது சுத்தப்படுத்துதல்
6. கிராமத்தில் பொதுக் கழிப்பிடங்களுக்கு ஏற்பாடு செய்தல்
7. இடுகாடுகளையும், சுடுகாடுகளையும் ஏற்படுத்தி அவற்றைப் பேணி வருதல்
8. கிராம மக்களின் பயன்பாட்டுக்காக பொதுக் கிணறுகள் தோண்டுதலும், பழுது பார்த்தலும்
9. கிராமத்தில் பொதுச் சந்தைகளை ஏற்படுத்துதல், அவற்றைப் பேணி வருதல்
10. கிராமத்தில் வாகன நிறுத்தம் அமைத்தல்
11. ஊரில் கால்நடைகளுக்கான தொழுவங்கள் ஏற்படுத்துதல்
12. ஊரில் பொது இறைச்சிக் கூடங்கள் ஏற்படுத்துதல்
13. ஊரில் பொதுப் படிப்பகங்கள் ஏற்படுத்துதல்
14. தொழில்நுட்ப வசதிகள், விளையாட்டுத் திடல், உடற்பயிற்சிக் கூடங்கள் நிறுவுதல்
15. கிராமத்தில் எழுத்தறிவு, சமூகக் கல்விக்கான மையங்களை ஏற்படுத்துதல்
16. ஊரில் குடிக்க, குளிக்க, கழுவுவதற்கான நீர் ஆதாரங்களை உருவாக்குதல்
17. கிராமத்தில் மருந்தகங்களை நிறுவுதல்
18. ஊரில் மகப்பேறு, குழந்தைகள் நல மையங்களை ஏற்படுத்துதல்
19. கிராமத்தில் தொடக்கப் பள்ளிகளை அமைத்தல்
20. கிராமத்தில் கொள்ளை நோய்களைத் தடுத்தல்
21. பிறப்பு, இறப்பு புள்ளிவிவரங்களைச் சேகரித்துத் தொகுத்தல்
22. கிராமத்தில் சலவை செய்தல், குளிப்பதற்கான வசதிகள் ஏற்படுத்துதல்







23. சாலை ஓரங்களில் ஆபத்தான கட்டிடங்கள், மரங்கள் இருந்தால் அவற்றை அகற்றுதல்.
24. ஊரில் சமயம் சார்ந்த நிகழ்வுகள் நடந்தால் பொதுமக்கள் நலன், பாதுகாப்பு வசதிகள் ஏற்படுத்துதல்
25. பெரியம்மை, காலாரா போன்ற தொற்று நோய்கள் குறித்த தகவல்களை அரசுக்கு அளிப்பது, அது தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
26. ஆபத்தான ஏரிகள், குளங்கள், கிணறுகள், குழிகள் குறித்த முன்னெச்சரிக்கைப் பணிகளைச் செய்தல்.
27. உள்ளாட்சி அளவில் பல வகையான வரிகளை வசூலித்தல்
28. தொடக்கக் கல்விச் சட்டம் 1920ன் கீழ் வசூலிக்கப்படும் கல்வி வரியை ஊராட்சியில் உள்ள பள்ளிகளின் மேம்பாட்டிற்குப் பயன்படுத்துதல்.
29. கடைகளில் எடைக் கருவியையும், அளவுகளையும் சோதனையிடுதல்
30. உள்ளாட்சியில் உள்ள பொதுச் சொத்துக்களை ஏலத்திற்கு விடுதல்
31. விளம்பரப் பலகை வைப்பதற்கான அனுமதி அளித்தல்

அரசமைப்பு உரிமைக் கல்வி மன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் நமது உள்ளாட்சி எவ்வாறு உள்ளது என்பதை நமது களப்பணி மூலம் அறிந்து அதனை நமது குழுவில் பகிர்ந்து கொள்ளலாம்.

## 4. களப் பணியில் நாம் என்ன செய்ய வேண்டும்?

**செயல்பாடு - 01 களப்பணி: உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக செயல்படுத்தப்படும் மேம்பாட்டுத் திட்டங்களைத் தெரிந்து கொள்வது**

இதற்கு முந்தைய பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போல், களப்பணிக்காக நாம் குழுக்களாகப் பிரிந்து, மையப்பகுதியில் கூடி, ஒவ்வொரு தெருவாக சென்று திட்டமிட்ட கேள்விகளுக்கான பதில்களை, விவரங்களை பெறுவது. தகவல் திரட்ட வேண்டிய கேள்விகள் பின்வருமாறு.

1. நமது பகுதியில் “சுத்தமான, பாதுகாக்கப்பட்ட குடிநீர்” அனைவருக்கும் கிடைக்க நமது ஊராட்சி மன்றம் செயல்படுத்தும் திட்டங்கள் எவை?
2. நமது பகுதியில் “நோய்த் தொற்று பரவாமல் இருக்க” நமது ஊராட்சி மன்றம் முன்னெடுக்கும் தடுப்பு நடவடிக்கைகள் என்ன?
3. நமது பகுதியில் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையம் சிறப்பாக இயங்க என்னென்ன வசதிகளை ஊராட்சி மன்றம் ஏற்படுத்திக் கொடுக்கிறது?
4. நமது பகுதியில் பொதுக் கழிப்பிடங்கள் அமைக்கவும், பராமரிக்கவும் நமது ஊராட்சி மன்றம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதா?



### உங்களுக்குத் தெரியுமா?

**இந்தியாவின் சிறந்த பஞ்சாயத்துத் தலைவர்**

கோயம்புத்தூர் மாவட்டம் ஒடந்துறை கிராமத்தின் பஞ்சாயத்துத் தலைவராக இருந்து, பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தியவர் திரு. சண்முகம். அவரது பதவிக் காலத்தில் ஓடந்துறை கிராமத்தில் காற்றாலைகள் அமைத்து அதன் மூலம் ஆண்டிற்கு 8 இலட்சம் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப் பட்டுள்ளது. ஊர் மக்களின் தேவைக்குப் போக, மீதம் இருக்கும் மின்சாரத்தை தமிழக அரசின் மின் வாரியத்துக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

850 பசுமை வீடுகளைக் கட்டித் தந்து, குடிசைகள் இல்லாத கிராமமாக ஒடந்துறையை மாற்றிய பெருமை அவருக்கு உண்டு. ஓடந்துறை கிராமம் மிகச் சிறந்த ஊராட்சியாக விளங்கி ஒன்றிய, மாநில விருதுகளைப் பெற்று, பல உலக நாடுகளின் கவனத்தையும் ஈர்த்தது குறிப்பிடத்தக்கது.

அரசுகளிடம் இருந்து பெறும் நிதி அனைத்தையும் முழுமையாக ஒடந்துறை கிராமத்தின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தி மிகச்சிறந்த ஊராட்சியாக மாற்றியது அவரது சாதனை! "இந்தியாவின் மிகச்சிறந்த பஞ்சாயத்துத் தலைவர்" என்று புகழப்பட்டவர் இவர். இவரைப் போன்று ஒவ்வொரு ஊராட்சி மன்றத் தலைவரும் மக்களின் மேம்பாட்டிற்காகவும், ஊரின் வளர்ச்சிக்காகவும் உழைத்தால், தமிழ்நாடு எப்படி இருக்கும்?

5. ஊராட்சி மன்றத்தால் நமது பகுதியில் நூலகம் அமைக்கப்பட்டுள்ளதா? அது முழுமையான பயன்பாட்டில் உள்ளதா?
6. நமது பகுதியில் இருக்கும் தொடக்கப்பள்ளி சிறப்பாக இயங்க என்னென்ன வசதிகளை ஊராட்சி மன்றம் ஏற்படுத்திக் கொடுக்கிறது?
7. நமது பகுதியில் குழந்தைகள் நலவாழ்வு, மேம்பாடு, பாதுகாப்பு, பெண்கல்வி போன்றவற்றுக்கு நமது ஊராட்சி மன்றம் என்னென்ன முன்னேற்பாடுகளை மேற்கொண்டுள்ளது?
8. நமது பகுதியில் பெண்கள் மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்களின் மேம்பாட்டுக்காக நமது உள்ளாட்சி மன்றம் என்ன மாதிரியான முன்னேற்பாடுகளை மேற்கொண்டுள்ளது?
9. நம் பகுதியில் சாலை மேம்பாட்டிற்கும், பராமரிப்பிற்கும் உள்ளாட்சி மன்றம் இந்த ஆண்டு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது?
10. நமது பகுதியில் மக்கள் குளிக்கவும், குடிநீர் பயன்பாட்டிற்காகவும் போதிய நீர் ஆதாரங்களை நமது ஊராட்சி மன்றம் உருவாக்கியுள்ளதா?
11. நமது பகுதியில் வடிகால் வசதிகளைச் செய்யவும், பொது இடங்களைச் சுத்தப்படுத்தவும், துப்புரவு செய்யவும் முறையான ஏற்பாடுகளை நமது ஊராட்சி மன்றம் செய்துள்ளதா?



## சிந்தனைக்கான கேள்விகள்

1. "பேரிடர் மேலாண்மை" சார்ந்து என்ன மாதிரியான திட்டங்கள் உங்கள் உள்ளாட்சி நிர்வாகத்தில் உள்ளன?. "பேரிடர் தயார்நிலை" திட்டங்கள் உள்ளதா?
2. இந்த ஆண்டு நடைபெற்ற கிராம சபைக் கூட்டங்களில் விவாதிக்கப்பட்டவை எவை? நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் நிலை என்ன?

### செயல்பாடு - 02 தகவல் திரட்டல், அறிக்கைத் தொகுப்பு, கலந்துரையாடல்

களப்பணியின் போது திரட்டிய தகவல்களை அனைவரும் ஒன்றாக ஓரிடத்தில் அமர்ந்து தொகுக்க வேண்டும். அவற்றைப் பல்வேறு துணைத் தலைப்புகளாக வகைப்படுத்தி அறிக்கையாகத் தொகுக்கலாம். மன்றக் குழந்தைகள் அனைவரும் களப்பணியின் போது திரட்டிய தகவல்கள் குறித்து கலந்துரையாடலாம்.

கீழ்க்கண்ட தலைப்புகளில் உங்கள் அறிக்கைகளைத் தயார் செய்யலாம்

- கிராமத்தில் அனைத்துக் குடும்பங்களுக்கும் சுத்தமான குடிநீர் கிடைக்க ஊராட்சியில் எடுக்கப்படும் முயற்சிகள்.
- நம் பகுதியில் நோய்த்தொற்று பரவாமல் இருக்க நமது ஊராட்சியில் எடுக்கப்படும் நடவடிக்கைகள்.
- நமது ஊரில் பொதுக் கழிப்பிடங்கள் அமைக்கவும், பராமரிக்கவும் எடுக்கப்படும் நடவடிக்கைகள்.
- நமது பகுதியில் நமது பொது நூலகம் செயல்படும் விதம்.
- நம் ஊரில் நமது தொடக்கப்பள்ளி / நடுநிலைப்பள்ளி செயல்படும் விதம்.
- நம் பகுதியில் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது துணை சுகாதார நிலையத்தின் இன்றைய நிலவரம்.
- நமது ஊராட்சியில் நடைபெறும் கிராமசபைக் கூட்டங்களின் செயல்பாடுகள்.

### செயல்பாடு - 03 ஊராட்சி மன்றத் தலைவருக்குக் கடிதம் எழுதுதல்



நமது ஊராட்சியில் சிறப்பாகச் செயல்படும் அம்சங்களைக் குறிப்பிட்டு ஊராட்சி மன்றத் தலைவருக்கு பாராட்டுக் கடிதம் ஒன்றை எழுதுதல். என்னென்ன வகைகளில் நமது ஊராட்சி நன்கு செயல்பட்டு வருகிறது என்பதைக் குறிப்பிட்டு, அரசமைப்பு உரிமைக் கல்வி மன்ற உறுப்பினர்கள்

அனைவரும் அதில் கையெழுத்திட்டு ஊராட்சி மன்றத் தலைவரை நேரில் சந்தித்து பாராட்டுக்களை தெரிவித்து, அக்கடிதத்தை அவரிடம் வழங்கலாம்.

### செயல்பாடு -04 ஊராட்சி மன்றத் தலைவரையும், மன்ற உறுப்பினர்களையும் மன்றத்திற்கு வரவழைத்து உரையாடுதல்

ஊராட்சி மன்றத்தலைவரையும், மன்ற உறுப்பினர்களையும் அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றக் கூட்டத்திற்கு அழைத்து, ஊராட்சி மன்றச் செயல்பாடுகள் குறித்து அவர்களைப் பேச வைத்தல், சிறப்பாகச் செயல்படும் திட்டங்கள் குறித்து அவர்களோடு உரையாடலாம்.



**உங்களுக்குத் தெரியுமா?**

"ஊராட்சி மன்றங்களை அமைப்பதற்கும், அவற்றைத் தன்னாட்சிக் கூறுகளாக இயங்குவதற்குத் தேவைப்படும் அதிகாரங்களையும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை ஒன்றிய அரசும், மாநில அரசுகளும் மேற்கொள்ள வேண்டும்"

–பிரிவு 40, இந்திய அரசமைப்புச் சட்டம்

### செயல்பாடு - 05 நமது மன்ற உறுப்பினர்கள் கட்டுரை எழுதுதல்

"ஊராட்சி மன்றத் தலைவராக நான் தேர்ந்தெடுக்கப்பட்டால்?" என்ற தலைப்பில் அரசமைப்பு உரிமைக் கல்வி மன்ற உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு பக்கக் கட்டுரை எழுதுதல். நீங்கள் ஊராட்சி மன்றத் தலைவராக அல்லது உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டால், என்னென்ன அம்சங்களில் நீங்கள் கவனம்



செலுத்துவீர்கள்? ஊராட்சி மன்றத் தலைவராக எவ்வாறு சிறப்பாகச் செயல்படுவீர்கள்? என்பதை கற்பனை செய்து கட்டுரையாக எழுதவும்.

### செயல்பாடு - 06 கிராம சபைக் கூட்டங்களில் பங்கேற்றல்

ஆண்டுக்கு நான்கு முறையும், தேவைப்பட்டால் சிறப்புக் கூட்டங்களாகவும், ஒவ்வொரு ஊரிலும் நடைபெறும் கிராம சபைக் கூட்டத்தில் நமது அரசமைப்பு உரிமைக் கல்வி மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு, அந்தக் கூட்டங்கள் எப்படி நடைபெறுகின்றன, அங்கு என்னென்ன விவாதங்கள் நடைபெறுகின்றன, என்னென்ன தீர்மானங்கள் முன் மொழியப்படுகின்றன என்று தெரிந்து கொள்வது அவசியம். குழந்தைகள் நலன், பெண் குழந்தைகள் கல்வி, குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு, குழந்தைத் திருமணம் தடுப்பு, குழந்தைகள் பாதுகாப்பு போன்ற பல்வேறு பிரச்சனைகள் குறித்து மன்ற உறுப்பினர்கள் அக்கூட்டங்களில் தீர்மானங்களை முன்மொழியலாம்.



## எதிர்பார்க்கும் விளைவுகள்

- அரசமைப்பு உரிமைக் கல்வி மன்ற உறுப்பினர்கள் அனைவரும் உள்ளாட்சி அமைப்புகளின் கட்டமைப்பு குறித்தும், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளின் பணிகள் குறித்தும் அறிந்திருப்பர்.
- உள்ளாட்சி அமைப்புகள் மூலம் உள்ளூரில் செயல்படுத்தப்படும் மேம்பாட்டுத் திட்டங்கள் பற்றி கள அனுபவம் வழியாக கற்றிருப்பர்.
- ஊரின் வளர்ச்சிக்கு உள்ளாட்சி அமைப்புகளின் பணியும், பங்களிப்பும் எவ்வளவு அவசியம் என்றும், கிராம சபைக் கூட்டங்களின் செயல்பாடுகள், அவற்றின் முக்கியத்துவம் குறித்தும் உணர்ந்திருப்பர்.



# எனக்கென்று ஒரு கனவு உண்டு!

**நம் ஊர்
எப்படி இருக்க வேண்டும் என்ற கனவு
நமக்கு இருக்க வேண்டும் அல்லவா?**

- எங்கள் ஊரில் பொது இடங்களும், தெருக்களும் சுத்தமாகவும், ஊர் மக்கள் அனைவரது பயன் பாட்டுக்கும் உகந்ததாகவும் இருக்க வேண்டும்.
- குழந்தைகளாகிய நாங்கள் ஓடியாடி விளையாடுவதற்கு நல்ல விளையாட்டுத் திடல் எங்கள் ஊரில் இருக்க வேண்டும்.
- நாங்கள் படிப்பதற்கு அனைத்து வசதிகளுடன் கூடிய மிகச்சிறந்த நூலகம் இருக்க வேண்டும்.
- பொதுக்கழிப்பிடங்கள் முறையாகப் பராமரிக்கப் பட வேண்டும். மக்கள் குளிப்பதற்குத் தேவையான தண்ணீர் அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும்.
- குழந்தைகள், வயது முதிர்ந்தோர், கைவிடப்பட்ட பெண்கள், ஆதரவற்றோர், தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் போன்ற நலிவுற்ற பிரிவினரின் அனைத்துத் தேவைகளையும் முழுமையாக பூர்த்தி செய்யும் வகையில் சிறப்பாகச் செயல்படும் உள்ளாட்சி மன்றம் அமைய வேண்டும்.





# 7 மக்கள் நலத் திட்டங்கள்



பொது நலனுக்கு ஊறு விளைவிக்கும் வகையில், நம்நாட்டின் செல்வ வளமும், உற்பத்திச் சாதனங்களும் ஒரு சிலரிடம் மட்டுமே குவிந்து கிடக்க வழிவகுக்கும் பொருளியல் முறை அமையக் கூடாது.

**- பிரிவு 39 (இ), இந்திய அரசமைப்புச் சட்டம்**

## நோக்கங்கள்

1. மக்கள் நலத் திட்டங்களைப் பற்றி குழந்தைகள் தெரிந்து கொள்ளல்
2. நமது பகுதியில் உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக செயல்படுத்தப்படும் நலத் திட்டங்களை கள அனுபவம் மூலம் அறிந்து கொள்ளல்
3. அடித்தட்டு மக்களின் வளர்ச்சிக்கு நலத் திட்டங்கள் எவ்வாறு பயன்படுகின்றன என்று புரிந்து கொள்ளல்

## 1. அறிமுகம்

முந்தைய பாடத்தில் உள்ளாட்சி அமைப்புகளின் கட்டமைப்பு, பணிகள் குறித்தும், உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக செயல்படுத்தப்படும் மேம்பாட்டுத் திட்டங்களையும் கள அனுபவம் மூலம் நாம் அனைவரும் தெரிந்து கொண்டோம். மக்கள் நலனில் அக்கறை கொண்ட அரசு தான் நல்ல அரசாக இருக்க முடியும்.

பெரும்பாலான மக்கள் நலத் திட்டங்கள் வாய்ப்புகள் மறுக்கப்பட்ட ஏழை எளிய மக்களை முன்னேற்றுவதற்கும், பொருளாதார ரீதியில் நலிவுற்ற நிலையில் இருந்து அவர்களை மேம்படுத்துவதற்கும் பயன்படும். சமுகத்தில் மிகவும் பின்தங்கி நலிவுற்ற நிலையில் இருக்கும் பல்வேறு தரப்பினர் இத்திட்டங்களால் பயன்பெறுவர்.





மக்கள் நலத்திட்டங்கள் பெரும்பாலும் மாநில அரசின் மூலமாகவும், நம் உள்ளூர் அரசாங்கமான கிராம ஊராட்சிகளின் மூலமாகவும் நடைமுறைப்படுத்தப் படுகின்றன. இப்பாடத்தின் நோக்கம் நம் பகுதியில் நடைமுறைப்படுத்தப்படும் மக்கள் நல திட்டங்களின் நோக்கங்களையும், அவற்றின் பயன்பாட்டினையும் அறிந்து கொள்வதேயாகும்.

## 2. மன்றத்தில் மக்கள் நலத் திட்டங்கள் குறித்த பயிற்சி வகுப்பு

மக்கள் நலனுக்காக அரசு நடைமுறைப்படுத்தும் திட்டங்கள் பற்றி நமது அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றக் கூட்டத்தில் நெறியாளர் சுருக்கமாக குழந்தைகளுக்கு கூற வேண்டும். குழந்தைகளுக்கு ஏற்படும் சந்தேகங்களுக்கு விளக்கமாகப் பதிலளிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, சில திட்டங்கள் உங்களின் பார்வைக்கு இணைக்கப்பட்டுள்ளன.

- பள்ளி மாணவர்களுக்கான நலத் திட்டங்கள்
- சுய உதவிக் குழுக்களுக்கான திட்டங்கள்
- தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (மகளிர் திட்டம்)
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்
- ஆதிதிராவிடர் நலத் திட்டங்கள்
- பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்




- பெண் விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம்
- மகளிரைத் தலைவராகக் கொண்ட ஏழைக் குடும்பங்களுக்கான சிறப்பு வாழ்வாதாரத் திட்டம்
- தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்
- தமிழ்நாடு அரசு அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கான நல வாரியங்கள்
- தேசிய ஓய்வூதியத் திட்டம்
- முதியோர் நல பராமரிப்புத் தேசியத் திட்டம்
- முதியோர்களைப் பாதுகாக்க சிறப்புத் திட்டங்கள்
- பிரதம மந்திரியின் ஆவாஸ் யோஜனா (நகர்ப்புறங்களில் அனைவருக்கும் வீடு)

1. முதலில் கிராம ஊராட்சி அலுவலகத்திற்குச் சென்று என்னென்ன மக்கள் நலத் திட்டங்கள் தற்போது நடைமுறையில் உள்ளன என்பதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவும். அந்தத் திட்டங்கள் எங்கு நடைபெறுகின்றன என்ற தகவலையும் கேட்டுப் பெற்றுக் கொள்ளவும்.
2. மக்கள் நலத் திட்டங்கள் நடைபெறும் பகுதிகளைத் தெரிந்து கொள்ள முறையாக கிராம ஊராட்சித் தலைவரிடம் அனுமதி கோரலாம். அனுமதி பெற்ற பின்பு அப்பகுதிகளைப் பார்வையிடலாம்.
3. ஒரு குறிப்பிட்ட நாளை நெறியாளரிடம் கலந்து பேசி முடிவு செய்யவும். குறிப்பிட்ட தேதியில் காலையில் மன்ற உறுப்பினர்கள் அனைவரும் கூடி

மக்கள் நலத் திட்டங்கள் நடைபெறும் பகுதிகளைப் பார்வையிடச் செல்லலாம்.

4. குழந்தைகளின் பாதுகாப்பு மிக முக்கியம். அதனால் பாதுகாப்பு முறைகளைக் குழந்தைகளுக்குக் கூறி நெறியாளர் அதைக் கண்காணிக்கவும் வேண்டும்.

5. பணி செய்யும் இடத்தில் அனைவரும் அமைதியாக உற்று நோக்குவதோடு தங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை ஒருவர் பின் ஒருவராகக் கேட்கலாம்.

6. பணி செய்யும் இடங்களில் கூச்சல், சத்தம் போடக் கூடாது. நாம் பிறர்க்கு சங்கடத்தை ஏற்படுத்தக் கூடாது.

## 3. களப் பணியில் நாம் என்ன செய்ய வேண்டும்?

### செயல்பாடு - 01 குழந்தைகளைக் குழுவாகப் பிரித்தல்

குழந்தைகளைக் குறைந்தபட்சம் ஐந்து அல்லது ஆறு பேர் கொண்ட குழுக்களாகப் பிரிக்க வேண்டும். அவ்வாறு பிரிக்கப்பட்ட பின்பு அவர்கள் பார்வையிட வேண்டிய அலுவலகம், சந்திக்க வேண்டிய நபர்களின் தகவல்களைத் தெரிவிக்கலாம். கீழ்க்கண்ட அலுவலகத்தில் அல்லது அங்கு பணிபுரியும் நபர்களிடம் அரசின் நலத் திட்டங்களைப் பற்றிய தகவல்களைக் கோரலாம்.








**செயல்பாடு-02 அலுவலர்களுடன் சந்திப்பு**

- பார்வையிடச் செல்லும் அலுவலகத்திற்கு முன்கூட்டியே அனுமதி பெற கடிதம் அனுப்ப வேண்டும் அல்லது தொலைபேசி மூலம் உரிய அலுவலர்களிடம் பேசி அனுமதி பெற வேண்டும்.
- அனுமதி பெற்ற பின்பு அவர்கள் அனுமதிக்கும் நேரத்தில் அலுவலகத்திற்குச் செல்ல வேண்டும்.
- அலுவலர்களிடம் செல்லும் போது என்ன தகவல்கள் வேண்டும் என்ற நோக்கில் கேள்விகளை முன்கூட்டியே தயார் செய்து கொள்ள வேண்டும்.
- முதலில் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும். தாங்கள் யார் என்பதையும், என்ன நோக்கத்திற்காக இங்கு வந்துள்ளோம் என்பதையும் அவர்களிடம் தெளிவாகக் கூற வேண்டும்.
- அலுவலர்கள் கூறுவதைத் தெளிவாகக் குறிப்பு எடுத்துக் கொள்ள வேண்டும்.
- அலுவலகத்தில் உள்ள வழிகாட்டு நெறிமுறைகள், டைரிக்குறிப்புகள், கோப்புகள் போன்றவற்றைக் கேட்டுப் பெறலாம்.
- அதிகபட்சம் ஒரு மணி நேரம் எடுத்துக் கொள்ளலாம்.

**செயல்பாடு-03 திட்டப் பணிகள் நடைபெறும் பகுதிகளை நேரடியாகப் பார்வையிடல்**

1. ஏற்கனவே குறிப்பிட்டபடி, முன்கூட்டியே அனுமதி பெற்று மக்கள் நலத் திட்டங்கள் நடைபெறும் பகுதியைப் பார்வையிடச் செல்வது சரியாக இருக்கும். அன்றைய நாளில் பணி நடைபெறுமா? எங்கு நடைபெறும் போன்ற தகவல்களை தெரிந்து கொண்டு செல்வது நல்லது.
    - தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டப் பணிகள் நடைபெறும் இடங்கள்
    - மகளிர் சுய உதவிக் குழுக்கள்
    - பொது விநியோகத் திட்டம் - கூட்டுறவு நியாய விலைக் கடைகள்

2. பணி செய்யும் இடத்தில் பாதுகாப்பாக, முன்னெச்சரிக்கையுடன் செல்ல வேண்டும். பணிகள் நடைபெறும் இடத்தைப் பார்வையிடும்போது அனைவரும் சேர்ந்து செல்வது நல்லது.

3. நீங்கள் செல்லும் இடத்தில் பணிகள் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நேர மேலாண்மையைக் கடைப்பிடிப்பது மிக அவசியம்.

4. நீங்கள் செல்லும் இடங்களில் வேலை செய்பவர்களிடம் கேள்விகள் கேட்க விரும்பினால் சுருக்கமாகக் கேள்விகள் கேட்டு பதிலைப் பெறலாம்.



**செயல்பாடு - 04 அறிக்கை தயார் செய்தலும், பகிர்தலும்**

- இடங்களைப் பார்வையிட்ட பிறகு அங்கு எடுத்த குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு அறிக்கைத் தயார் செய்ய வேண்டும்.
- தயார் செய்த அறிக்கையை மன்றக் கூட்டத்தில் பகிர்ந்து கொள்ள வேண்டும்.
- கூட்டத்தில் பகிர்ந்த பிறகு மன்ற உறுப்பினர்கள் அனைவரும் அதுகுறித்து விவாதம் நடத்த வேண்டும்.

**செயல்பாடு-05 திட்டங்களால் பயனடைந்த நபர்களை நமது மன்றத்திற்கு அழைத்து உரையாடல்**

ஏதாவது ஒரு மக்கள் நலத் திட்டத்தில் பயன்பெற்று, தனது வாழ்க்கையில் மேம்பாடு அடைந்த ஒரு நபரை நமது மன்றக் கூட்டத்திற்கு அழைத்து, அவரோடு

உரையாடுவது, எவ்வாறு அந்தத் திட்டம் அவருக்குப் பயனுள்ளதாக இருந்தது என்றும், அந்தத் திட்டத்தில் பயன்பெற்றதால் இன்று அவர் வாழ்வில் ஏற்பட்டுள்ள மாற்றத்தைப் பற்றியும் அவர் பகிர்ந்து கொள்ளலாம்.

### செயல்பாடு-06 வங்கி மேலாளர் ஒருவரை உங்கள் மன்றக் கூட்டத்திற்கு அழைத்து, அவரோடு உரையாடுதல்

உங்கள் பகுதியில் இயங்கும் ஒரு வங்கியின் மேலாளரை உங்கள் மன்றக் கூட்டத்திற்கு அழைத்து, அவர் பணியாற்றும் வங்கி என்னென்ன திட்டங்களை அல்லது கடன் உதவிகளை ஏழை எளிய மக்களுக்கு வழங்குகிறது என்று பேச வைக்கலாம். உங்களது சந்தேகங்களையும் கேள்விகளையும் அவரிடம் எழுப்பலாம்.



## 4. உங்கள் பார்வைக்குச் சில திட்டங்கள்

### 4.1. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டம்

2005ஆம் ஆண்டு தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டம் இயற்றப்பட்டது. அதன் அடிப்படையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டம் நாடு முழுவதும் நடைமுறையில் உள்ளது.




#### இதன் அடிப்படை நோக்கம்

- கிராமப்புற ஏழை மக்கள் தாம் வாழும் பகுதியில் வாழ்வாதாரம் ஏதுமின்றி வேறு பகுதிகளுக்கு / நகரங்களுக்கு இடம்பெயர்வதை குறைத்தல்
- உடல் உழைப்பை மட்டும் மூலதனமாகக் கொண்ட திறனில்லா தொழிலாளிகளுக்கு நூறு நாட்கள் வேலை வாய்ப்பை வழங்கல்

### பணிகள்

- புதிய குளங்கள், குட்டைகள் வெட்டுவது
- ஏரிகள், குளங்களைத் தூர்வாருதல், கரைகளைப் பலப்படுத்துதல்
- கால்வாய்களைச் சீர்படுத்துதல், புதிய கால்வாய் வெட்டுதல்
- வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுதல்
- காடு வளர்ப்பு, மரம் வளர்ப்பு
- இயந்திரம் இல்லாமல் புதிய சாலைகளைப் போடுதல், பராமரித்தல்
- பெரும்பாலான இத்திட்டப் பணிகள் கிராம ஊராட்சியின் வழியாகவே நடைமுறைப் படுத்தப்படுகின்றன.
- அதே கிராமத்தில் வசிக்கும் 18 வயது பூர்த்தியடைந்தவர்களே இத்திட்டத்தில் சேரத் தகுதியுடையவர்கள்.
- பெண்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்; மூன்றில் ஒரு பாகம் பெண்களுக்கு ஒதுக்க வேண்டும்.
- மாற்றுத் திறனாளிகளுக்கும் முன்னுரிமை அளிக்க வேண்டும்.
- விண்ணப்பித்த 15 நாட்களுக்குள் வேலை அட்டை வழங்க வேண்டும். உடனடியாக வேலையும் வழங்க வேண்டும்.
- வேலை வழங்கவில்லையெனில் சட்டப்படி வேலையின்மைக்கான படியை நாள்தோறும் வழங்க வேண்டும்.
- இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் ஐந்து கிலோ மீட்டருக்குள் இருக்க வேண்டும்.
- இத்திட்டத்தில் ஒப்பந்தக்காரர்களையோ, இயந்திரங்களையோ பயன்படுத்தக் கூடாது.



## சிந்தனைக்கான கேள்விகள்

- உங்கள் பகுதியில் இத்திட்டத்தில் எத்தனை பெண்கள் பங்கு பெற்று உள்ளனர்?
- கடந்த ஆண்டு இத்திட்டத்தால் என்னென்ன பணிகள் உங்கள் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு உள்ளன?
- இந்தப் பணியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்குத் தமிழ்நாட்டில் ஒரு நாளைக்கு ஊதியம் எவ்வளவு அளிக்கப்படுகிறது?

### 4.2. முழுச் சுகாதாரத் திட்டம்

கிராம சுகாதாரத் திட்டத்தின் அடிப்படை நோக்கம் திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கத்தை ஒழித்துக் கிராம சுகாதாரத்தை மேம்படுத்துதல். அனைத்து குடியிருப்புகளுக்கும் போதிய நீர், கழிப்பறை வசதிகள் ஏற்படுத்துதல், திறந்த வெளியில் மலம் கழிப்பதைத் தடுத்தல். இதன் மூலம் நீர், உணவு அசுத்தம் அடைந்து நோய் பரவுவது தடுக்கப்படும். கழிப்பறைகளையும், கிராம சுகாதாரத்தையும் பேண புதிய யுக்திகள், தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துதல், உலர் கழிப்பறைகளை அகற்றுதல், கையால் மலம் அள்ளுவதை அறவே ஒழித்தல். தன்சுத்தம், சுகாதாரத்தைப் பேணுவது பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.



## பணித் தளங்கள்

1. கழிப்பறை இல்லா குடியிருப்புகள்
2. பள்ளிகள், அங்கன்வாடிகள்
3. பொது இடங்கள்

## 4.3. புது வாழ்வுத் திட்டம்

உலக வங்கி நிதி உதவியுடன் நடைபெறும் திட்டமாகும். இதற்கு முன்பு இது "வாழ்ந்து காட்டுவோம்" என்ற பெயரில் இருந்தது. தற்போது புது வாழ்வுத் திட்டம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஏழைகளுள் மிகவும் பின்தங்கிய ஏழைகளின் வாழ்வு முன்னேற்றம் பெறவும், மக்கள் மைய நிறுவனங்களைக் கட்டமைத்து அதற்கான பணிகளைக் கொண்டு செல்லவும் இத்திட்டம் உதவுகிறது. குறிப்பாக பெண்களின் முடிவெடுக்கும் திறனை மேம்படுத்துவதுடன் வளர்ச்சிப் பணியிலும் பெண்களைப் பங்கு பெற வைத்தல் இத்திட்டத்தின் முக்கியமான அம்சமாகும்.



1. ஏழைகளுள் மிகவும் பின்தங்கிய ஏழைகளுக்கு முன்னுரிமை அளிப்பது. குறிப்பாக பெண்களுக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கும் முன்னுரிமை வழங்குவது
2. கிராம ஊராட்சிகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ளுதல்
3. வாழ்வாதாரம் சார்ந்த பயிற்சிகள், தொழிலில் பின்தங்கிய ஏழைகளை ஈடுபட வைத்தல்.
4. அனைத்துக் கிராமங்களிலும் கிராமப்புற வறுமை ஒழிப்புச் சங்கங்களை ஏற்படுத்துதல்.
5. சமூகத் தணிக்கைக் குழு, சுய உதவிக் குழு, சமுதாய வாழ்வாதாரக் குழு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் போன்றவற்றை ஏற்படுத்துவது.
6. வறுமை பற்றியும், வறுமை ஒழிப்புத் திட்டம் பற்றியும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்துவது.
7. சிறிய அளவிலான நிதியுதவிகள், வேலைவாய்ப்புக்கு ஏற்ற பயிற்சிகள், உள்ளூரிலேயே வாழ்வாதாரத்திற்கான வேலைகள் போன்றவற்றை உருவாக்குவது.

## 4.4. பிரதம மந்திரி அவாஸ் யோஜனா திட்டம்



இந்திரா அவாஸ் யோஜனா என்ற இந்திரா நினைவுத் தொகுப்பு வீடு கட்டும் திட்டம் 1996ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர், பட்டியல் சாதி அல்லாத பிற வகுப்பினரில் உள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு வீடு கட்டும் திட்டமாகும். அனைவருக்கும் வீடு என்ற நோக்குடன் இன்று பிரதம மந்திரி அவாஸ் யோஜனா திட்டம் என்ற பெயரில் இப்போது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

## 4.5. நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் ஆண்டுக்கு 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பணிகள் அவருடைய தொகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலவை உறுப்பினர் என்றால் மேலும் சில தொகுதிகளிலும் செயல்படுத்தலாம். இத்திட்டத்தின் கீழ் நடைபெறும் பணிகள் : குடிநீர் வசதி, பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகள், பொதுச் சுகாதாரம், மருத்துவம், சாலை வசதிகள், பசுமை வீடுகள் திட்டம். மேலும் இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகள் செய்ய இந்நிதியை ஒதுக்கலாம். பட்டியல் பிரிவினருக்கான திட்டங்களுக்கு பதினைந்து விழுக்காடு நிதி ஒதுக்கப்படும். கிராமப்புறத்தில் உள்ள வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள ஏழைக் குடும்பங்களுக்கான வளர்ச்சித் திட்டங்களையும் இதில் மேற்கொள்ளலாம். சுற்றுச்சூழலுக்குக் கேடு ஏற்படாத வகையில் சூரிய சக்தி மூலம் விளக்கு எரிக்க இத்துடன் இதர பணிகளுக்கும் பயன்படுத்தப்படும்.

SUSTAINABLE DEVELOPMENT GOALS

### நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள்

**இலக்கு – 10 :** பாகுபாடுகளைக் களைந்து, அனைவர்க்கும் சம வாய்ப்புகளை உறுதி செய்து, ஏற்றத் தாழ்வுகளை குறைக்கும் முயற்சிகளை அரசுகள் மேற்கொள்ள வேண்டும்.

10 REDUCED INEQUALITIES



## உங்களுக்குத் தெரியுமா?

"மக்கள் நல்வாழ்வை மேம்படுத்தும் வகையில் சமூக முறையை அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். தேசிய நிறுவனங்கள் அனைத்திலும் சமுதாய, பொருளாதார, அரசியல் நீதி நிறைந்து நிலவும் வகையில் முயன்று, மக்களின் நல்வாழ்வை மேம்படுத்திட அரசு பாடுபட வேண்டும்.

தனி மனிதர்களுக்கு இடையே மட்டுமின்றி, வெவ்வேறு மக்கள் பிரிவினர்க்கு இடையேயும், வெவ்வேறு தொழில்களில் ஈடுபட்டிருக்கும், மக்கள் பிரிவினர்க்கு இடையேயும், வருமான ஏற்றத் தாழ்வுகளை இயன்ற அளவு குறைத்திடவும், வாய்ப்பு வசதிகள் அனைவருக்கும் சமமாக கிடைத்திடவும் அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

- பிரிவு 38, இந்திய அரசமைப்புச் சட்டம்

## எதிர்பார்க்கும் விளைவுகள்

- மக்கள் நலத்திட்டங்களைப் பற்றிய புரிதல் குழந்தைகளிடம் ஏற்பட்டிருக்கும்.
- இந்த நலத்திட்டங்களை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் உள்ளாட்சி மன்றங்களின் பங்கு என்ன என்ற தெளிவு மன்றக் குழந்தைகளுக்குக் கிடைத்திருக்கும்.
- நமது பகுதியில் வசிக்கும் அடித்தட்டு மக்களின் சமூக-பொருளாதார வளர்ச்சிக்கு இதுபோன்ற நலத்திட்டங்கள் எவ்வாறு உதவுகின்றன என்றும், இந்த நலத்திட்டங்கள் அவர்களின் நலிவுற்ற நிலையை எவ்வாறு மேம்படுத்தியுள்ளன என்பது குறித்தும் புரிதல் ஏற்பட்டிருக்கும்.



# எனக்கென்று ஒரு **கனவு** உண்டு!

### நம் ஊர் எப்படி இருக்க வேண்டும் என்ற கனவு நமக்கு இருக்க வேண்டும் அல்லவா?

- எங்கள் ஊரில் வசிக்கும் மக்கள் அனைவருக்கும் நல்ல வேலைவாய்ப்பும், வேலைக்கேற்ற ஊதியமும் கிடைக்க வேண்டும்.
- ஒரே மாதிரியான வேலையைச் செய்யும் ஆண், பெண் தொழிலாளர்கள் மத்தியில் ஊதிய வேறுபாடு இருக்கக்கூடாது.
- பெண்கள், மாற்றுத்திறனாளிகள், வறுமையில் உழலும் ஏழை எளிய மக்கள் அனைவருக்கும் அனைத்து நிலையிலும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.
- எங்கள் ஊரில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு, அனைத்து மக்களும் தரமான வாழ்க்கை வாழ்வதற்கு ஏற்ற வகையில் உள்ளாட்சி அமைப்புகள் செயல்பட வேண்டும்.
- எங்கள் பகுதிக்கு ஒதுக்கப்படும் அனைத்துத் திட்டங்களும் எமது மக்களின் முழுமையான பங்கேற்போடு செயல்படுத்தப்பட வேண்டும். எம் மக்களுக்காக ஒதுக்கப்படும் நிதி அனைத்தும் மக்களின் நலன்களுக்காகவும், எங்களது மேம்பாட்டுக்காகவும் முழுமையாகவும், முறையாகவும் செலவழிக்கப்பட வேண்டும்.





# 8 நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள்–ஓர் அறிமுகம்



வளங்களை மனிதனின் தேவைக்குப் பயன்படுத்த வேண்டுமே தவிர, ஒரு சில பேராசைக்காரர்களின் சுரண்டலுக்காக இயற்கை வளங்களை அழிக்கக் கூடாது.

## நோக்கங்கள்

1. நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் பற்றிய பின்னணியைக் குழந்தைகள் புரிந்து கொள்ளல்
2. நீடித்த வளர்ச்சிக்கான 17 இலக்குகளையும் குழந்தைகள் தெரிந்து கொள்ளல்
3. குழந்தைகள் தொடர்பான நான்கைந்து இலக்குகளை எடுத்துக் கொண்டு அவற்றின் ஆழமான பொருளை உணர்ந்து கொள்ளல்

## 1. அறிமுகம்

முதல் பாடத்தில் நம் ஊரைச் சுற்றிப் பார்த்த கள அனுபவம் தொடங்கி ஒவ்வொரு பாடமாக தனித்தனி தலைப்புகளில் தெளிவினைப் பெற்றோம். இதுவரையிலும் நம் ஊரை, நாம் பார்க்காத ஒரு கோணத்தில் பார்த்து நிறைய படிப்பினைகளைப் புதிதாகக் கற்றுக்கொண்டோம். நமது நலவாழ்வு, பாதுகாப்பு, குழந்தைகளின் கல்வி, நம் ஊரின் சுத்தம் மற்றும் சுகாதாரம் தொடர்பாக பலவற்றைத் தெரிந்து கொண்டோம்.

இதுமட்டுமா? நம் ஊரில் பாலின சமத்துவம், எல்லா மட்டங்களிலும் பெண்களின் பங்கேற்பு எப்படி உள்ளது என்பதையும் தெரிந்து கொண்டோம் இல்லையா? அதோடு கூட நம் உள்ளாட்சி மன்றங்கள் எப்படி இயங்குகின்றன, ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கான அதிகாரங்கள் என்னென்ன என்பதை எல்லாம் விரிவாகப் பார்த்தோம். நம் பகுதியின் முன்னேற்றத்திற்கு என்னென்ன திட்டங்களெல்லாம் செயல்படுத்தப்படுகின்றன என்றும் நன்கு தெரிந்து கொண்டோம். இந்தப் பின்னணியில் இப்போது புதிதாக ஒரு பாடத்தை கற்றுக்கொள்ளப் போகிறோம். அதுதான் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் !

## 2. நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் என்றால் என்ன?

உலகில் உள்ள அனைத்து நாடுகளும் ஐக்கிய நாடுகள் அவையின் உறுப்பினர்களாக உள்ளன. உலகில் அமைதியை உருவாக்கவும், நாடுகளுக்கு இடையே வளங்களைப் பரிமாறிக் கொள்ளவும், மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், பல்வேறு வகையான ஒப்பந்தங்களையும், உடன்படிக்கைகளையும் இந்த ஐக்கிய நாடுகள் அவை நிறைவேற்றி வருகிறது. ஒட்டுமொத்த உலகின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களையும் முன்னெடுப்புகளையும் அவ்வப்போது ஐக்கிய நாடுகள் அவை நிறைவேற்றி வருகின்றது. அந்த வகையில் வறுமையில்லாத, சுரண்டல் இல்லாத, சுகாதாரமான, ஏற்றத்தாழ்வுகள் இல்லாத ஓர்



உலகை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் இரண்டாயிரம் ஆண்டில் “ஆயிரம் ஆண்டு வளர்ச்சி இலக்குகள்” என்ற திட்டத்தை ஐ.நா அவை அறிமுகப்படுத்தியது. ஆனால் எதிர்பார்த்த அளவு அந்த இலக்குகளை உலக நாடுகளால் எட்ட முடியவில்லை. எனவே 2015 ஆம் ஆண்டு அதே கனவுகளை நனவாக்கும் முயற்சியில் “நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள்” என்ற தலைப்பில் 17 இலக்குகளையும், அவற்றை நிறைவேற்றுவதற்கான குறிக்கோள்களையும் ஐ.நா. அவை முன்வைத்துள்ளது.



## உங்களுக்குத் தெரியுமா?

1992 ஆம் ஆண்டு ஜூன் மாதம் பிரேசில் நாட்டின் ரியோடிஜெனிரோ மாநகரில் நடைபெற்ற புவி உச்சி மாநாட்டில் 178 நாடுகள் பங்கேற்று சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், மனித வாழ்க்கை மேம்படவும் தேவையான திட்டங்களை முன்வைத்து நீடித்த வளர்ச்சியை நோக்கி அனைத்து நாடுகளும் இணைந்து ஒரு முழுமையான செயல்திட்டத்தை உருவாக்கின.

"நிகழ்ச்சி நிரல் 21" என்று அழைக்கப்பட்ட செயல் திட்டம் சுற்றுச்சூழலை மிகவும் மோசமாக பாதிக்கும் அனைத்து வகையான மனிதச் செயல்பாடுகளையும் உலக, தேசிய மற்றும் உள்ளூர் அளவிலும் தடுக்கத் தேவையான ஆக்கப்பூர்வ திட்டங்களை முன்மொழிந்தது.

இதனைத் தொடர்ந்து 2000 ஆண்டில் ஐ.நா. சபையில் ஆயிரமாவது ஆண்டு உச்சி மாநாட்டில் பங்கேற்ற அனைத்து நாடுகளும் ஒருமனதாக உருவாக்கிய "ஆயிரம் ஆண்டு வளர்ச்சி இலக்குகள்" என்ற சாசனம் எட்டு முக்கியமான அம்சங்கள் பற்றி விவரித்தது. குறிப்பாக 2015 ஆம் ஆண்டுக்கு முன் உலக அளவில் வறுமையை பாதியாகக் குறைக்க வேண்டும் என்ற இலக்கையும் நிர்ணயித்தது குறிப்பிடத்தக்கது.

2002ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்கா நாட்டின் ஜோகன்னஸ்பர்க் நகரில் நடைபெற்ற உச்சி மாநாடு "நீடித்த வளர்ச்சி" குறித்தும், அதை அடைய அரசுகள் முன்னெடுக்க வேண்டிய திட்டங்கள் குறித்தும் அதை நோக்கிய செயல் வடிவங்களையும் முன்வைத்தது.

2012 ஆம் ஆண்டில் ஐ.நா. அவையில் பங்கேற்ற அனைத்து நாடுகளும் இணைந்து உருவாக்கிய "நாம் விரும்பும் எதிர்காலம்" என்ற வரலாற்று சிறப்புமிக்க ஆவணம், நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளின் அடிப்படை ஆகும். இவற்றை முன்னெடுக்க ஐ.நா. உயர்மட்ட அரசியல் பேரவை “நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள்” பற்றிய சாசன உருவாக்கத்தில் ஈடுபட்டது.

## 3. நீடித்த வளர்ச்சிக்கான 17 இலக்குகள்

ஐக்கிய நாடுகள் அவை 2015 ஆம் ஆண்டு வெளியிட்ட, அனைத்து நாடுகளும் ஏற்றுக்கொண்ட நீடித்த வளர்ச்சிக்கான 17 இலக்குகள் பின்வருமாறு.

இலக்கு 1 : வறுமையை ஒழித்தல்

இலக்கு 2 : பட்டினியை ஒழித்தலும், உணவுப் பாதுகாப்பும்

இலக்கு 3 : அனைவருக்குமான நலவாழ்வை உறுதிசெய்தல்

இலக்கு 4 : அனைத்து குழந்தைகளுக்கும் தரமான சமமான கல்வியை உறுதிசெய்தல்

இலக்கு 5 : பாலின சமத்துவத்தை உறுதிசெய்தல் (அனைத்துப் பெண்களுக்கும் அதிகாரமளித்தல்)

இலக்கு 6 : பாதுகாக்கப்பட்ட சுத்தமான நீர் மற்றும் சுகாதாரத்தை உறுதிசெய்தல்

இலக்கு 7 : மலிவான தூய்மையான எரிசக்தி கிடைக்கச் செய்தல்

இலக்கு 8 : கண்ணியமான வேலையும் நீடித்த பொருளாதார வளர்ச்சியும்

இலக்கு 9 : நிலையான வளர்ச்சியை நோக்கிய உள்கட்டமைப்பு - உற்பத்தி - கண்டுபிடிப்பு

இலக்கு 10 : நாடுகளுக்கிடையேயும், உள்நாட்டிலும் சமத்துவமின்மையைக் குறைத்தல்

இலக்கு 11 : சீர்மிகு நகரங்களையும், சமூகங்களையும் உருவாக்குதல்

இலக்கு 12 : பொறுப்பான நுகர்வும், உற்பத்தியும்

இலக்கு 13 : பருவநிலை மாற்றங்களால் ஏற்படும் தாக்கங்களை எதிர்கொள்வது

இலக்கு 14 : கடல் சார் வளங்களின் நீடித்த வளர்ச்சி

இலக்கு 15 : சுற்றுச்சூழலைக் காத்தலும், காடுகளைக் காத்து பாலைவனமாக்கலைத் தடுத்தலும்

இலக்கு16 : அனைவரையும் உள்ளடக்கிய நிறுவனங்கள் உருவாக்கல் அனைவருக்குமான நீதி

இலக்கு 17 : உலகளாவிய ஒருங்கிணைப்பும், பன்னாட்டுப் பங்களிப்பும்

இந்த 17 இலக்குகளில் குழந்தைகள், பெண்கள், தொழிலாளர்கள் நலன் சார்ந்த குறிப்பிட்ட 5, 6 இலக்குகளைக் கூடுதல் கவனத்தோடு படிப்பது அவசியம். ஏற்கெனவே நாம் முன்னர் படித்த பாடங்களில், அந்த இலக்குகளை தொடர்புபடுத்தி பார்த்துள்ளோம்.




தங்களது நாட்டின் வளர்ச்சித் திட்டங்களில் இக்குறிக்கோள்களை இணைத்து இவற்றை செயல்திட்டங்களாக வடிவமைத்து கொண்டு செல்வதாக அனைத்து நாடுகளும் ஒத்துக்கொண்டுள்ளன. இதனடிப்படையில் இந்திய அரசும் மேற்சொன்ன 17 இலக்குகளையும் தனது அனைத்துச் செயல்திட்டங்களிலும் இணைத்துக் கொண்டு அனைத்து மக்களின் மேம்பாட்டிற்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் பாடுபடுவதாக உறுதி ஏற்றுக் கொண்டுள்ளது.

## 4. கிரெட்டா துன்பர்க் என்ற சூழலியல் போராளி




கிரெட்டா துன்பர்க் என்ற ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த சிறுமி மிகச் சிறந்த சுற்றுச்சூழல் போராளியாக அறியப் பட்டவர். 2003 ஆம் ஆண்டு ஸ்வீடன் தலைநகரான ஸ்டாக்ஹோமில் பிறந்த இப்பள்ளிச் சிறுமி, பருவ நிலை மாற்றத்தை முன்வைத்து ஆக்கப்பூர்வ செயல்பாடுகளை உலகத் தலைவர்கள் உடனே எடுக்க வேண்டும் என்று நடத்திய பல அறவழிப் போராட்டங்களால் உலகின் ஒட்டுமொத்த கவனத்தையும் ஈர்த்தவர்.

'பருவ நிலைக்காக பள்ளியைப் புறக்கணித்தல்' என்ற பதாகையை ஏந்தி பருவ நிலை மாற்றங்களைத் தடுக்க ஸ்வீடன் பாராளுமன்றம் வலுவான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று 2018-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 20ஆம் தேதி முதல் பள்ளியைப் புறக்கணித்து தொடர் போராட்டங்களில் ஈடுபட்டார். அப்போது அவருக்கு வயது 15. அவரைப் பின் தொடர்ந்து பள்ளி மாணவ, மாணவியர் பலரும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் இதுபோன்ற போராட்டங்களில் அவரவர் பகுதிகளில் ஈடுபட்டனர். ஒருங்கிணைந்து மாணவர்கள் முன்னெடுத்த இந்தப் போராட்டத்திற்கு, 'எதிர்காலத்திற்கான (விடியலுக்கான) வெள்ளிக்கிழமைகள்' என்று பெயரிட்டனர்.

2018 ஆம் ஆண்டு கிரெட்டா துன்பர்க் ஐக்கிய நாடுகள் அவையின் பருவ நிலை மாநாட்டில் உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து உலகின் பல நாடுகளிலும் பருவநிலை மாற்றத்திற்கு எதிரான வெள்ளிக்கிழமைப் போராட்டங்களை மாணவர்கள் முன்னெடுக்கத் தொடங்கினர். இப்போராட்டம் பல நாடுகளிலும் வலுப்பெற்று 2019-ல் பல இலட்சக்கணக்கான மாணவர்கள் பங்கேற்கும் போராட்டமாக மாறியது. அதே ஆண்டு நியூயார்க் மாநகரில் ஐ.நா. அவையின் பருவ நிலை உச்சி மாநாட்டில் உலகத் தலைவர்கள் மத்தியில் ஆற்றிய உரை சிறப்பானது. பருவ நிலை மாற்றம் குறித்து உலக நாடுகளின் தலைவர்களின் செயலற்ற தன்மையை கடுமையாகக் கண்டித்து அவர் ஆற்றிய அந்த உரை அனைத்து ஊடகங்களிலும் வெளிவந்து உலகின் கவனத்தை ஈர்த்தது.



## 5. பருவ நிலை மாற்றம் – பெருவெள்ளமும், பேரிடரும்

முன் எப்போதும் இல்லாத அளவுக்கு, நாம் வசிக்கும் பூமி வெப்பமாகி வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக அதிகமான வெப்பம், திடீர் மழைப் பொழிவு, அனல் காற்று என்பதை நாம் பார்த்து வருகிறோம். பருவ நிலைகளில் கடுமையான மாற்றங்கள் வருவதோடு, இவை மனித வாழ்க்கையை மோசமாகப் பாதிக்கின்றன. கடும் வறட்சி, மிக அதிகமான மழை, சூறாவளிக் காற்று என்பன இப்போது அடிக்கடி நாம் சந்திக்கும் நிகழ்வுகளாக மாறிவிட்டன. அண்மையில் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் அவ்வப்போது மிகக் கன மழை பெய்து இயல்பு வாழ்க்கையையே புரட்டிப்போட்டதை தமிழ்நாடு கண்டது.

கடந்த ஆண்டு (2023 டிசம்பர் 17, 18 ஆகிய தேதிகளில்) திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்கள் சந்தித்த வரலாறு காணாத பெரு வெள்ளம் நாம் மறக்க முடியாத ஒரு நிகழ்வு. பல இடங்களில் 40 செ.மீ அளவுக்கு அதிகமான மழை ஒரே நாளில் கொட்டித் தீர்த்தது. தூத்துக்குடி மாவட்டத்தில் காயல்பட்டினம் ஊரில் 95 செ.மீ. மழைப் பொழிவு ஒரே நாளில் பெய்தது. இதுவரை இந்திய வரலாற்றிலே நடைபெறாத நிகழ்வு. மாஞ்சோலை மலைப் பகுதிகளிலும் 95 செ.மீ.க்கும் அதிகமான மழை.

இந்த இரண்டு மாவட்டங்களும் பெருவெள்ளத்தின் பாதிப்புகளிலிருந்து மீண்டு இயல்பு வாழ்க்கைக்கு வர பல வாரங்கள் ஆயிற்று. தாமிரபரணி ஆற்றின் இரு கரைகளையும் உடைத்துக் கொண்டு பல ஊர்களிலும் வெள்ளம் புகுந்து பெருத்த சேதத்தை உண்டாக்கியது. கரையோரம் வசித்த மக்கள் தங்கள் வீடுகளிலிருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல வேண்டிய சூழல். தூத்துக்குடி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் வெள்ளம் வடியவே பல வாரங்கள் பிடித்தது. இதுபோன்ற நிகழ்வுகள் அனைத்தும் புவி வெப்ப மயமாதலின் விளைவாக நிகழ்பவை. பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பேரிடர்களால் அதிகமாக பாதிப்பிற்கு உள்ளாவது சாதாரண சாமானிய மக்களே.





## சிந்தனைக்கான கேள்விகள்

1. பெருவெள்ளம் போன்ற பேரிடர்கள் எதனால் ஏற்படுகின்றன?
2. காலநிலை மாற்றத்தின் விளைவாக அதிகமான பாதிப்பிற்கு உள்ளாகும் மக்கள் யார்?
3. புவி வெப்ப மயமாதலை குறைப்பதற்கு ஒன்றிய அரசும், தமிழ்நாடு அரசும் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்?



22/01/2024 - தினகரன்

# நெல்லை, தூத்துக்குடி பெருவெள்ளம் முடிவல்ல அழிவின் ஆரம்பம்

பூவுலகின் நண்பர்கள் அமைப்பு 'பகீர்' தகவல்

நெல்லை, ஜன. 22: "நெல்லை, தூத்துக்குடி பெருவெள்ளம் முடிவல்ல, அது அழிவின் ஆரம்பம்' என நெல்லையில் நடந்த கலந்துரையாடலில் பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் நிறுவனர் சுந்தரராஜன் கூறினார்.

நெல்லை, தூத்துக்குடி பெருவெள்ளம் ஏற்படுத்திய பாதிப்புகள் மற்றும் அதிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள் தொடர்பான கலந்துரையாடல் நிகழ்ச்சி நேற்று தனியார் அமைப்பு சார்பில் நடந்தது. அமைப்பின் இயக்குநர் பிரிட்டோ வரவேற்றார். முன்னதாக அந்த அமைப்பினர் தினகரன் நாளிதழில் வெளியான மழை, வெள்ளம் தொடர்பான செய்திகளை சேகரித்து 'சார்ட் பேப்பரில்' ஒட்டி பொதுமக்கள் பார்வைக்கு வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக வீடியோ கான்பரன்ஸில் கலந்து கொண்ட பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் நிறுவனர் சுந்தரராஜன் கூறியதாவது:

"பொதுவாக பேரிடர்களை அதற்கு முந்தைய பேரிடர்களோடு ஒப்பிடக் கூடாது. அதற்கு பதிலாக அதன் தன்மைகளை அலசி ஆராயலாம். தமிழகத்தை பொருத்தவரை 2015ம் ஆண்டில் சென்னையில் பெருவெள்ளம் வந்தது.

அதன் பிறகு 2023ம் நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் பெருவெள்ளம் வந்தது. 2015ல் வெள்ளத்தின் போது அடையாறில் தண்ணீர் விடக்கூடிய செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து 30 ஆயிரம் கனஅடி தண்ணீரையே வெளியேற்ற முடியாது. ஆனால் செம்பரம்பாக்கம் ஏரி மற்றும் அதில் வந்து சேரக்கூடிய 11 ஏரிகளின் தண்ணீர் என 60 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்ட நேரத்தில் மேலும் 32 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டது. ஒட்டுமொத்த சென்னையும் பெரும் பாதிப்புக்குள்ளானது. பலர் உயிரிழந்தனர். பல்லாயிரக்கணக்கான பொருட்சேதங்கள் ஏற்பட்டன. அன்றைக்கு மீனம்பாக்கம் என்ற ஒரு இடத்தில் 45 செ.மீ. மழை பதிவானது.

இந்த 2023ல் சென்னையில் உருவான வெள்ளம் மிக்ஜாம் புயலோடு வந்தது. மீனம்பாக்கம், ஆவடி உட்பட மூன்று இடங்களில் 45 செ.மீ. மழை பதிவானது. கடலில் 100 கிமீ தொலைவில் உருவான மிக்ஜாம் புயல், 300 கிலோ மீட்டர் தொலைவில், அந்தமான் தீவுக்கு அருகே உருவாகி இருந்தால் சென்னையே மூழ்கி இருக்கும். இன்றைய சென்னை சுமார் 500 நீர்நிலைகள் அழிக்கப்பட்டு அதன் மீது உருவாகி உள்ளது.

பொதுவாக கடல் மேற்பரப்பில் 27 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை இருந்தால் காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி புயல் ஏற்படுகிறது. ஆனால் இந்தியப் பெருங்கடலின் மேற்பரப்பு வெப்பநிலை 29, 30 டிகிரி செல்சியஸ் என வெப்பநிலை உயர்ந்து வருகிறது. அதுவே அதிக மழைப்பொழிவுக்கு காரணமாகி விடுகிறது. 1980களுக்கு முன் பிறந்தவர்களிடம் கேட்டால் ஒரு பேரிடர் பெயர் சொல்வார்கள். அதற்கு பிறகு பிறந்த தலைமுறையினர் ஒக்கி, கஜா என பல பேரிடர்களின் பெயர்களை செல்வார்கள். இதில் இருந்து காலநிலை மாற்றம் ஒரு பேரிடருக்கும் இன்னொரு பேரிடருக்கும் உண்டான கால அளவை சுருக்கி விடும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

பெருவெள்ளத்தின் போது தூத்துக்குடியில் 95 சென்டிமீட்டர் மழை அளவு பதிவாகியுள்ளது.

இது சமவெளியில் சாதாரண மழை அல்ல. தமிழ்நாட்டில் 16 கடற்கரை மாவட்டங்கள் உள்ளன. கால நிலை மாற்றத்தால் பிச்சாவரம் பகுதியில் 5 ஆயிரம் முதல் 6 ஆயிரம் ஏக்கர் வரை நிலப்பரப்பு கடலில் மூழ்கி உள்ளது. கல்ப் ஆப் மன்னார் பகுதியில் 21 தீவுகளில் தற்போது வெறும் 8 தீவுகள் தான் உள்ளன.

அதே கால நிலை மாற்றத்தால் உருவான நெல்லை, தூத்துக்குடி பெருவெள்ளமும் ஒரு முடிவல்ல. அது அழிவின் ஆரம்பம். மேலும் கால நிலை மாற்றத்தால் ஒவ்வொரு 2 ஆண்டுக்கு ஒருமுறை பேரிடர் வர சாத்தியம் உள்ளது. அரசு கால நிலை மாற்றத்திற்கு ஏற்ப முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதற்கு தமிழ்நாட்டின் காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப கால நிலை மாதிரிகளை உருவாக்க வேண்டும். என்றார்.

இந்நிகழ்ச்சியில் நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களைச் சேர்ந்த சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை முன்வைத்தனர்.



## 6. களப் பணியில் நாம் என்ன செய்ய வேண்டும்?

### செயல்பாடு - 01 பெருவெள்ளம் குறித்து நம் மன்றத்தில் விவாதம்

அரசமைப்பு உரிமைக் கல்வி மன்ற உறுப்பினர்கள் அனைவரும் அண்மையில் நம் பகுதியில் நாம் எதிர்கொண்ட பெருவெள்ளம் பற்றி ஒரு விவாதத்தை நடத்தலாம். பெருவெள்ளத்தின்போது நமது பகுதியில் யார் யார் மிகவும் அதிகமாக பாதிக்கப் பட்டது? பாதிப்பின் தன்மை எத்தன்மையாக இருந்தது? பெருவெள்ளத்தின்போது பள்ளிக் குழந்தைகள் எவ்வாறு பாதிக்கப்பட்டனர்? பெண்களும் மாற்றுத் திறனாளிகளும் எவ்வாறு பாதிப்பிற்கு உள்ளாகினர்? பெருவெள்ளத்தில் இருந்து பாதிக்கப்பட்ட மக்களை உடனடியாக மீட்கவும், அவர்களை பாதுகாப்பான இடங் களுக்குக் கொண்டு செல்லவும் மாவட்ட நிர்வாகம் என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொண்டது? என்பன போன்ற கேள்விகளை முன்வைத்து இந்த விவாதம் நடைபெறலாம்.



### செயல்பாடு - 02 பெருவெள்ளம் பற்றிய கண்காட்சி

அண்மையில் ஏற்பட்ட பெருவெள்ளம் குறித்து நாளேடுகளில் வெளிவந்த அனைத்துச் செய்திகளையும் தொகுத்து உங்கள் பள்ளியில் ஒரு கண்காட்சி நடத்தலாம். மன்ற உறுப்பினர்கள் நான்கு அல்லது ஐந்து பேர் இதற்கான பொறுப்பை ஏற்றுக் கொண்டு, உங்கள் ஊரில் உள்ள நூலகத்திற்குச் சென்று பெருவெள்ளத்தின்போது, அப்போதைய நாளிதழ்களில் அது குறித்து வெளிவந்த படங்கள், செய்திகள், கட்டுரைகள், அது தொடர்பான நேர்காணல்கள், மாவட்ட நிர்வாகங்கள் அல்லது மாநில அரசு மேற்கொண்ட வெள்ளத்தடுப்பு, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து வெளிவந்த செய்திகள் போன்றவற்றை வெட்டி எடுத்து, சார்ட்டுகளில் ஒட்டி உங்கள் பள்ளி மாணவர்கள் அனைவரும் பார்க்கும்வண்ணம் உங்கள் மன்றத்தில் காட்சிப்படுத்தலாம்.



### செயல்பாடு - 03 உள்ளாட்சி மன்றத் தலைவர் அல்லது உறுப்பினரை மன்றத்திற்கு அழைத்து உரையாடுவது

உங்களது உள்ளாட்சி மன்றத் தலைவர் அல்லது உள்ளாட்சி மன்ற உறுப்பினர் ஒருவரை உங்கள் மன்றத்திற்கு அழைத்து, பெருவெள்ளம் அல்லது பேரிடர் நடக்கும்போது, ஒரு உள்ளாட்சி அமைப்பு மேற்கொள்ள வேண்டிய உடனடிச் செயல்பாடுகள் குறித்து விரிவாக அவர்களோடு உரையாடல் நடத்தலாம். இது குறித்து சந்தேகங்கள், கேள்விகள் இருப்பின் அவர்களிடம் உங்களது கேள்விகளை ஒன்றன்பின் ஒன்றாக கேட்டுத் தெளிவு பெறலாம்.

### செயல்பாடு - 04 மன்றக் குழந்தைகள் பங்கேற்கும் கட்டுரைப் போட்டி

"பருவநிலை மாற்றத்தால் தமிழகத்தில் நிகழும் மாற்றங்கள்" என்ற தலைப்பில் ஆர்வமுள்ள குழந்தைகள் பங்கேற்கும் ஒரு கட்டுரைப் போட்டியை உங்கள் மன்றத்தில் நடத்தலாம். கடந்த 10 ஆண்டுகளாக வெப்ப நிலை உயர்வால் என்னென்ன மாற்றங்களை நமது தமிழ்நாடு சந்திக்கிறது என்பதையும், எந்தெந்த மாவட்டங்கள் வறட்சியாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளன என்பதையும், இதைத் தடுப்பதற்கு அல்லது எதிர்கொள்வதற்கு தமிழக அரசு என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்? பொது மக்களாகிய நாம் என்னென்ன செய்ய வேண்டும் என்று கேள்விகளை மனதில் கொண்டு கட்டுரையை நீங்கள் எழுதலாம்.

### செயல்பாடு - 05 பிரதமருக்கு மன்றக் குழந்தைகள் கடிதம் எழுதுதல்

நமது மன்ற உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் அனைத்தையும் இந்தியாவில் முழுமையாக நடைமுறைப்படுத்த ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், புவி வெப்பமயமாக்கலைத் தடுத்து நிறுத்த இன்னும் கூடுதலாக இந்தியா சிறப்பான



செயல்பாடுகளை முன்னெடுப்பது அவசியம் என்றும், இதுபோன்ற செயல்பாடுகளுக்கு கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும் இந்திய பிரதமருக்கு கூட்டாக கடிதம் ஒன்றை எழுதலாம். இந்தக் கடிதத்தை உங்கள் பகுதியில் உள்ள பத்திரிக்கைச் செய்தியாக வருவதற்கு மன்ற நெறியாளர் முயற்சிகளை எடுக்கலாம்.

### செயல்பாடு - 06 "பட்டினி இல்லா இந்தியாவை உருவாக்குவோம்" என்ற தலைப்பில் பட்டிமன்றம்

நீடித்த வளர்ச்சிக்கான 17 இலக்குகளை இந்தப் பாடத்தில் நாம் நன்கு தெரிந்து கொண்டோம். இந்த இலக்குகளில் முதல் இரண்டும் வறுமை ஒழிப்பு மற்றும் பட்டினியை அறவே ஒழித்தல் என்ற முக்கியமான தலைப்புகளை முன்வைத்து செயல்திட்டங்களை அனைத்து அரசுகளும் தீட்டி அவற்றை நடைமுறைப்படுத்தவேண்டும் என்று பேசுகின்றன. ஆனால் இந்தியாவில் வறுமையும், பட்டினிச்சாவும் குறைந்தபாடில்லை. உலகளவில் அதிகமாக பட்டினியில் இருக்கும் மக்களைக் கொண்ட நாடாக இந்தியா இன்னும் உள்ளது. இந்தத் தலைப்பை எடுத்துக் கொண்டு நீங்கள் உங்கள் மன்றத்தில் ஒரு பட்டிமன்றம் நடத்தலாம்.

### செயல்பாடு - 07 இயற்கைச் சூழல் நிறைந்த ஒரு பகுதிக்கு சென்று விடுமுறை நாளைக் கழித்தல்

உங்கள் மன்ற உறுப்பினர்கள் அனைவரும் உங்களது நெறியாளரோடு திட்டமிட்டு உங்கள் ஊரை ஒட்டிய, இயற்கைச் சூழல் நிறைந்த ஒரு பகுதிக்குச்

சென்று ஒரு விடுமுறை நாளைச் செலவழிக்கலாம். "இயற்கையை நேசிக்கும் இளவல்கள்" என்ற பதாகையை ஏந்தி உங்கள் ஊரில் ஒரு சிறிய ஊர்வலமாகச் செல்லலாம். நம் வாழ்க்கையை இயற்கையோடு இணைந்ததாகக் கொண்டு செல்ல என்னென்ன வழிமுறைகளை நாம் மேற்கொள்ளலாம் என்று விவாதிக்கலாம்.

### செயல்பாடு - 08 நெகிழிப் பைகளை (பிளாஸ்டிக்) தடை செய்யக்கோரி முதல்வருக்கு கடிதம் எழுதுதல்




நமது அன்றாட வாழ்வில் பிளாஸ்டிக் பைகளை (நெகிழி) பயன்படுத்துவது மிகவும் அதிகமாகி விட்டது. ஒருமுறை மட்டுமே பயன்படுத்திவிட்டு தூக்கி எறியும் பிளாஸ்டிக் பைகளால் சுற்றுச் சூழலுக்கு பேராபத்து உள்ளது. எனவே, மன்றக் குழந்தைகள் அனைவரும் தமிழகத்தில் பிளாஸ்டிக் பைகளை முற்றிலுமாக தடை செய்வதை உறுதி செய்ய வேண்டும் என்று தமிழக முதல்வர் அவர்களுக்கு ஒரு மடல் எழுதலாம். அதோடுகூட, நாமும் நம் வீடுகளில் பிளாஸ்டிக் பைகளைத் தவிர்த்து விட்டு, துணிப் பைகளைப் பயன்படுத்த பழக வேண்டும்.



### உங்களுக்குத் தெரியுமா?

இயற்கையை நேசித்த ஒரு சமூகமாக நமது தமிழ்ச் சமூகம் இருந்துள்ளது என்பதற்கு எண்ணற்ற சான்றுகள் சங்க இலக்கியங்களில் உள்ளன. நீர்நிலைப் பராமரிப்பு, மரங்கள் பராமரிப்பு, இயற்கை வளங்களை தனது பேராசைக்கு சுரண்டாத நிலை, காடுகளையும் மரங்களையும் மனித வாழ்க்கையின் ஒரு அம்சமாக இணைத்துப் பார்க்கின்ற வாழ்க்கை முறை என்று சங்க இலக்கியங்களில் எண்ணற்ற எடுத்துக்காட்டுகள் உள்ளன. இன்றும் பழங்குடிச் சமூகங்கள் இயற்கையை மிகவும் நேசிக்கின்ற சமூகங்களாக வாழ்கின்றன.

# எனக்கென்று ஒரு கனவு உண்டு!



## நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் குறித்த கனவு

- நாம் வசிக்கும் இந்த நாட்டில் பசி, பட்டினியால் யாரும் சாகக் கூடாது.
- "வளர்ச்சி" என்பது அனைவரையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டுமே தவிர, ஒரு சில கோடீஸ்வரர்கள் மட்டுமே செல்வச் செழிப்போடு வாழவும், மற்றவர்கள் எல்லோரும் வறுமையால் உழல்வதும் வளர்ச்சி ஆகாது. "சமனற்ற வளர்ச்சி" என்றுமே ஒரு நாட்டின் ஒட்டுமொத்த மேம்பாட்டுக்கு உதவாது.
- "வளர்ச்சி" என்பது சுற்றுச்சூழலைப் பாதிக்காது - இயற்கையைப் பாதிக்காத வகையில் இருக்க வேண்டும். இயற்கை வளங்களை அழித்து வளரும் எந்த நாடும் நிம்மதியாக வாழ முடியாது.
- இயற்கை வளங்களை வரைமுறையின்றி சுரண்டவும், சூறையாடவும் அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றக் குழந்தைகளாகிய நாம் அனுமதிக்கக் கூடாது.
- இயற்கையை நேசிக்கும் நாம் அனைவரும் ஒன்றாக நமது வளங்களைப் பாதுகாக்க வேண்டும். நம் முன்னோர் நமக்கு விட்டுச் சென்ற வளங்கள் அனைத்தையும் அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு செல்ல வேண்டும்.





குழந்தைகளுக்கான அரசமைப்பு
உரிமைக் கல்வி மன்றம்

---

**Constitutional Rights Education Club for Children**

# மன்ற விதிமுறைகளும் வழிகாட்டு நெறிமுறைகளும்





அத்தியாயம் 1

# அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றத்தின் இலக்கும் கொள்கையும்

### 1.1. முகப்புரை

“அரசமைப்பு உரிமைகளைப் பண்பாடாக வளர்த்தெடுப்போம்!” என்ற இலக்கினை நோக்கிய பயணத்தில், எமது பகுதியைச் சேர்ந்த குழந்தைகளாகிய நாங்கள், எங்களை மனப்பூர்வமாக அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றத்தில் உறுப்பினர்களாக இணைத்துக் கொள்கிறோம். எம் பகுதியில் “அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றத்தை” தொடங்க உறுதி பூண்டுள்ளோம். இம்மன்றத்தின் மூலம் எம் பள்ளி, குடும்பம், சமூகம் ஆகியவற்றில் அரசமைப்பு உரிமைகளையும், மனித உரிமைகளையும் பாதுகாத்து, வளர்த்தெடுத்து சமூக அமைதியை நிலை நாட்டுவோம் என்று உறுதி கூறுகிறோம். எங்கள் பகுதியில் அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றம் அமைக்கவும், மன்ற வழிகாட்டுதல்களின் அடிப்படையில் செயல்படவும் உறுதியேற்கிறோம். வான்முகில் அமைப்பும், எமது மாவட்ட அமைப்பும் இணைந்து முன்னெடுக்கிற இம்முயற்சிகளில் எங்களை அர்ப்பணிப்போடு ஈடுபடுத்திக் கொள்வோம் என உறுதியளிக்கிறோம்.



**இலக்கு**

அரசமைப்பு உரிமைகளை நம் சமூகத்தில்
பண்பாடாக வளர்த்தெடுப்போம்.

### 1.2. கொள்கை

1. அரசமைப்புச் சட்டம் உயர்த்திப் பிடிக்கும் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், சமூகநீதி, சமதர்மம், மனித மாண்பு, பன்மைத்துவம், சனநாயகம், சமயச் சார்பின்மை போன்ற உயரிய மதிப்பீடுகளை மன்றத்தின் கொள்கையாகப் பேணுதல்
2. அரசமைப்பு மற்றும் மனித உரிமைகளை வாழ்நெறியாகக் கொண்ட சமூகத்தை உருவாக்கும் கருவிகளாகக் குழந்தைகளை தயார்படுத்துதல்

### 1.3. நோக்கங்கள்

1. அனைத்துக் குழந்தைகளுக்குமான பாதுகாப்பினை உறுதி செய்தல்
2. அரசமைப்பு மற்றும் மனித உரிமைகள் குறித்த அறிவையும், திறனையும் மேம்படுத்துதல்

3. குழந்தைகளிடம் இயல்பிலேயே காணப்பெறும் மனித உரிமை மதிப்பீடுகளை வெளிக்கொணரல்
4. குழந்தைகளின் மனநிலை, சிந்தனை ஆகியவற்றில் அரசமைப்பு மதிப்பீடுகளின் படி நேர்மறையான மாற்றங்கள் உருவாக முயற்சித்தல்
5. அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களின் அனைத்துச் செயல்பாடுகளிலும் குழந்தைகளின் பங்கேற்பை சனநாயக வழியில் உறுதி செய்தல்
6. அரசமைப்பு உரிமைத் தூதுவர்களாக குழந்தைகளை உருவாக்குதல்
7. குழந்தைகள், ஆசிரியர்கள், பள்ளிகள், குடும்பங்கள், சமூகத்தில் அரசமைப்பு மற்றும் மனித உரிமைகள் குறித்து ஆழமான புரிதலை உருவாக்குதல்
8. குழந்தைப் பருவத்தின் இனிமையை குழந்தைகள் முழுமையாக அனுபவிப்பதை ஊக்குவித்தல்
9. குழந்தை உரிமை மீறல்களால் பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு ஆதரவாக இருத்தல்
10. குழந்தைத் திருமணம், குழந்தைக் கடத்தல், கருக்கொலை, சிசுக்கொலை, பாலியல் துன்புறுத்தல், கொத்தடிமை உள்ளிட்ட பிரச்சனைகளில் மன்றப் பகுதி சார்ந்த பிரச்சனைகளைக் கண்காணித்து குழந்தை உரிமைகள் பாதுகாப்பு அமைப்புகளுக்குத் தகவல் அளித்தல்
11. குழந்தை உரிமைகள் சார்ந்த பிரச்சனைகளின் போது பள்ளி, அண்டைச் சமூகம், குடிமைச் சமூக அமைப்புகள், குழந்தை உரிமைகள் பாதுகாப்பு அமைப்புகள், உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றுக்கிடையே ஆக்கப்பூர்வமான தொடர்பை ஏற்படுத்துதல்
12. சாதி, சமய, இன, மொழி, பாலினம், பிறப்பிடம், வர்க்கம், திறன் அடிப்படையிலான பாகுபாடுகளுக்கு எதிராக குரல் கொடுத்தல்
13. சமூகத்தில் திருநர், மாற்றுத்திறனாளர் மற்றும் இதர சிறப்புத் தேவையுடையோர்க்கு உகந்த சூழலை உருவாக்க குரல் கொடுத்தல்
14. பள்ளி இடைநின்ற குழந்தைத் தொழிலாளர்கள், இடம் / புலம் பெயர்ந்த / மறுகுடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் குழந்தைகள் ஆகியோரை பள்ளிகளில் சேர்க்க வழிவகை செய்தல்





அத்தியாயம் 2

# மன்றத்தின் அமைப்பு

## 2.1. உறுப்பினராகும் முறை

1. மன்றம் அமையவுள்ள பகுதியில் 6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகள் மன்றத்தில் உறுப்பினராகலாம்.
2. உறுப்பினராக விருப்பம் தெரிவிக்கும் குழந்தைகள் தங்கள் பெயரை பொறுப்பாளரிடம் அளிக்க வேண்டும்.
3. குழந்தைகள் அனைவரும் மன்றச் செயல்பாடுகளில் முழுமையாகப் பங்கேற்பதாக உறுதியளிக்க வேண்டும்.

சாதி, சமய, இன, மொழி, பாலினம், பிறப்பிடம், வர்க்கம், தகுதிநிலை, திறன் அடிப்படையில் எந்தப் பாகுபாடும் இன்றி அனைத்துக் குழந்தைகளும் மன்ற உறுப்பினராகும் தகுதி உடையவர்.

## 2.2. உறுப்பினர்களின் உரிமைகளும், கடமைகளும்

1. மன்றத்தின் அனைத்து நிகழ்வுகளிலும் பங்கேற்க உரிமையுண்டு.
2. குழந்தைகள் மீதான உரிமை மீறல்களை அடையாளம் கண்டு மன்ற நெறியாளருக்கு தகவல் தெரிவிக்கவும், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஆதரவு தரவும், மன்றத்தில் அது குறித்து விவாதிக்கவும் உரிமையுண்டு.
3. உறுப்பினர்கள் அனைவரும் மன்றத்தின் துணைக் குழுக்களில் பங்கேற்க உரிமையுண்டு.
4. மன்றத்தின் குழந்தைப் பாதுகாப்புக் கொள்கையில் உள்ளவற்றை முழுமையாக கடைப்பிடிப்பது மன்றக் குழந்தைகளின் கடமையாகும்.
5. மன்ற உறுதிமொழியை உளமார ஏற்று அவற்றை பின்பற்றுவது அடிப்படைக் கடமைகளில் ஒன்றாகும்.

## 2.3. துணைக் குழுக்கள்

துணைக் குழுக்களில், அனைத்துக் குழந்தைகளும் சம அளவில் உறுப்பினர்களாக இருப்பர்.

துணைக் குழு 1 : கல்வி & விழிப்புணர்வுக் குழு

துணைக் குழு 2 : குழந்தை உரிமைக் கண்காணிப்புக் குழு

ஆகிய இரு குழுக்களை உள்ளடக்கியதாகும்.

இக்குழுக்களின் செயல்பாடுகள்

1) துணைக் குழுவின் செயல்பாடுகளைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதல்
2) துணைக் குழுவின் திறனாய்வுக் கூட்டங்களை நடத்துதல்

### 2.4. மன்ற ஒருங்கிணைப்பாளர்கள்

1. அனைத்துக் குழந்தைகளும் இணைந்து ஒருமித்த அல்லது தேர்தல் மூலம் ஒரு ஆண், ஒரு பெண் என இருவரைத் தேர்வு செய்வர். இவர்கள் மன்றத்தின் ஒருங்கிணைப்பாளர்களாக இருப்பர்.
2. மன்ற ஒருங்கிணைப்பாளர்களே அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றத்தின் அன்றாடச் செயல்பாடுகளை அனைவருடனும் இணைந்து, விவாதித்து, முடிவெடுத்து செயல்படுத்துவர்.
3. மாதாந்திர மன்றக் கூட்டத்தை நடத்துவது, அனைத்துக் குழந்தைகளையும் கொண்ட பொதுக் குழுவைக் கூட்டுவது, கூட்டங்களை நடத்துவது, அறிக்கைகளைத் தொகுப்பது, ஆவணப்படுத்துவது, அவற்றைச் சமர்ப்பிப்பது போன்ற பணிகளை ஒருங்கிணைப்பாளர்கள் செய்வர்.

### 2.5. நெறியாளர்

வான்முகில் அமைப்புடன் இணைந்து இத்திட்டத்திற்காகச் செயல்படும் மாவட்ட அமைப்பினால் தெரிவு செய்யப்படும் அனுபவம் வாய்ந்த நபரே மன்றத்தின் நெறியாளராக செயல்படுவார்.

#### பணிகள்

1. அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றம் தொடங்கத் தேவையான ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்ளல்
2. மன்றச் செயல்பாடுகளைச் சிறப்பாக நடைமுறைப்படுத்த வழிகாட்டுதல்
3. குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றத்திற்கும் வான்முகில் அமைப்பிற்கும் தொடர்புப் பாலமாக இருத்தல்
4. குழந்தைகள் மீதான உரிமை மீறல்களை மன்றங்கள் திறமையாக எதிர்கொள்ளத் துணையாக இருத்தல்
5. நெறியாளர் தான் சார்ந்திருக்கும் அமைப்பின் இயக்குனருக்கு அவ்வப்போது தமது பணி சார்ந்த அறிக்கையை சமர்ப்பித்தல். மன்றத்தை சிறப்பாக வழிநடத்துவதற்கு அவரது ஆலோசனைகளைக் கேட்டுப் பெறல்
6. வான்முகில் அமைப்பு நடத்தும் வாராந்திர இணையவழிக் கூட்டத்தில் மன்றத்தின் சார்பாக சிறப்பாக பங்கேற்பு செய்தல், பணி தொடர்பான மாதாந்திர அறிக்கையைச் சமர்ப்பித்தல், தங்கள் பணிக் கிராமங்களில் சிறு சிறு கள ஆய்வுகளை மேற்கொள்ளல், திட்டம் தொடர்பான கூட்டங்களில் பங்கேற்றல், வான்முகில் ஏற்பாடு செய்யும் பயிற்சிகளில் கலந்து கொள்ளுதல் போன்ற பணிகளை நெறியாளர் மேற்கொள்வர்.

### 2.6. மாவட்ட அமைப்பாளர்

வான்முகில் அமைப்புடன் இணைந்து இம்மன்றங்களை மாவட்ட அளவில் கொண்டு செல்லும் குடிமைச் சமூக அமைப்பின் இயக்குனரே அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றத்தின் மாவட்ட அமைப்பாளராக இருப்பார்.

### பணிகள்

1. மாவட்ட அளவில் அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களை தொடங்கி, மன்றம் சிறப்பாகச் செயல்படவும், மன்ற நிகழ்வுகளை முன்னெடுக்கவும், அவற்றை ஒருங்கிணைக்கும் பணியிலும் ஈடுபடுவார்.
2. வான்முகில் அமைப்புடன் கலந்தாய்வு செய்து சரியான மன்ற நெறியாளரை அடையாளம் கண்டு பணியமர்த்துவார்.
3. மாவட்ட அளவில் செயல்படும் அனைத்து அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களையும் நெறியாளர்கள் வாயிலாக மாவட்ட அளவில் ஒருங்கிணைக்கும் பணியையும் மேற்கொள்வார்.

## 2.7. மாநில ஒருங்கிணைப்பாளர்

அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களை மாநில அளவில் ஒருங்கிணைக்கும் பணியை வான்முகில் அமைப்பின் அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் மேற்கொள்வார். மாநில துணை ஒருங்கிணைப்பாளர் உறுதுணையோடு மன்றங்களை வழிநடத்தும் பொறுப்பினை மேற்கொள்வார்.

### பணிகள்

மன்றங்களை ஏற்படுத்த மாவட்ட அமைப்பாளர்களையும், நெறியாளர்களையும் ஊக்குவித்தல், நெறியாளர்களுக்கு மன்றச் செயல்பாடுகளுக்கான பயிற்சி அளித்தல், தேவையான ஆலோசனை வழங்குதல், சிறப்பு நிகழ்வுகளில் பங்கேற்றல், மன்றச் செயல்பாடுகளை மதிப்பாய்வு செய்தல் மற்றும் மாவட்ட அமைப்புகளின் இயக்குனர்களுடன் தொடர்பு வைத்தல், மாநில துணை ஒருங்கிணைப்பாளர் உறுதுணையோடு மன்றங்களை வழிநடத்தும் பொறுப்பினை மேற்கொள்வார். மாநில அளவில் ஆவணப்படுத்தும் பணியை மாநில துணை ஒருங்கிணைப்பாளர் மூலம் மேற்கொள்வார்.





அத்தியாயம் 3

# மன்றக் கூட்டங்கள்

### 3.1. அரசமைப்பு உரிமைக் கல்வி மன்ற அறிமுகக் கூட்டம்

- மாவட்ட அமைப்பின் ஆலோசனையின் படி, நெறியாளர்கள் மன்றங்களை உருவாக்குவர்.
- நெறியாளர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் முறையாக மன்ற அறிமுகக் கூட்டங்களை நடத்துவர்.

### 3.2. சேர்க்கை

- மன்ற சேர்க்கைக்கான படிவங்களை குழந்தைகளிடம் அளித்து, பூர்த்தி செய்து, முறையாகத் தொகுத்தல்
- இதற்காக வடிவமைக்கப்பட்ட கூகுள் படிவத்தை முறையாகப் பூர்த்தி செய்து, குழந்தைகளின் முழுமையான விவரங்களை சரிபார்த்து வான்முகில் அமைப்பிற்கு இணைய வழியில் சமர்ப்பித்தல்

### 3.3. மன்றப் பொதுக் குழு கூட்டம்

ஆண்டிற்கு மூன்று முறை பொதுக் குழுக் கூட்டம் நடைபெறும். அரசமைப்பு உரிமைக்கல்வி மன்றத்தில் பதிவு செய்த உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்வர். மன்ற அளவில் நடைபெறும் பொதுக் குழுக் கூட்டங்கள் நெறியாளர் மற்றும் மாவட்ட அமைப்பாளர் ஆலோசனையுடன் நடைபெறும்.

### 3.4. கூட்டத்தின் நோக்கம்

1. மன்றத்திற்கான துணைக் குழுக்களை உருவாக்குதல்
2. ஒவ்வொரு துணை குழுவிற்கும் ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்தல்
3. ஒருங்கிணைப்பாளர் இருவரை (ஆண்/பெண்) தேர்ந்தெடுத்தல்
4. ஒன்றிற்கு மேற்பட்டவர்கள் போட்டியிட்டால் வாக்குச்சீட்டு மூலம் தெரிவு செய்ய வேண்டும்
5. மன்றத் தொடக்க விழாவிற்குச் சிறப்பு அழைப்பாளர்களின் பட்டியலைத் தயார் செய்தல் (உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கல்வித்துறை அலுவலர்கள், காவல்துறையினர், வழக்கறிஞர்கள், அருகிலுள்ள பள்ளியிலிருந்து ஆசிரியர்கள், ஓய்வுப் பெற்ற அதிகாரிகள், இளைஞர் அமைப்பினர், குடிமைச் சமூக அமைப்பினர், தன்னார்வ தொண்டு நிறுவத்தினர், ஊடகத்துறையினர்)
6. அரசமைப்பு உரிமைக் கல்வி மன்ற பெயர்ப் பலகை தயார் செய்தல்

### 3.5. மன்றத் தொடக்க விழா

அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றத் தொடக்க நிகழ்வு அந்தந்த பகுதியில் நடக்க வேண்டும். பகுதியில் இருக்கும் அனைவரும் பங்கேற்கும் வகையில் ஏதாவது

விடுமுறை நாளில் உகந்த நேரத்தில் நடத்த வேண்டும். (மன்றத் தொடக்க விழாவிற்கான வழிகாட்டுதல்கள் பிற்சேர்க்கை பகுதியில் இணைக்கப்பட்டுள்ளது)

### 3.6. மன்றக் கூட்டங்கள்

(பொதுக்குழு உள்ளிட்ட கூட்டங்கள்)

1. ஒருங்கிணைப்பாளர்கள் முன்கூட்டியே உறுப்பினர்களுக்கு கூட்டம் நடைபெறும் தேதி, நேரம் பற்றி தெரிவிக்க வேண்டும்.
2. வருகைப் பதிவேட்டில் குழந்தைகளின் வருகையை பதிவு செய்ய வேண்டும்.
3. கூட்டங்கள் அனைத்திலும் அரசமைப்பு முகப்புரை, உறுதிமொழி வாசிப்பு மற்றும் மன்றப் பாடல் பாடப்பட வேண்டும்.
4. கூட்டத் தீர்மானங்கள், அறிக்கை ஆகியவற்றை உறுப்பினர்களின் ஒப்புதலுடன் நிறைவேற்ற வேண்டும்.
5. சமகால பிரச்சனைகளைத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளலாம்.
6. கூட்ட நேரம் 45 நிமிடம் முதல் 1 மணி நேரம் வரை இருக்கலாம்.
7. குழந்தை உரிமை மீறல்களை அடையாளம் கண்டு தங்கள் அளவில் தலையீடு செய்யத் திட்டமிடலாம்.

அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றத்தின் துணைக் குழுக்களுக்காக சில செயல்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மன்றமும் தங்கள் சூழலுக்கு ஏற்ப இன்னும் பிற செயல்பாடுகளை இணைத்துக் கொள்ளலாம்.



அத்தியாயம் 4

# துணைக் குழுக்களுக்கான செயல்பாடுகள்

## 4.1. கல்வி & விழிப்புணர்வுக் குழு

மன்ற உறுப்பினர்களுக்கு அரசமைப்பு உரிமைகள், மனித உரிமைகள் குறித்த அறிவையும், ஆற்றலையும் வளர்ப்பதோடு கலை வடிவங்கள், ஊடகங்கள் மூலமாக அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றம் தனது இலக்கை அடைய இத்துணைக் குழு செயல்படும்.

### மாதிரிச் செயல்பாடுகள்

1. அரசமைப்பின் அடிப்படை உரிமைகள், கடமைகள், மனித உரிமைகள், குழந்தை உரிமைகள், வாழ்க்கைத் திறன்கள், பிற உரிமைகள் தொடர்பான பயிற்சிகளையும், விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் நடத்துதல்
2. அரசமைப்பு உரிமை, குழந்தை உரிமைகள் மற்றும் சமூக பிரச்சனைகள் சார்ந்த விவாதம், கலந்துரையாடல், ஓவியம் வரைதல், வினாடி வினா போன்ற நிகழ்ச்சிகளை நடத்துதல்
3. சமூக விழிப்புணர்வுப் பாடல்களைக் கற்றுக் கொள்வதும் கற்றுக் கொடுப்பதும்
4. அரசமைப்பு உரிமைகள் பற்றி எழுதும், வாசிக்கும் பழக்கத்தை குழு உறுப்பினர்களிடம் ஏற்படுத்துதல்
5. தினசரி நாளிதழ்களிலும் நூல்களிலும் குழந்தை உரிமை தொடர்பான செய்திகளைச் சேகரித்து மன்றக் கூட்டங்களில் பகிர்தல்
6. தங்கள் பகுதிகளில் பள்ளி இடைநின்ற குழந்தைகள், குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர்கள், குழந்தைக் கடத்தல், புலம் பெயர் குழந்தைகள், மாற்றுத்திறன் குழந்தைகள் குறித்த தகவல்களைச் சேகரித்தல்



## 4.2. குழந்தை உரிமைக் கண்காணிப்பு குழு

தங்கள் பகுதிகளில் குழந்தை உரிமை மீறல்கள் குறித்து மன்றத்தின் கவனத்திற்கு தெரிய வரும் பிரச்சனைகளை கண்காணித்து உரிய முறையில் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை இக்குழு மேற்கொள்ளும்.

### மாதிரிச் செயல்பாடுகள்

1. பள்ளியில், வீட்டில், அக்கம்பக்கத்தில் நடைபெறும் உரிமை மீறல்களை அடையாளம் கண்டு, நெறியாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லுதல்
2. மன்றத்தில் உள்ள குழந்தைகள், தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் அல்லது தங்கள் பகுதிகளில் அடையாளம் காணப்பட்ட உரிமை மீறல் சம்பவங்களை நெறியாளர் வழியாக குழந்தைகள் பாதுகாப்பு அமைப்புகளிடம் தெரியப்படுத்துதல்
3. பள்ளி நிர்வாகம், பெற்றோர் - ஆசிரியர் கழகம், பள்ளி மேலாண்மைக் குழு, கிராமக் கல்விக் குழு, குடிமைச் சமூக அமைப்புகள் ஆகியவற்றுடன் குழந்தைகள் உரிமை தொடர்பான நடவடிக்கையில் இணைந்து செயல்படும்
4. குழந்தைகள் தொடர்பான பிரச்சனைகளை உள்ளாட்சி அமைப்புகளின் கவனத்திற்குக் கொண்டு செல்லுதல்
5. பிற அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்கள், குழந்தைகள் நாடாளுமன்றம், குடிமைச் சமூக அமைப்புகள் ஆகியவற்றோடு இணைந்து செயல்படுதல்
6. கிராம சபைக் கூட்டங்கள், பிற குழந்தைகள் தொடர்பான ஒன்று கூடல்கள், மாநாடுகள், கருத்தரங்குகளில் கலந்து கொள்ளுதல்





அத்தியாயம் 5

# மாதிரி நிகழ்ச்சி நிரல்

அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்கள் சிறப்பாக செயல்பட இந்த வழிக்காட்டு நெறிமுறைகள் உறுதுணையாக இருக்கும். இம்மன்ற விதிமுறைகளை நாம் மிக கவனமாகப் பின்பற்றுவதற்கான முயற்சிகளை ஆர்வத்தோடு எடுக்க வேண்டும். நாம் குழுவாக இணைந்து மேற்கொள்ள வேண்டிய பணிகளை இம்மன்ற விதிகள் சுட்டிக்காட்டுகிறது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள செயல்பாடுகள் அனைத்தும் நமது எடுத்துக்காட்டுகளாக நமக்கு சுட்டிக்காட்டும் வகையில் கொடுக்கப்பட்டுள்ளது. இதனை மேலும் விரிவாக்க வேண்டிய கூட்டுப் பொறுப்பு நம் அனைவருக்கும் உரியது. மனித உரிமைகளை நம் அன்றாட வாழ்வில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் அரசமைப்பு உரிமைகளைப் பண்பாடாக வளர்த்தெடுப்போம்.

### தொடக்க விழா மாதிரி நிகழ்ச்சி நிரல்

1. சிறப்பு அழைப்பாளரை மேடைக்கு அழைத்தல்
2. மன்றத்தை அறிமுகப்படுத்துதல்
3. ஒருங்கிணைப்பாளர்கள், துணைக் குழுக்கள் அறிமுகம்
4. மன்ற பெயர்ப் பலகையினைத் திறந்து வைத்தல் (மன்றப் பொறுப்பாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் திறந்து வைத்தல்)
5. மன்றம் தொடங்கியதன் அடையாளமாக மன்ற உறுதிமொழி, அரசமைப்பு சட்ட முகப்புரை மற்றும் குழந்தைப் பாதுகாப்புக் கொள்கையை வாசித்தல், மன்ற பாடலைப் பாடுதல்
6. அச்சிடப்பட்ட மன்றத்தின் சட்ட விதிமுறைகளைப் பங்கேற்பாளர்களுக்கு வழங்குதல்
7. சிறப்பு அழைப்பாளரின் உரை
8. கலை நிகழ்ச்சிகள்
9. நிகழ்ச்சியை நிறைவு செய்தல்

### மன்றத்தின் பிற நிகழ்ச்சிகள் (மாதிரிகள்)

1. ஊர்வலம்
2. கருத்தரங்கம்
3. விவாத அரங்கம்
4. கிராமப் பொதுக் கூட்டம்

5. அரசமைப்பு நாள், குழந்தை உரிமை நாள், அனைத்துலக மனித உரிமை நாள், அனைத்துலக பெண்கள் நாள் போன்ற சிறப்பு நாட்களைக் கடைப்பிடிப்பது
6. வினாடி வினா
7. நாடகங்கள்
8. சுவரொட்டி தயாரித்தல்
9. பேச்சு ஆற்றலை ஊக்குவித்தல்
10. ஓவியம் வரைதல்
11. கட்டுரை எழுதுதல்
12. முழக்கங்கள் இயற்றுதல்
13. விளையாட்டுக்கள்
14. இன்னும் பல

**மாதிரி நிகழ்ச்சி நடத்தும் முறை**

1. பரிந்துரைக்கப்படும் விவாதப் பொருளை முடிவு செய்தல்
2. முன்கூட்டியே திட்டமிடல்
3. தேவையான பொருட்கள் மற்றும் மனித வளம் குறித்து பட்டியல் தயார் செய்தல்
4. நடைமுறைப்படுத்தும் முறைகளை ஆலோசித்து முடிவு செய்தல்
5. நிகழ்ச்சியில் விளையும் பயன்கள் அல்லது ஏற்படுத்தும் தாக்கம் குறித்து விவாதித்தல்
6. ஆதரவு தரும் தோழமை அமைப்புகள் மற்றும் நபர்கள் குறித்த பட்டியலை முன்கூட்டியே தயார் செய்தல்



## அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றம்
## சிறந்த மன்றங்களை அடையாளம் காண்பதற்கான
# அளவுகோல்கள்
## (Indicators for Best Performing CRE Clubs)

வான்முகில்
திருநெல்வேலி

### I. மன்ற உருவாக்கம் / வடிவமைப்பு:

1. மன்றம் இயங்கும் பகுதி குறித்த முழுமையான தகவல் திரட்டு (புள்ளிவிவரம்) சேகரிக்கப்பட்டு தொகுக்கப்பட்டிருக்க வேண்டும். அவை சிறப்பாக வடிவமைக்கப்பட்டு முறையாக பராமரிக்கப்பட்டிருக்க வேண்டும்.
2. மன்ற உறுப்பினர்கள் 6 முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளாக (20 முதல் 25 வரையிலான எண்ணிக்கையில்) இருக்க வேண்டும். மன்றக் குழந்தைகளின் தன்விவரப்படிவங்கள் முறையாக பூர்த்தி செய்யப்பட்டு அதற்கான கோப்பு நேர்த்தியாக பராமரிக்கப்பட்டிருக்க வேண்டும்.
3. மன்றத் தொடக்க விழாவில், விதிமுறைகளில் குறிப்பிட்டுள்ளபடி உள்ளாட்சி மன்றத் தலைவர் / குழந்தை உரிமைப் பாதுகாப்பு அலுவலர் உள்ளிட்ட சிறப்பு அழைப்பாளர்கள் மூவராவது கலந்து கொண்டிருக்க வேண்டும்.

### II மன்றச் செயல்பாடுகள்:

1. மன்றத்தின் பெயர்ப் பலகை மற்றும் வெண்பலகை பயன்பாட்டில் இருக்க வேண்டும்.
2. விதிமுறைப்படி மன்றப் பொதுக்குழு கூட்டங்கள் உரிய கால அளவில் நடத்தப்பட்டிருக்க வேண்டும்.
3. மன்ற ஒருங்கிணைப்பாளர்களாக ஒரு ஆண் ஒரு பெண் உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டு மன்றம் சிறப்பாக வழிநடத்தப்பட்டிருக்க வேண்டும்.
4. மன்ற விதிமுறைப்படி, துணைக் குழுக்கள் முறையாக உருவாக்கப்பட்டு, இக்குழுக்களில் பாலின சமத்துவம் உறுதிசெய்யப்பட்டு, முழுமையான பங்கேற்போடு, சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்க வேண்டும்.
5. மன்றக் குழந்தைகள் இந்திய அரசமைப்பின் முகப்புரை, மன்ற உறுதிமொழி, மன்றத்தின் குழந்தைப் பாதுகாப்புக் கொள்கை ஆகியவற்றை முழுமையாக அறிந்து, பிழையின்றி உரக்க வாசிக்கும் நிலை இருத்தல் அவசியம்.
6. மன்றக் கூட்டங்களில் குழந்தைகள் முழுமையாக / தொடர்ச்சியாக பங்கேற்றிருக்க வேண்டும். மன்றங்களில் அனுசரிக்கப்படும் முக்கிய தினங்களின் நிகழ்வுகள் அனைத்திலும் எல்லாக் குழந்தைகளும் சாதிய, பாலின பாகுபாடின்றி பங்கேற்று இருக்க வேண்டும். மாற்றுத்திறனுடைய, புலம்பெயர் குழந்தைகள் இருப்பின் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப் பட்டிருக்க வேண்டும்.

7. மன்றக் குழந்தைகளை உற்சாகப்படுத்தும் விதமாக கதை சொல்ல வைத்தல், விழிப்புணர்வுப் பாடல்களை பாடவைத்தல், கலை நிகழ்ச்சிகளில் - விளையாட்டுக்களில், குழு அமர்வுகளில், சிறப்பு நிகழ்வுகளில் சாதிய, பாலின பாகுபாடின்றி முழுமையாக பங்கேற்கச் செய்தல், பகுதிகளில் சிறப்பு அழைப்பாளர்களை மன்றக் கூட்டங்களுக்கு அழைத்துப் பேசச் செய்தல் உள்ளிட்ட சிறப்பு யுக்திகள் கையாளப் பட்டிருக்கவேண்டும். மாற்றுத்திறனுடைய, புலம்பெயர் குழந்தைகள் இருப்பின் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

8. மன்றக் குழந்தைகள் நான்கு வகையான குழந்தை உரிமைகளை நன்கு அறிந்து அவை குறித்து தெளிவாக எடுத்துரைக்கும் நிலையில் பயிற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும். (வாழ்வதற்கான உரிமைகள், வளர்வதற்கான உரிமைகள், பாதுகாப்பிற்கான உரிமைகள், பங்கேற்பதற்கான உரிமைகள்)

9. மன்றத்தின் இலக்கு, நோக்கங்கள் குறித்து அனைத்து மன்றக் குழந்தைகளும் தெரிந்து, தெளிவாக எடுத்துரைக்கும் நிலையில் பயிற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

10. தினசரி செய்திதாள் / காட்சி ஊடகங்களில் வரும் குழந்தை உரிமைகள் தொடர்பான செய்திகளைச் சேகரித்து, மன்றக் கூட்டங்களில் குழந்தைகள் விவாதித்திருக்க வேண்டும். இவ்விவாதங்கள் நடைபெற்றதற்கான சான்றுகள் மன்றத்தில் ஆவணப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

11. மன்றம் இயங்கும் பகுதியில் குழந்தைகள் சார்ந்த பிரச்சனைகள் - பகுதிசார் பிரச்சனைகளைக் கண்டறிந்து, அவற்றிற்கு தீர்வு காணும் வகையில் உரிய தலையீடுகளை இணைந்து மேற்கொள்ள முயற்சி செய்திருக்கவேண்டும். மாற்றுத்திறனுடைய, புலம்பெயர் குழந்தைகள் இருப்பின் அவர்களுடைய பங்கேற்பும் உறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும். அதற்கான சான்றுகள் மன்றத்தில் ஆவணப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

### III மன்ற ஆவணங்கள் பராமரிப்பு:

1. மன்றக் குழந்தைகளின் “வருகைப் பதிவேடு” முறையாக பராமரிக்கப் பட்டிருக்க வேண்டும்.

2. “மன்றக் கூட்ட அறிக்கைப் பதிவேடு” முழுமையான தகவல்களோடு பதிவு செய்யப்பட்டு சிறப்பாக பராமரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

3. மன்ற நெறியாளர்களின் “மாதாந்திர அறிக்கைகள்” விரிவாக எழுதப்பட்டு அவை நேர்த்தியாக கோப்பில் / பதிவேட்டில் பராமரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

4. “மன்றப் பார்வையாளர் பதிவேடு” முறையாக பராமரிக்கப்பட்டிருக்க வேண்டும். (மன்றத்திற்கு வரும் முக்கிய விருந்தினர்கள், அலுவலர்களால் பதிவேட்டில் எழுதப்பட்டிருக்கும் கருத்துகள் அடிப்படையில் இப்பதிவேடு மதிப்பிடப்படும்.)

5. மன்றச் செயல்பாடுகள், குழந்தைகளின் படைப்புகள் தொடர்பான அனைத்து ஆவணங்களும் நேர்த்தியாக பராமரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

6. மன்றச் செயல்பாடுகள் தொடர்பான புகைப்படங்கள், பத்திரிக்கை / ஊடகச் செய்திகள் முறையாக ஆவணப்படுத்தியிருக்க வேண்டும்.

## IV. பாடநூல் சார்ந்தவை:

### A. இந்தியக் குடிமக்களாகிய நாம் - பாடநூல் 1

1. மன்றக் குழந்தைகள் பாடங்களின் நோக்கங்களை முழுமையாக உள்வாங்கியிருக்க வேண்டும்.

2. பாடநூலில் உள்ள 8 பாடங்களும் முழுமையாக நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஒவ்வொரு பாடத்தின் பயிற்சிப் பகுதிகளை (சொல் விளையாட்டு, கட்டுரை எழுதுதல், கவிதை உருவாக்கல், மேடைப்பேச்சு, நாடகமாக நடித்தல், பட்டிமன்றம் நடத்துதல், உரக்க வாசித்தல், சரியான இணையைத் தேர்வு செய்தல், படம் வரைந்து கதை சொல்லுதல், குழுவாக கலந்துரையாடுதல், ஏட்டிக்குப் போட்டி மற்றும் பாடநூலில் உள்ள பிற பயிற்சிகளையும்) முழுமையாக செய்து முடித்திருக்க வேண்டும். இதற்கான சான்றுகள் மன்றத்தில் ஆவணப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

### B. இந்தியக் குடிமக்களாகிய நாம் - பாடநூல் 2

மேற்சொன்ன அனைத்து அளவுகோல்களும் இரண்டாவது பாடநூலுக்கும் பொருந்தும்.

### C. வாண்டுகள் பயணம்

1. பாடநூலில் உள்ள எட்டு பாடங்களும் முழுமையாக நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஒவ்வொரு பாடத்தின் பயிற்சிப் பகுதிகளை முழுமையாக செய்து முடித்திருக்க வேண்டும். இதற்கான சான்றுகள் மன்றத்தில் ஆவணப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

2. ஊரைச் சுற்றிப் பார்ப்போம் பாடத்தின் மூலம் கிராம / பகுதி சார் வரைபடம் தயார் செய்திருக்க வேண்டும். பகுதி / கிராமத்தைப் பற்றிய பொதுத் தகவல்களை குழந்தைகள் அறிந்திருக்க வேண்டும்.

3. கிராம சபைக் கூட்டத்தில் ஆண்டிற்கு இரண்டு முறையாவது மன்றக் குழந்தைகள் பங்கேற்றிருக்க வேண்டும். இதற்கான ஆவணச்சான்று இருக்க வேண்டும். மன்றத்தில் மாதிரி கிராம சபைக் கூட்டம் நடத்தி பகுதி சார் பிரச்சனைகள் குறித்து விவாதம் செய்யபட்டிருக்க வேண்டும்.

### D. குழந்தைகளுக்குள் ஏற்பட்ட சிந்தனை மாற்றம் / தாக்கம்

அரசமைப்பு மதிப்பீடுகளை இப்பாடநூல் வழியாக மன்றக் குழந்தைகள் உள்வாங்கியதை வெளிப்படுத்தும் சிறப்புச் செயல்பாடுகள், ஏற்பட்ட சிந்தனை மாற்றம் போன்றவற்றை உறுதிப்படுத்தும் நிகழ்வுகள் (குழந்தைகளின் தனிப்பட்ட வாழ்விலும், அவர்கள் குடும்பத்திலும் ஏற்பட்ட தாக்கங்கள்) எழுத்துப்பூர்வமாக ஆவணப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

பின்குறிப்பு:

மேலே குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டுக்கான அளவுகோல்களை நிர்ணயம் செய்யும் போது கீழ்க்கண்ட இரண்டு அம்சங்களும் கணக்கில் கொள்ளப்படும்.

**1. குழந்தைகளின் திறன் சார்ந்த விசயங்களை தெரிந்து கொள்ளுதல்:**

மன்றச் செயல்பாடுகளின் விளைவாகவும், பாடநூல்களை உள்வாங்கியதன் மூலமும் குழந்தைகள் பல்வேறு திறன்களை பெற்றிருப்பார்கள். அவர்களிடம் மாற்றங்கள் நிகழ்ந்திருக்கும். அவை கீழ்காணும் வகையில் மதிப்பீடு செய்யப்படும்.

- குழந்தைகளின் ஆளுமைத் திறன் அவர்களின் செயல்கள் மூலம் வெளிப்பட்டிருப்பதற்கான ஆவணச் சான்றுகள் மன்றத்தில் இருக்க வேண்டும் (கிராமசபைக் கூட்டத்தில் பங்கேற்று மனுக்கள் சமர்ப்பிப்பது, அரசு அலுவலர்களை அலுவலகம் சென்று சந்திப்பது).
- சமூக விழிப்புணர்வுப் பாடல், கதை, கவிதை, பேச்சு, கட்டுரை, ஓவியம், நாடகம் போன்ற தனித்திறன்களை குழந்தைகள் வெளிப்படுத்துவதன் மூலம் அறியலாம்.
- முக்கிய தினங்களில் நடக்கும் நிகழ்ச்சிகளில், பள்ளிகளில் மற்றும் வேறு பொது நிகழ்வுகளில் குழந்தைகள் பங்கேற்று சான்றிதழ், பரிசு பெற்றிருப்பதன் மூலம் அறியலாம்.

**2. மக்களிடம் ஏற்பட்ட தாக்கம் அறிதல்:**

- மன்றத் தொடக்க விழா நடத்தப்பட்டதன் விளைவாக பகுதிசார் மக்கள் அனைவரும் அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றம் குறித்து அறிந்திருப்பார்கள்.
- உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள்/அரசு அலுவலர்கள் / குழந்தைப் பாதுகாப்பு அலுவலர்கள் போன்றோர் மன்ற நிகழ்வுகளில், செயல்பாடுகளில் பங்கேற்பதன் மூலம் மன்றத்தைப் பற்றி நன்கு அறிந்திருப்பார்கள்.
- மன்றக் குழந்தைகள் கிராம சபைக் கூட்டங்களில் கலந்து கொண்டு முகப்புரை வாசித்தல், கோரிக்கைகளை முன்வைத்தல் மூலம் உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உள்ளிட்டோர் அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களின் செயல்பாடுகளை அறிந்திருப்பார்கள்.
- அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றம் சார்பாக நடத்தப்படும் முக்கிய தினங்கள் அனுசரிப்பு நிகழ்ச்சிகளில் பகுதி சார் பிரதிநிதிகள், பள்ளி ஆசிரியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், மகளிர் சுய உதவிக் குழுப் பொறுப்பாளர்கள் மற்றும் பகுதிசார் பொதுமக்கள் கலந்து கொண்டு அவர்களின் ஒத்துழைப்பை சிறப்பாக வழங்கியிருப்பார்கள்.




திருச்சியில் 2021ஆம் ஆண்டு செப்டம்பர் 21 - 23 நாட்களில் நடைபெற்ற அரசமைப்பு உரிமைக் கல்வி திட்ட நெறியாளர்களுக்கான மூன்று நாள் பயிற்சியில் பங்கேற்ற நெறியாளர்கள், இயக்குநர்கள், மையக்குழு உறுப்பினர்கள்